Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மயிலம் முருகன் பிள்ளைத் தமிழ்



ஸ்ரீ பாலசித்தர்

ஸ்ரீ வள்ளி தெய்வானை உடனுறை ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி

சிவஞானபாலய சுவாமிகள்

மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளியீடு எண் : 84

மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்

ஆசிரியர்
வ. வைத்திய நாத தேசிகர்

குறிப்புரை
வித்துவான் மேலூர் வீ. குமாரசாமி அய்யர்
மயிலம் – பொம்மபுர ஆதீனப் புலவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ.எண் **நூல் குறிப்பு**

1. தலைப்பு	:	மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்
2. நூலாசிரியர்	:	வ. வைத்தியநாத தேசிகர்
3. குறிப்புரை	:	வீ. குமாரசாமி
4. பதிப்பு	:	முதற்பதிப்பு 2013
5. உரிமை மற்றும் வெளியீடு	:	மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம் - 604 304 பொம்மையபாளையம் - 605 104
6. பொருள்	:	இலக்கியம்
7. தாள்	:	13.7 ஷேசாயி
8. அளவு	:	டெம்மி
9. எழுத்து	:	12.5
10. பக்கங்கள்	:	224
11. விலை	:	135.00
12. படிகள்	:	500
13. அச்சிட்டோர்	:	சுபம் பிரிண்டர்ஸ், சிதம்பரம் - 608 001.

ISBN : 13-978-81-926955-1-8

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ பால சித்த குருவே போற்றி

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க

குருமரபு வாழ்த்து

பரமசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருக்கயிலாய பரம்பரை
மயிலம் பொம்மபுர ஆதீனம்
மயிலம் திருமடம்

ஸ்ரீ வள்ளி தெய்வானை உடனுறை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



திருக்கயிலாய பரம்பரை

மயிலம் பொம்மபுர ஆதீனம்

மயிலம் திருமடம்

ஆதீன குரு முதல்வர் ஸ்ரீ பாலசித்தர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



திருக்கயிலாய பரம்பரை

மயிலம் பொம்மபுர ஆதீனம்

பொம்மைய பாளையம் திருமடம்

இரண்டாம் பட்டம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஆதி சிவஞான பாலய சுவாமிகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருக்கயிலாய பரம்பரை

மயிலம் பொம்மபுர ஆதீனம்

பத்தொன்பதாம் பட்டம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

மயிலம் - பொம்மபுர ஆதீனத்தைத் தோற்றுவித்தருளியவர் மற்றும் அவர்தம்வழி குரு மரபினர்

வ.எண்	குருமகா சந்நிதானங்கள்	அருளாட்சி முறைமை	அருளாட்சி செய்த ஆண்டுகள்	குருபூசை நட்சத்திரம்
1	ஸ்ரீ பாலசித்தர்	(ஆதீனத்தை தோற்றுவித்த முதல் குரவர்) 500 ஆண்டுகளுக்குமேல்		ஆனி — திருவாதிரை
2	ஆதிசிவஞானி தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	2ஆம் பட்டம் கி.பி.12 — 17-ஆம் நூற்றாண்டு வரை		வைகாசி — விசாகம்
3	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	3ஆம் பட்டம் குன்னம்பாளையம்	கி.பி. 1645 — 1695	தை - திருவாதிரை
4	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	4ஆம் பட்டம் சிதம்பரம்	கி.பி. 1695 — 1727	கார்த்திகை - திருவாதிரை
5	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	5ஆம் பட்டம் கந்தப்பனூர்	கி.பி. 1727 — 1733	மாசி — சதயம்
6	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	6ஆம் பட்டம் கரையாம்புத்தூர்	கி.பி. 1733 — 1746	வைகாசி — பூசம்
7	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	7ஆம் பட்டம் மாத்தூர்	கி.பி. 1746 — 1761	மாசி — பூராடம்
8	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	8ஆம் பட்டம் குமாரசார்வாய்	கி.பி. 1761 — 1770	புரட்டாசி - கார்த்திகை
9	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	9ஆம் பட்டம் சிவகுன்றம்	கி.பி. 1770 — 1773	வைகாசி - மூலம்
10	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	10ஆம் பட்டம விருத்தாசலம்	கி.பி. 1773 — 1784	மார்கழி — சித்திரை

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

மயிலம் - பொம்மபுர ஆதீனத்தைத் தோற்றுவித்தருளியவர் மற்றும் அவர்தம்வழி குரு மரபினர்

வ.எண்	குருமகா சந்நிதானங்கள்	அருளாட்சி முறைமை	அருளாட்சி செய்த ஆண்டுகள்	குருபூசை நட்சத்திரம்
11	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	11ஆம் பட்டம் சிதம்பரம்	கி.பி. 1784 — 1809	புரட்டாசி - சுவாதி
12	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	12ஆம் பட்டம் கல்யாணபட்டினம்	கி.பி. 1809 — 1817	வைகாசி — பூரட்டாதி
13	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	13ஆம் பட்டம் விருத்தாசலம்	கி.பி. 1871ல் 18 நாட்கள் மட்டும்	வைகாசி — சுவாதி
14	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	14ஆம் பட்டம் சிதம்பரம்	கி.பி. 1871 — 1843	புரட்டாசி - ரேவதி
15	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	15ஆம் பட்டம் நல்லாற்றூர்	கி.பி. 1843 — 1887	சித்திரை — புனர்பூசம்
16	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	16ஆம் பட்டம் நல்லாற்றூர்	கி.பி. 1887 — 1916	ஆடி — பூராடம்
17	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	17ஆம் பட்டம் நல்லாற்றூர்	கி.பி. 1916 — 1928	மாசி — அசுவினி
18	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	18ஆம் பட்டம் சிதம்பரம்	கி.பி. 1928 — 1965	புரட்டாசி - ஆயில்யம்
19	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	19ஆம் பட்டம் பொம்மையபாளையம்	கி.பி. 1965 — 2011	ஆனி — உத்திராடம்
20	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	20ஆம் பட்டம் மயிலம்	கி.பி. 2011 முதல்	

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்

மயிலம் 604 304 & பொம்மையபாளையம்-605 104
விழுப்புரம் மாவட்டம்
தொலைபேசி எண்:மயிலம்- 04147 – 241223;
பொம்மையபாளையம் 0413-2655188

மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் 20 ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் அருளிய ஆசியுரை

திருக்கயிலாயத்தில் மேற்கு வாயில் கணத்தலைவரான சங்குகன்னரை சிவபெருமான் பூவுலகில் வேத ஆகமங்களையும் வீரசைவ சமய நெறிகளையும் வளர்க்குமாறு ஆணையிட்டார். அதனை ஏற்ற சங்குகன்னர், கிழக்கு கடற்கரையில் பத்தாண்டு அகவையுடை பாலகனாய் பிரமபுரம் எனப்படும் பொம்மபுரத்தில் சித்துக்கள் நிறைந்த பாலசித்தராய் யோனிவாய்ப்படாமல் தோன்றினார்.

பொம்மபுரத்தில் திருமடம் அமைத்துக் கொண்டு பலருக்கும் குரு-இலிங்க-சங்கம வழிபாட்டினையும் சடுத்தல சித்தாந்தத்தையும் தெளிவுறுத்தி வந்தார். அங்ஙனம் இருக்கும் காலத்தில் நாரத முனிவர், முருகப்பெருமான் திருவருள் பெற மயிலமலையைப் பற்றி 'பாலசித்தருக்கு கூறினார்.

பாலசித்தர் மயிலமலையடைந்து திருமடம் ஒன்று அமைத்துக் கொண்டு முருகப்பெருமான் திருவருள் வேண்டி நெடுங்காலம் தவமியற்றி வந்தனர். பாலசித்தருக்கு அருள்புரியுமாறு முருகப்பெருமானிடம் வேண்டிய வள்ளி, தெய்வநாயகியர் முருகப்பெருமானின் சினத்திற்கு ஆட்பட்டதனால் சித்த கன்னிகையர்களாய் மயிலமலையில் பாலசித்தரின் புத்திரிகளாய் இருந்து வந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முருகப்பெருமான் பாலசித்தருக்கு அருள்புரிவான் வேண்டி, மயிலமலையடைந்து சித்தருடன் போர் புரிந்து தான் யார் என்பதனை உணர்த்தினர். சித்தர் தன் பாதுகாப்பில் இருந்த சித்த கன்னிகையரை முருகப்பெருமானுக்கு மணமுடித்து வைத்தார்.

முருகப்பெருமான் பாலசித்தர் வேண்டிக் கொண்டதற்கு இணங்க அவரது சீடராகிய சிவஞானிக்கு சந்நியாசாச்சிரமம் தந்து ஆச்சாரிய அபிடேகமும் ஞான உபதேசமும் புரிந்து தமது அம்சத்திலே ஓரம்சம் அவரிடத்திலே பதியும்படி செய்து பாலை உணவாகக் கொண்டு சீட பரம்பரையோடு சிவஞான தேசிகராய்த் திகழ திருவருள் பாலித்தார்

சிவயோகப் பெருவாழ்வு வாழ்ந்த பாலசித்தர் ஓர் ஆனி மாதத் திருவாதிரை நன்னாளில் தம் விருப்பப்படியே தம்மால் எழுந்தருளச் செய்து வழிபாடாற்றி மகிழ்ந்த மணக்கோல முருகனின் வலப்பக்கத்தில் சிவயோக சமாதி கூடினர்.

'கயிலை போல் சிறந்த மயிலமால் வரையும்' என்றும், 'மந்திரம் ஒன்று ஆயிரமாய் வளர்ந்து பயன், தந்திடும் ஒண்மயிலைத் தண்மலை' என்றும், நம்ஆதீன முதன்மைச் சீடராய்த் திகழ்ந்த கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகள் மயிலமலையையும் 'சிகரமணி மயிலைமலை முருகனுடன் அமரும் இறை' என்றும் 'கயிலை மலை மீது இருந்த காட்சி போல் வந்து; மயிலைமலை மீது இருக்கும் வள்ளல்' என்றும் சிவஞானியையும் போற்றிப் பரவியுள்ளார்.

மேலும் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், மயிலாசலக் கலம்பகம் பாடிய தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், திருவாரூர்-இலக்கண விளக்கம் வ.வைத்தியநாத தேசிகர், பாரதிதாசனார், 'பாலசித்தர் பாமாலை' 'சிவஞான பாலய தேசிகமாலை' பாடியுள்ள நம் ஆதீனப்புலவர் மகாவித்துவான். ஆ. சிவலிங்கனார் முதலியவர்கள் மயிலம் முருகப்பெருமான் மீதும் அவனருள் பெற்ற ஆதீன முதற்குரு ஸ்ரீபாலசித்தர், ஆதிசிவஞானி மீதும் பாமாலை சூட்டியவர்களாவர்.

மேற்குறிப்பிட்டுள்ள புலவர்களுள் திருவாரூர்-இலக்கண விளக்கம் ஸ்ரீ வ.வைத்தியநாத தேசிகர், மயிலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முருகப்பெருமான் மீது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான "பிள்ளைத்தமிழ்" என்னும் அரிய நூலினை இயற்றியுள்ளார். இவர் முருகப்பெருமான் மீது பாடியதோடு அமையாது முருகப்பெருமானால் அட்டமாசித்தியும் சின்மயாநந்த நிலையும் எண்ணெண்கலையும் உள்ளுணர்வினின்று உணர்த்தப் பெற்ற ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் மீது "பாசவதைப்பரணி" என்னும் ஒப்பற்ற நூலினையும் இயற்றியுள்ளார்.

மயிலம் ஸ்ரீ முருகன் பிள்ளைத்தமிழ் மயிலம் பொம்மபுர ஆதீன திருமடத்து பதினெட்டாவது குருமூர்த்தியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளால் 18-05-1935 இல் வெளியிடப் பெற்றது.

மயிலம் பொம்மபுர ஆதீன ஞான பீடத்து எழுந்தருளி குருமரபை அலங்கரித்த 19-ஆம் பட்டம் மகா சந்நிதானம் அவர்கள் நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாசர் நூல்களை உரையுடன் வெளியிடத் திட்டமிட்டு அப்பணி மூலம் உரை நூல்கள் வெளியிட்டருளினார்கள். பாலசித்தருக்கும் ஆதிசிவஞான பாலய சுவாமிகளுக்கும் திருவருள் பாலித்த மயிலம் முருகப் பெருமான் மீது புலவர் பெருமக்கள் இயற்றிய நூல்களையும் வெளியிட சித்தம் கொண்டார்கள். மகா சந்நிதானம் அவர்களின் சித்தம் இந்நூல் வெளியீட்டின் மூலம் நிறைவெய்திற்று. சுவாமிகள் கலந்து கொண்ட விழாக்களிலெல்லாம் துதிப்பாடல்கள் பாடியபின் உரையாற்றுதல் வழக்கமாகும்.

அவ்வாறு தமக்கே உரிய இனிய குரலில் இசையுடன் மயிலம் முருகன் பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவ முதல்பாடலான, "பால்மாரி பெய்து உடல் வழிந்தென்ன—" எனத்தொடங்கும் பாடலைப் பாடுவார்கள். இதன்மூலம் சுவாமிகள் இந்நூலின்பால் கொண்ட பெருவிருப்பினை நன்குணரலாம்.

இந்நூல் பொருள் நலமும் கற்பனைச் சிறப்பும் சந்தச் சிறப்பும் வீரசைவ சமய சித்தாந்த கருத்துகளையும் முருகப்பெருமான் திருவிளையாடல்களையும் சிவஞான பாலய தேசிகருக்கும் முருகப்பெருமானுக்கும் உள்ள தொடர்பினை விளக்குவதாகவும் கொண்டிலங்குகின்றது. திருப்புகழ் பாடிய அருணகிரி நாதரின் சந்தத்தமிழ்ப் பாடல்களின் சாயல் காணப்படுகிறது. இதனை, "மதுரம் பொழியும் அருணகிரி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாக்கினிடத்தும்—" எனக் குறிப்பிட்டுள்ளதால் அறிய முடிகிறது. மெய்யன்பர்கள் நாள்தோறும் இந்நூலினை முருகப்பெருமானைப் போற்றித் துதித்தலுக்கு உரியதாகக் கொள்ளலாம்.

இந்நூலினை மயிலம் பொம்மபுர ஆதீனம், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம், பொம்மையபாளையம் வீரசைவ பெரிய மடத்தில் ஸ்ரீ விஜய ஆண்டு வைகாசித் திங்கள் 10 ஆம் நாள் வெள்ளிக் கிழமை (24.05.2013) அன்று நடைபெறுகின்ற ஆதி சிவஞான பாலய சுவாமிகள் மகா குருபூசையில் வெளியிடப் பெறுகின்றது.

இந்நூலினுக்கு நம் ஆதீனப் புலவரும் வீரசைவ தத்துவ வித்தகருமான மேலூர் வித்துவான் திரு.வீ.குமாரசாமி அய்யர் அவர்கள் சிறந்த குறிப்புரை எழுதியுள்ளார்கள். அவர்களுக்கும் இந்நூல் ஆதீன வெளியீடாக வெளிவர அரும்பணி ஆற்றிய மயிலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மேல்நிலைப் பள்ளி மேனாள் தலைமையாசிரியர் வித்துவான் திரு.கு.இலிங்கராசு எம்.ஏ;எம்.எட். அவர்களுக்கும் மயிலம் ஸ்ரீ மத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை மற்றும் அறிவியல் கல்லூரி நூலகர் திரு. க.நக்கீரன் எம்.ஏ.;பி.எல்.ஐ.எஸ் அவர்களுக்கும் அச்சுப் பணியினை மேற்கொண்ட சிதம்பரம், சுபம் ஆப்செட் பிரிண்டர்ஸ், உரிமையாளர் அவர்களுக்கும் எல்லா நலன்களும் அமைய மயிலம் ஸ்ரீ முருகப்பெருமான் திருவருளையும் ஆதீன ஆதிகுரு ஸ்ரீ பாலசித்தர், ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் குருவருளையும் சிந்திக்கின்றோம்.

ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள்
20ஆம் பட்டம்
மயிலம் பொம்மபுர ஆதீனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

முருகன் துணை

குறிப்புரை ஆசிரியர் உரை

மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் என்னும் இவ்விழுமிய நூலின் ஆசிரியர் சோழநாட்டிலே திருவாரூரில் அபிடேகத்தார் மரபில் வன்மீக நாத தேசிகரின் மைந்தராய்த் தோன்றிய வைத்தியநாத நாவலராவர். இவர் காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டென்பர். இவருடைய தந்தையாரும் இவர்தம் வழித்தோன்றல்களும் சிறந்த தமிழ்ப் புலவர்களாவர். ஆதலின், இந்நூலாசிரியர் தமிழ் வளர்த்த மரபினர் என்று கூறுதல் சாலும்.

இவர் தமிழ் – வடமொழியாகிய இரு மொழிகளிலும்ஒத்த பெரும்புலமையுடையவர். இவர் இயற்றிய தமிழ் ஐந்திலக் கணங்களையும் நுவலும் இலக்கணவிளக்கமென்னும் இயல் நூலொன்றே இவரது அளப்பருந் தமிழ்ப் புலமைக்குப் போதிய சான்றாகும். மற்றும், நல்லூர்ப் புராணம், வாட்போக்கிப் புராணம், திருவாரூர்ப்பன்மணிமாலை, பாசவதைப்பரணி என்னும் நூல்களும் இவர் இயற்றியனவாம். படிக்காசுப் புலவர், ஒப்பிலாமணிதேசிகர், சதாசிவதேசிகர், திருவேங்கடநாதர் முதலியோர் இவருடைய மாணவர்களாவர்.

ஆசிரியர், மயிலம் -பொம்மபுரம் வீரசைவ ஆதீனத் தலைவராய்த் தம் காலத்து விளங்கிய சுவாமிகளின் தொடர்பைப் பெற்ற ஞான்று ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட பாசவதைப் பரணி யென்னும் சொற் சுவையும் பொருட்சுவையும் சமயக் கருத்துகளும் பொதிந்த இலக்கிய நூலை இயற்றியுள்ளார். அந்நூலை ஒருமுறை படிப்வரும் அச்சுவாமிகளுடைய சிவாநுபவ நிலையையும் திருமடத்தின் பெருமையையும் ஆசிரியரது உள்ளம் அச் சுவாமிகளின் திருவருட்பெருக்கில் திளைத் திருந்தமையையும் எளிதில் அறிதல் கூடும்.

பின்னர், ஆதீனத்தைச் சார்ந்த மயிலமலையில் திருக்கோவில் கொண்டெழுந்தருளியுள்ள முருகப்பெருமான்பால் இயல்பாகத் தாம் கொண்ட பேரன்பாலும், முருகப் பெருமான் தம்மீது "சந்தத் தமிழ் பாடுக" எனப் பணித்தமையாலும் பிள்ளை தமிழாகிய இந்நூலைப் பாடியுள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

இதனை இந்நூலில் வரும்

"கதலிக் கனியுஞ் சர்க்கரை யுஞ்செங்
கன்னற் பொழிபாலுங்
கருணையின் அருள்செய்திவைபோ லச்சுவை
கனிதந் தினிதாயே
மதுரித் தமுதொழு கும்படி நம்மேல்
வடிதமிழ் பாடுகென
வரமுத வியமயி லைக்கிரி வேளை" (காப்பு செய். 10)

"சந்தத் தமிழ்பா டுதற்குவரந்
தந்தாய் வருக" (வாரானை - செய். 8)

என்னும் அடிகள் தெளிவுறுத்தும்

ஆசிரியர் இந்நூலில் காப்புப் பருவம் மூன்றாம் செய்யுளிலும் ஏனைய ஒன்பது பருவங்களில் முதற்செய்யுளாக வுள்ளவற்றிலும் சிவஞானபாலைய தேசிகருக்கும் முருகப் பெருமானுக்குமுள்ள தொடர்பினை விளக்கியுள்ளார். அச் செய்யுள்கள், முருகப்பெருமான் சிவஞானிக்கு நான்மறைப் பொருளை விளக்கியருளியது, அஸ்த மஸ்தக சையோக தீட்சை புரிந்தருளியது, ஒரு மொழியின் உண்மைப் பொருளை விளக்கியருளியது, உலகோரை உய்விக்க அபரஞானம் - பர ஞானங்களை சிவஞானிக்கு உண்ணின்று உணர்த்தி யருளியது, திருத்தணிகை முதலிய திருத்தலங்களில் முருகப்பெருமான் குடிகொண்டிருந்தல் போலச் சிவஞானியின் சிந்தையிலுங் குடிகொண்டிருத்தல், வான் மாரி பெய்தன்ன நிதிமாரி பெய்து இரவலரைப் புரக்கும் சிவஞானியின் வண்மை ஆகியவற்றை விளக்கிக் காட்டுகின்றன.

ஆசிரியர் பொருணலமும் ஓசையின்பமும் செறியப் பாப்புனையும் அருந்திறல் பெற்றதிருந்ததோடு சங்கச் சான்றோர் இலக்கியங்களிலும் சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் சிவப்பிரகாச முனிவருடைய செந்தமிழ் நூல்களிலும் ஆழ்ந்த பயிற்சியுடையவராதலின் அவ்வந் நூல்களின் மணம் ஆங்காங்கே கமழுகின்றது. வடமொழியில் தேர்ந்த புலமை பெற்றிருந்தமையால் வடசொற்றொடர்கள் இவரது நாவில் தாமாக முன்வந்து செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. முருகனுடைய திருவிளையாடல்களை அறிவிக்கும் கந்தபுராண வரலாறுகள் யாண்டும் விரவியுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இங்ஙனம் ஆசிரியரது புலமைத்திறம் யாவும் ஒருங்கே ஒருருக் கொண்டாலொத்த இவ்வரிய பிள்ளைத்தமிழ் புலவர் பெருமக்களுக்குப் பெரு விருந்தாகுமென்பது திண்ணம்.

இத்தகு அரிய நூலை மயிலம் - பொம்மபுரம் ஆதீன கர்த்தராய் விளங்கி அருட்செங்கோலோச்சிய பதினெட்டாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் ஏட்டுப் பிரதியைக் கொண்டு 18.5.1935 இல் பதிப்பித்து வெளியிட்டார்கள். இப்பொழுது இந்நூல் குறிப்புரையுடன் வெளிவருகின்றது. அன்பர்கள இந்நூலைப் பொருளுணர்ந்து ஓதி மயிலம் - முருகப்பெருமானுடைய திருவருளையும் ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகளின் அருணோக்கத்தையும் பெற்றுய்வார்களாக.

இவண்

வீ. குமாரசாமி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பிள்ளைத்தமிழ் விளக்கம்

தமிழ் வழங்கும் பெருநிலப்பரப்பில் வாழும் மக்கள் தம் உள்ளத்தைப் பண்படுத்தவும் இன்புறுத்தவும் புலவர்கள் வகுத்துக் கொண்ட நூற்றுறைகள் பலவாம். அவற்றுள் பிள்ளைத் தமிழ் என்பது ஒன்றாம். இதனைத் தொண்ணூற்றாறு வகைத் தாய சிற்றியலக்கியங்களுள் ஒன்றென்பர். இந்நூல் கற்று வல்ல புலவர்களால் அணிநலமும் சந்த இன்பமும் பொருந்த ஆசிரிய விருத்தப் பாக்களால் கடவுளரையேனும் ஆசிரியரையேனும் வள்ளல்களையேனும் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு அவர்பால் குழந்தைகளுக்குரிய பத்துப் பருவச் செயல்களையும் அமைத்துப் பாடப் பெறுவதாம். அங்ஙனம் பாடப் பெறும் பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும்.

ஆண்பாற் பிள்ளைத் தமிழாயின் காப்பு - செங்கீரை - தால் - சப்பாணி - முத்தம் - வாரானை - அம்புலி - சிறுபறை - சிற்றில் - சிறுதேர் ஆகிய பருவங்களையும் பெண்பாற் பிள்ளைத் தமிழாயின் இறுதியில் நின்ற மூன்று பருவங்களை விலக்கி அவற்றிற் கீடாகக் கழங்கு - அம்மானை - ஊசல் ஆகிய பருவங்களை அமைத்துக் கொள்வர். பருவம் ஒவ்வொன்றிற்கும் பத்துப்பாடல்கள் அமைத்தல் பெரு வழக்கு. மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழதாலின் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய பத்துப்பருவங்களையும் இந்நூலிற் காணலாம்.

பருவ விளக்கம்

1. காப்புப் பருவம் : பிள்ளைத்தமிழாசிரியர் தாம் கொண்ட பாட்டுடைத் தலைவனையோ, தலைவியையோ குழந்தை யாகக் கருத்திற் கொண்டு, தாய்மார்கள் திருமால் முதலிய தெய்வங்கள் இக்குழந்தைக்கு எவ்வித வூறும் நேராவண்ணம் காக்க என வேண்டியக் கோடலாகப்பாடுவதாம். "குழந்தை பிறந்த ஏழாவது நாள் காப்பிடலென்னும் வழக்கம் ஒன்றுண்டு. அதனையொட்டி இலக்கிய வழக்கிலமைந்து இக்காப்புப் பருவம்" என்பர். உ.வே.சா.

2. செங்கீரைப்பருவம் : குழந்தை ஒரு காலை மடக்கி ஒரு காலை நிமிர்த்தி இரு கைகளையும் தரையிற் பதியவைத்து முகத்தை மேனிமிர்த்தாடுதல் இப்பருவத்தின் செயல்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்பொழுது குழந்தை ங்க் ங்க் என்று கூறுதலைக் கேட்டுத் தாய்மார் உவப்பர்.

3. தாலப்பருவம்: இது குழந்தையைத் தொட்டிலிலிட்டு தாய்மார் நாவினால் பாடும் பாட்டுடன் அத்தொட்டிலை ஆட்டும்பருவம்.தால் - நா. தாலாட்டுதல் - தாலே தாலேலோ என்று கூறி நாவை யசைத்தல்.

4. சப்பாணிப் பருவம் : இது குழந்தையை இருகைகளையும் சேர்த்துக் கூட்டி ஓசையை யெழுப்புமாறு வேண்டுதலாம். பாணி - கை.

5. முத்தப்பருவம் : இது குழந்தையை முத்தந்தருக என்று தாயாரும் பிறரும் வேண்டும் பருவம். முத்தம் - அதரம்.

6. வாரானைப் பருவம் (வருகைப் பருவம்): இது தாய்மார் குழந்தையை வருக வருக என்று அழைக்கும் பருவம்.

7. அம்புலிப்பருவம் : இது குழந்தையைத் தாய்மார் ஒக்களையில் வைத்துக் கொண்டு அக்குழந்தையுடன் சந்திரனை நோக்கி "விளையாட வா" என்று சாம - பேத - தான - தண்டமுறை கூறி அழைக்கும் பவரும். இவை முறையே அம்புலிக்கும் பாட்டுடைத் தலைவருக்கும் ஒப்புமை கூறுதலும், வேற்றுமை கூறுதலும், விளையாடவரின் அம்புலிக்கு வரும் நன்மையைக் கூறுதலும், வாராவிடின் நேரும் துன்பங்களைக் கூறுதலுமாம்.

8.சிறுபறைப்பருவம்: இது குழந்தையைத் தன்கையால் சிறுபறையை முழக்குமாறு வேண்டும் பருவம்.

9.சிற்றிற் பருவம் : சிறுமியர் தெருவில் சிறுவீடமைத்து விளையாடுங்கால் அதனைக் குழந்தை சென்று தன் காலால் அழித்து விடும். அவ்வாறு அழியாதிருக்க சிறுமியர் வேண்டிக் கொள்ளும் பருவம்.

10. சிறுதேர்ப்பருவம் : இது குழந்தையைச் சிறுதேரினை உருட்டி விளையாடுமாறு வேண்டும் பருவம்.

இவ்வாறு பத்துப் பருவங்களையும் புலவர்கள் பாட்டுடைத் தலைவரது இயல்பிற்கேற்பப் பாடுவர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மயிலம் முருகன் பிள்ளைத் தமிழ்

காப்பு

நேரிசை வெண்பா

சீர்மயிலோன் மேற்பிள்ளைச் செந்தமிழைக் கூறுதற்குப்
பார்மயல்சூழ் வல்வினைகள் பாறவே - ஓர்மருப்பு
நேரான முக்கண்ணும் இந்துசடை மேற்றரித்த
காரானை மாமுகத்தோன் காப்பு.

சீர்மயிலோன் மேல்பிள்ளைச் செந்தமிழைக் கூறுதற்குப்
பார்மயல்சூழ் வல்வினைகள் பாறவே - ஓர் மருப்பு
நேரான முக்கண்ணும் இந்துசடை மேல்தரித்த
காரானை மாமுகத்தோன் காப்பு.

குறிப்புரை: வல்வினைகள்பாற, கூறுதற்கு, மாமுகத் தோன் காப்பு என்க. பிள்ளைச் செந்தமிழ் - செவ்விய பிள்ளைத் தமிழ் வல்வினைகள் - வலிய நல்வினை தீவினைகள். ஓர் மருப்பு - ஒருகோடு "ஒரு கோட்டன்" (சிவஞான சித்தியார்) பாற - நீங்க. விநாயகர் சிவபெருமானுக்கு மூத்த பிள்ளையாதலின் அவர்க்குரிய மூன்று கண்களும் சந்திரனை முடிமேற்றரித்தலு மாகியவை இவர்க்கு முண்டென அறிக. இந்து - சந்திரன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. காப்புப் பருவம்
கணபதி

உள்ளங் களித்தெந்தை வார்சடைக் கானத்
துலாவித் துளைக்கைநீட்டி
உயர்கற் பகத்தழை முறித்துக் கவுட்சாரல்
ஊதுவண் டோச்சி வேணி
வெள்ளந் திளைத்துப் படிந்தாடி வல்லபையின்
வியன்முலைக் கோடுழக்கும்
விகடகட தடகும்ப நடனகுஞ் சிதசரண
வேழத்தை அஞ்சலிப்பாம்
பள்ளம் புகும்புன லெனக்குற மடக்கொடிப்
பைந்தொடிப் பேதைநண்ணி*
பாயாத வேங்கையாய் நீழல் செய் தவள்கனிப்
பவளவா யூறல் பருகக்
கள்ளங் கொளுங்கிழக் கோலமேற் கொண்டுநீ
காட்டுகென வேட்டு நிற்குங்
கந்தனைச் சந்தனச் சோலைசூழ் மயிலைக்
கடம்பனைக் காக்க வென்றே.

உள்ளம் களித்து(எ)ந்தை வார்சடைக் கானத்து
உலாவித் துளைக்கைநீட்டி
உயர் கற்பகத் தழை முறித்துக் கவுட்சாரல்
ஊதுவண்டு ஓச்சி வேணி
வெள்ளம் திளைத்துப் படிந்துஆடி வல்லபையின்
வியன்முலைக் கோடு உழக்கும்
விகடகட தடகும்ப நடனகுஞ்சித சரண
வேழத்தை அஞ்சலிப்பாம்
பள்ளம் புகும்புனல் எனக்குற மடக்கொடிப்
பைந்தொடிப் பேதை நண்ணி*
பாயாத வேங்கையாய் நீழல் செய்து அவள்கனிப்
பவளவாய் ஊறல் பருகக்
கள்ளம் கொளும் கிழக்கோலமேற் கொண்டுநீ
காட்டுகென வேட்டு நிற்கும்
கந்தனைச் சந்தனச் சோலைசூழ் மயிலைக்
கடம்பனைக் காக்க என்றே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உலாவி, நீட்டி, முறித்து. ஓச்சி, ஆடி, உழக்கும், வேழத்தை எனவும் எண்ணி, நீழல்செய்து, கிழக்கோல மேற்கொண்டு, வேட்டு நிற்கும் கந்தனை எனவும் இயைக்க. (யாம்) கந்தனை, கடம்பனை, காக்க என்று, வேழத்தை, அஞ்சலிப்பாம் என முடிவு செய்க.

கானத்து உலாவுதலும், துதிக்கை நீட்டித் தழையை முறித்தலும், கன்னத்திற் பெரும் மதநீற்படியும் வண்டுகளை யோச்சுதலும், வெள்ள நீரிற்றிளைத் தாடுதலும், மலையை மிதித்தலும் ஆகிய யானையின் செயலினை விநாயகக் கடவுளை வேழம் என்றதற் கேற்பச் சடைக்கானத் துலாவி, துளைக்கை நீட்டிக் கற்பகத்தழை முறித்து, கவுட்சாரல் ஊது வண்டோச்சி, வேணி வெள்ளந் திளைத்துப் படிந்தாடி, வல்லபையின் முலைக் கோடுழக்கும் என அவர்க்கொப்ப ஏற்றிக் கூறியிருக்குந் திறனைக் காண்க.

(அடி -1) எந்தை - என் தந்தையாகிய சிவபெருமான். மரூஉமொழி. துளைக்கை – துதிக்கை. கவுள் – கன்னம். வேணி – சடை.

(அடி - 2) வல்லபை - விநாயகக் கடவுளின் சத்தி. வல்லபை விநாயகர் என்பதோர் மூர்த்தம். குஞ்சிதசரண - வளைந்த திருவடிகளையுடைய.

(அடி - 3) பள்ளம் புகு புனலென – பள்ளத்தில் விரைந்து செல்லும் நீரைப்போல. "பள்ளந்தாழுறு புனலில்" (திருவாசகம்) "பள்ளம்புகு புனல் போனெறி படருஞ்சிவ னடியார்" (பிரபு) குறமடக்கொடி - வள்ளி நாயகி, பேதை நண்ணி - பேதையை நண்ணி யென இரண்டனுருபு விரிக்க. பாயாத வேங்கை - வேங்கைமரம். குறிப்புமொழி. நீழல் - நிழல் என்பதன் நீட்டல் விகாரம்.

முருகப் பெருமான் வேங்கை மரமாய் நின்றதும், கிழக்கோலங் கொண்டதும் கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணப்படலத்திற் காண்க.

* *நனியில் –பிரதிபேதம்.*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முருகன்

பஞ்சூட்டு பதுமமும் பதுமத்து நீலமும்
நீலோற் பலங்கிழித்த
பைந்தோட்டு வள்ளையு மணந்த குஞ்சரியைப்
பசுங்கொடிக் குறமாதினைச்
செஞ்சூட்டு சேவலங் கொடியையொரு நொடியிலெண்
டிசையெலாஞ் சூழுமயிலைச்
செவ்வேலை யணிகொண்ட வேலனைப் பணிவதே
தினம்வேலை யாகிநிற்பாம்
பிஞ்சூட்டு மதியமு நறையூட்டு மத்தமும்
பிணையூட்டு கங்கையாறும்
பெட்பூட்டு பாசறுகு முட்பூட்டு பேழ்வாய்ப்
பெரும்பாந்த ளுடனணிந்த
நஞ்சூட்டு மணிமிடற் றான்மகிழ வுமைமாது
நற்கொங்கை யமுதூட்டநீள்
நகையூட்டு மணிமயிலை. வளர்முருக னைப்பரவு
நந்தமிழ்க் கவிதழையவே. 2

பஞ்சூட்டு பதுமமும் பதுமத்து நீலமும்
நீலோற் பலம் கிழித்த
பைந்தோட்டு வள்ளையும் மணந்த குஞ்சரியைப்
பசுங்கொடிக் குறமாதினைச்
செஞ்சூட்டு சேவலம் கொடியை ஒரு நொடியில் எண்
திசையெலாம் சூழுமயிலைச்
செவ்வேலை அணிகொண்ட வேலனைப் பணிவதே
தினம் வேலையாகி நிற்பாம்
பிஞ்சூட்டு மதியமும் நறையூட்டு மத்தமும்
பிணையூட்டு கங்கை யாறும்
பெட்பூட்டு பாசறுகு முள்பூட்டு பேழ்வாய்ப்
பெரும் பாந்தள் உடன் அணிந்த
நஞ்சூட்டு மணிமிடற்றான் மகிழ உமைமாது
நற்கொங்கை அமுது ஊட்ட நீள்
நகையூட்டு மணிமயிலை வளர்முருகனைப் பரவு
நம்தமிழ்க் கவிதழையவே. 2

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

நம் தமிழ்க் கவிதை தழைய, வேலனைப் பணிவதே தினம் வேலையாகி நிற்பாம் என்க.

(அடி -1) பஞ்சூட்டு பதுமம் - செம்பஞ்சுக் குழம்பு தடவிய தாமரை மலர்போலும் திருவடி. பதுமத்து நீலம் - தாமரை மலர் போலும் முகத்தின் கண் உள்ள நீலோற்பல மலர் போலும் கண்கள். நீலோற் பலங் கிழித்த வள்ளை - குஞ்சரி - தெய்வயானை.

(அடி - 2) பிஞ்சூட்டு மதியம் - இளஞ்சந்திரன். நறை - தேன். மத்தம் - ஊமத்த மலர். பினை - பின், ஐ சாரியை. பெட்பு - அன்பு. முள் பூட்டு பேழ்வாய் பெரும்பாந்தள் - முட்போலும் கூரிய எயிற்றினையும் பிளந்த வாயினையுமுடைய பெரிய நாகம்.

(அடி - 3) தந்தையாகிய சிவபெருமான் மகிழவும், உமையம்மை பாலூட்டவும், நகைப்பினையுண்டாக்குகின்ற முருகன் என்றபடி.

நஞ்சூட்டு மணி மிடற்றான் - நஞ்சு பொருந்திய அழகிய கண்டத்தையுடை சிவபெருமான். “கறைமிட றணியலு மணிந்தன்று” (புறம்.க)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமால்
வேறு

சீர்கொண்ட புகழ்மயிலைச் செல்வனைக்காங் கையனைச்
சிவஞான தேசிகனாரி சிந்தைகுடி கொண்டு
வேர்கொண்ட வேலவனை ஞாலமெலாம் ஈன்ற
வெற்பரசி தந்தகந்த வேளையென்றும் புரக்க
போர்கொண்ட மால்யானை வாசவனுக் குதவிப்
புத்தமுதும் பருக்காக்கிப் பொழிகதிர்மா மணியுந்
தார்கொண்ட கருங்கூந்தற் செய்யதிரு மாதுந்
தனக்கெனக்கொண் டயனையுந்தி தந்தநெடு மாலே.

சீர்கொண்ட புகழ்மயிலைச் செல்வனைக் காங் கையனைச்
சிவஞான தேசிகனாரி சிந்தைகுடி கொண்டு
வேர்கொண்ட வேலவனை ஞாலமெலாம் ஈன்ற
வெற்பரசி தந்தகந்த வேளை என்றும் புரக்க
போர்கொண்ட மால்யானை வாசவனுக்கு உதவிப்
புத்தமுது உம்பருக்கு ஆக்கிப் பொழிகதிர் மாமணியும்
தார்கொண்ட கருங்கூந்தல் செய்ய திருமாதும்
தனக்குஎனக் கொண்டு அயனை உந்திதந்த நெடுமாலே.

உதவி, ஆக்கி, கொண்டு, உந்திதந்த, நெடுமால், செல்வனை, காங்கையனை, வேலவனை, கந்தவேளை, புரக்க என்க.

(அடி - 1) சிவஞான தேசிகனார் - மயூராசலத்தில் இரண்டாம் ஞானாசிரியராக விளங்கியவர். வெற்பரசி - பார்வதி.

(அடி - 3,4) யானை - ஐராவதம், வாசவன் - இந்திரன், மணி - கவுத்துவமணி திருப்பாற் கடலைக் கடைந்த காலத்து அதிற்றோன்றிய ஐராவதத்தை இந்திரனுக்கும், அமுதத்தைத் தேவர்களுக்கும் கொடுத்துக் கவுத்துவ மணியையும் திருமகளையும் திருமால் தனக்குரியனவாகக் கொண்டாரென்பது புராணம்.

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

சிவபெருமான்
வேறு

இகலியடு கதமுறுகி மனமிறுகி யெதிர்குறுகு
மவனைமுடு கியசரண பங்கயத் தோட்டினர்
இளநிலவு பொழிமதியு வரியுடல ரவுநதியும்
இதழிகொடி யறுகொடணி செஞ்சடைக் காட்டினர்
இமையவரு முனிவரரு மெவரும்வழி வழிமொழியும்
எழுதரிய பழமறையெ னும்புகழ்ப் பாட்டினர்
இளகியிரு விழியருவி சொரிவொரு பணியுழுவை
இனிதுதொழு தகமகிழும் அம்பலக் கூத்தினர்

புகல்பிறிது மிலையபய மபையமென அழுதழுது
பொருமவிட மிசைவதுசெய் தும்பரைக் காத்தவர்
புகழுமடி யவரிடர்கண் முழுதுமடு பவரநகர்
புனிதர்மழு வலரமலர் வெண்பொடிப் பூச்சினர்
புளகமெறி தரவிமலை களபவள ரிளமுலைகள்
புணருமனு பவருரக கங்கணக் காப்பினர்
புதியசத தளவனச மிசையவனு மவனையருள்
புயலுமறி வுறவரிய நம்பரைப் போற்றுதும்

அகருவொடு தகரநறை யளவளக எயினர்குல
[1]அரிவைமுலை யமுதொழுகு மம்புயத் தூர்த்தனை
அவனிமுழு வதுநொடியில் வருகலப மயில்கடவு
அறுமுகனை யுறுதுணையை வண்கதிர்ச் சேப்பனை
அளிகுமிறி யுழுதுமடல் வழியுமது நுகரமுகை
அவிழுமரு அமலிதரு கடம்பலர்ச் சூட்டனை
அறுவர்தன தடமொழுகு மதுரமிக மமுதமினி
தயிலுமுரு கனையுருகு மன்பருக் காத்தனை

மகரசல நிதிகுறுக அசுரர்குல பதிமறுக
மதுகையயில் சிறிது பணி கொண்டகைக் கோப்பனை
மதுரையினி லொருபனுவ னெறிமுறையி னுறுபொருளை
மரபினுணர் மதிவலனை யம்பரக் காப்பனை
வகுளமிடை கமழமுகுள் மலரமண மிசைகுலவி
வளர்பழநி யரசையுயர் செந்திலிற் சேப்பனை
வருடைகுதி கொளமணிகள் சிதறிவெயில் விடுகுடுமி
மயிலைமலை தழையவரு கந்தனைக் காக்கவே.

1. அரிவை முகிழ் முலையினமுதொழுகு – பி.ம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

இகலியடு கதமுறுகி மனம்இறுகி எதிர்குறுகும்
அவனைமுடுகிய சரண பங்கயத் தோட்டினர்
இளநிலவு பொழிமதியும் வரிஉடல் அரவுநதியும்
இதழிகொடி அறுகொடுஅணி செஞ்சடைக் காட்டினர்
இமையவரும் முனிவரரும் எவரும் வழிவழி மொழியும்
எழுதஅரிய பழமறை எனும் புகழ்ப்பாட்டினர்
இளகிஇரு விழிஅருவி சொரிய ஒரு பணி உழுவை
இனிதுதொழுது அகம்மகிழும் அம்பலக் கூத்தினர்

புகல்பிறிதும் இலைஅபயம் அபயம் என அழுது அழுது
பொரும விடம் மிசைவது செய்து உம்பரைக் காத்தவர்
புகழும் அடியவர் இடர்கள் முழுதும் அடுபவர் அநகர்
புனிதர் மழுவலர் அமலர் வெண்பொடிப் பூசினர்
புளகம் எறிதர விமலை களபவளர் இளமுலைகள்
புணரும் அனுபவர் உரககங்கணக் காப்பினர்
புதிய சத தளவனச மிசையவனும் அவனைஅருள்
புயலும்அறிவுற அரிய நம்பரைப் போற்றுதும்

அகருவொடு தகரநறை அளவளக எயினர்குல
அரிவைமுலை அமுதுஒழுகும் அம்புயத் தூர்த்தனை
அவனிமுழுவதும் நொடியில் வருகலப மயில்கடவு
அறுமுகனை உறுதுணையை வண்கதிர்ச் சேப்பனை
அளிகுமிறி யுழுதுமடல் வழியுமது நுகரமுகை
அவிழுமரு அமலிதரு கடம்பலர்ச் சூட்டனை
அறுவர்தன தடம்ஒழுகு மதுரமிகும் அமுதம் இனிது
அயிலும்முருகனை உருகும் அன்பருக்கு ஆத்தனை

மகரசல நிதிகுறுக அசுரர்குலபதி மறுக
மதுகைஅயில் சிறிது பணி கொண்ட கைக்கேர்ப்பனை
மதுரையினில் ஒருபனுவல் நெறிமுறையின் உறுபொருளை
மரபின் உணர் மதிவலனை அம்பரக் காப்பனை
வகுளமிடை கமழ்முகுள் மலரமண மிசைகுலவி
வளர்பழநி யரசை உயர்செந்திலிற் சேர்ப்பனை
வருடைகுதி கொளமணிகள் சிதறிவெயில் விடுகுடுமி
மயிலைமலை தழையவரு கந்தனைக் காக்கவே.

தூர்த்தனை, அறுமுகனை, துணையை, சேப்பனை, கடம்பலர்ச் சூட்டனை, முருகனை, ஆத்தனை, அயில் சிறிது பணிகொண்ட கைக் கேர்ப்பனை, மதிவலனை, அம்பரக்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

காப்பனை, பழநியரசை, செந்திலிற் சேர்ப்பனை, கந்தனைக் காக்க, சரணபங்கயத் தோட்டினர், செஞ்சடைக் காட்டினர், பாட்டினர், அம்பலக் கூத்தினர், உம்பரைக் காத்தவர், அடுபவர், அநகர், புனிதர், மழுவலர், அமலர், பூச்சினர், அனுபவர், காப்பினர், (ஆகிய) நம்பரை (யாம்) போற்றுதும் என முடிக்க.

(அடி - 1) கதமுறுகி - சினமிக்கு, மனமிறுகி - மன இரக்கமின்றி, எதிர் குறுகுமவன் -மார்க்கண்டேயர் முன் அணுகிய நமன், இதழி - கொன்றைமலர், வழிமொழியும் - துதிக்கும், எழுத அரிய பழமறை - தொன்மையான வடமொழி வேதம், பணி - பதஞ்சலி முனிவர், உழுவை -புலிக்கால் முனிவர்.

(அடி - 2) அபயம் அபையம் என - அடைக்கலமென்று பன்முறை கூற, விட மிசைவது செய்து - திருப்பாற் கடலிற் றோன்றி நஞ்சையுண்டு அநகர் - குற்றமற்றவர், வெண்பொடி - திருநீறு, களபம் - மணச்சாந்து, உரக கங்கணக் காப்பினர் -ஆதி சேடனைக் கங்கணமாகவுடையவர்.

"சொற்றெரிந்த சுடர்மணிக் கங்கண முற்றிலங்க" (பிரபு)

சததள வ சமிசையவன் - நூறிதழ்களையுடைய தாமரை மலரில் அமர்ந்திருக்கும் பிரமன், அவனை அருள்புயல் - அப்பிரமனை யீன்ற மேகம் போலும் கரிய நிறத்தையுடைய திருமால், போற்றுதும் - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினை முற்று.

(அடி - 3) அகரு - அகில், தகரம் - மயிர்ச்சாந்து, எயினர் குல அரிவை - வள்ளி நாயகி, தூர்த்தனை - காமுகனை, கலபம் - தோகை, உறுதுணையை - அடியவர்க்குற்ற துணையாயிருப்பவனை, சேப்பனை - செந்நிறமுடையவனை, "செய்யன் சிவந்த ஆடையன்" (திருமுருகு) அமலி - உமை. அறுவர் - கார்த்திகைப் பெண்கள் அறுவர், ஆத்தனை - ஆப்தனை, உரியவனை.

(அடி - 4) சலநிதி - கடல், மதுகை - வலிமை

"மதுரையில்...... மதிவலனை" - மதுரையம்பதியில் ஒப்பற்ற இறையனாரகப் பொருள் என்ற இலக்கண நூலின்கண் பொதிந்த அகப்பொருளை ஆன்றோர் முறைப்படி அறியும் அறிவுடையவனை. இறையனாரகப் பொருளுக்குச் சங்கப்புலவர் நக்கீரர் உரைத்த உரையை முருகப் பெருமான் உருத்திர சன்மராய் எழுந்தருளிக் கேட்டுக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்த்து மெய்ப் பொருளிதுவென அறிவித்த வரலாறு.

வகுளம் - மகிழமலர், முகுளம் - அரும்பு, முகுள் - கடைக்குறை செந்திலிற் சேர்ப்பனை - திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் தலைவனை, சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன், திருச்செந்தில் நெய்தல் நிலமாதலின் சேர்ப்பன் என்றார், வருடை - மலையாடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பார்வதி

நீடுமா யிரகோடி யண்டமும் அண்டத்தி
னிலவுநவ கண்டவைப்பும்
நேமிப்பொ ருப்பும்வட கோதண்ட சிகரமு
நெட்டுததி யும்பொன்றநின்
றாடுநா யகனாட லோய்ந்தபின் மீளவும்
அவையெலாம் அங்குரிப்ப
அருள்பொழி கடைக்கண்வைத் தருள்புரியு மன்னைதனை
ஆதிபரை யைப்பரவுவாம்
கேடுமீ னமும்படா துவாபட் டுவட்டாது
கிட்டினர்க் கமுத மூறிக்
கெம்பீர முற்றாறு முகமருவி மணிவெயில்
கிளர்வேலை யைப்பிணங்கி
ஓடுநா வாய்க்குமெட் டாதுபங் கம்படா
தொளிமுத்தி யாம்பெற்றிட
உயர்மயிலை மலைவந்த ஆனந்த வாரியை
உரைக்கு நங் கவிதழையவே. 5

நீடும் ஆயிரங்கோடி அண்டமும் அண்டத்தில்
நிலவுநவ கண்ட வைப்பும்
நேமிப்பொ ருப்பும் வடகோதண்ட சிகரமு(ம்)
நெட்டுஉததியும் பொன்ற நின்ற
ஆடு நாயகன் ஆடல் ஓய்ந்தபின் மீளவும்
அவையெலாம் அங்குரிப்ப
அருள்பொழி கடைக்கண் வைத்து அருள்புரியும் அன்னைதனை
ஆதிபரையைப் பரவுவாம்
கேடுமீனமும் படாது உவாபட்டு உவட்டாது
கிட்டினர்க்கு அமுதம் ஊறிக்
கெம்பீரம் உற்று ஆறுமுக மருவி மணிவெயில்
கிளர் வேலையைப் பிணங்கி
ஓடுநாவாய்க்கும் எட்டாது பங்கம் படாது
ஒளிமுத்தி யாம் பெற்றிட
உயர்மயிலை மலைவந்த ஆனந்த வாரியை
உரைக்கு(ம்) நம் கவிதழையவே. 5

ஆனந்த வாரியையுரைக்கும், நம் கவிதழைய, (யாம்) அன்னைதனை, ஆதிபரையைப் பரவுவாம் என்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அடி - 1) நவகண்டம் - வடபால் விதேகம், தென்பால் விதேகம், கீழ்பால் விதேகம், மேல்பால் விதேகம், வடபால் ரேவதம், தென்பால் ரேவதம், வடபாற் பரதம், தென்பாற் பரதம், மத்திம கண்டம் என்பன. நேமிப்பொருப்பு - சக்கரவாள மலை, வட கோதண்ட சிகரம் - வட திசையிலுள்ள மேருவின் உச்சி, நெட்டுததி - நீண்ட கடல், பொன்ற - அழிய

(அடி - 2) நின்று ஆடும் நாயகன் ஆடல் ஓய்ந்தபின் - சர்வ சங்கார காரணனாகிய சிவபெருமான் மகாப்பிரளய காலத்தில் நின்றாடிய ஆடல் அடங்கிய பின், அங்குரிப்ப - தோன்ற,

(அடி - 3) கேடு மீனமும் படாது - அழியும் குறைவு முண்டாகாமல், மீன்களும் உண்டாகாமல் (இருபொருள்)

உவாபட்டு உவட்டாது - முழுநிலாநாளில் பொங்காமல்.

(அடி - 4) நாவாய் - கப்பல், பங்கம் படாது - குற்றம் உண்டாகாமால், சேறு படியாமல், முத்தி யாம் பெற்றிட = யாம் முத்து பெற்றிட - யாம் முத்துக்களைப் பெற, யாம் முத்தி பெற்றிட - யாம் மோட்சத்தையடைய. (இருபொருள்) "உயர் மயிலை மலைவந்த ஆனந்த வாரி" என்ற தொடரில் மலை மீது வந்த ஆனந்தக் கடல் என்பதோர் நயங் காண்க. ஆனந்தவாரி - ஆனந்தக்கடல், ஈண்டு முருகக் கடவுளைக் குறித்தது; இறைவன் ஆனந்தரூபனாதலின்.

Digitization by Hindu-Heritage-Foundation of America (USA)

பிரமன் -வயிரவன் - இந்திரன்

வரியளி யினங்குழுமி யேடவிழ்த் திசைபாட
வரிசைபெறு பரிசிலெனவே
வாசப் பொகுட்டுப் பொலன்கட்டி யேந்துமொரு
வனசபீ டத்திலயனைப்
புரியுரக கங்கண பணாமணிகள் திசையெலாம்
புதுவெயி லெறித்தாலுமெய்
போர்த்தகஞ் சுகமிரு ளெறிக்கும்வயி ரவனைப்
புரந்தரனை யேத்திநிற்பாம்
இருசிறை விரித்துக் குவித்துப் புடைத்துதரம்
எக்கியிறு மாந்து செஞ்சூட்
டெழில்பெற்ற சென்னிசிறி தேகவித் திருளகல
இரவிதனை வரவழைக்கும்
ஒருதுவச மீதுயர்த் தாடன்மயில் கடவிவரும்
உம்பர்சே னாதிபதியை
ஓங்குமயி லாசல முகந்த காங்கேயனை
யுரைக்குநங் கவிதழையவே. 6

வரியளி இனம்குழுமி ஏடுஅவிழ்த்து இசைபாட
வரிசைபெறு பரிசில்எனவே
வாசப் பொகுட்டுப் பொலன்கட்டி ஏந்தும் ஒரு
வனச பீடத்தில் அயனைப்
புரிஉரக கங்கண பணாமணிகள் திசையெலாம்
புதுவெயில் எறித்தாலும் மெய்ப்
போர்த்த கஞ்சுகம் இருள் எறிக்கும் வயிரவனைப்
புரந்தரனை ஏத்தி நிற்பாம்.
இருசிறை விரித்துக் குவித்துப் புடைத்து உதரம்
எக்கிஇறு மாந்து செஞ்சூட்டு
எழில்பெற்ற சென்னிசிறிதே கவித்து இருள்அகல
இரவிதனை வரவழைக்கும்
ஒருதுவசம் மீதுஉயர்த்து ஆடல்மயில் கடவிவரும்
உம்பர் சேனாதிபதியை
ஓங்கு மயிலாசலம் உகந்த காங்கேயனை
உரைக்கும் நம் கவிதழையவே. 6

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உம்பர் சேனாதிபதியை, கங்கேயனை, உரைக்கும் நம் கவிதழைய, அயனை, வயிரவனை, புரந்தரனை, (யாம்) ஏத்தி நிற்பாம் என்க.

(அடி - 1) வரியளி..... அவனை - இரேகைகளையுடைய வண்டின் கூட்டங்கள் கூடி இதழ்களாகிய கதவந்திறந்து வைகறையில் (பாணர்களைப்போல)இசைப் பாட்டுக்களைப் பாட அதற்குப் பெறுகின்ற பரிசிலைப் போல மணம் பொருந்திய பொகுட்டாகிய பொற் கட்டியைக் கொடுக்க ஏந்தி நிற்கும் தாமரை மலராகிய பீடத்திலமர்ந்திருக்கும் பிரமனை என்றபடி.

(அடி - 2) புரி உரக கங்கண பணாமணிகள் - வளைந்த பாம்பாகிய கங்கணத்தின் படத்திலுள்ள இரத்தினங்கள். கஞ்சுகம் - சட்டை. வயிரவன் - வயிரவக்கடவுள், வைரவர் கையில் பாம்பைக் கங்கணமாகவுடையவெரன்பதும், கரிய சட்டையைத் தரித்தவரென்பதும் தக்கயாகப்பரணி "உரக கங்கண" என்ற காப்புச் செய்யுளாலும், "செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக், கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்" (கந்தபுராணம் - கடவுள் - செய்யுள் - 10) என்னும் அடிகளாலும் அறிக. புரந்தரன் - இந்திரன்.

(அடி - 3) அதரம் - வயிறு, இறுமாந்து - பெருமிதங் கொண்டு , துவசம் - கொடி ஆடன் மயில் - வெற்றியையுடைய மயில்.

Digitization by Hindu-Heritage-Foundation-of-America-HHFA(USA)

சூரியன்

அள்ளிருட் படலங் கிழித்துவிட் டெறியுமோ
ராயிரங் கிரணம் வீசி
ஆழிவட் டஞ்சூழு நேமிவட் டங்குலவும்
அவனிநெடு வட்டமெல்லாம்
வள்ளமென் கமலங்கள் பொறியவிழ்த் தளிகுலம்
வாய்மடுப் பப்பசுந் தேன்
மடற்கடை முறுக்குடைந் தொழுகவுதை யஞ்செயும்
வானிரவி யைத்துதிப்பாம்
உள்ளநெக் குருகியிரு வழியையு மடைத்துமற்
றொருவழியி னைத்திறந்தே
ஓங்கார மீதெழு எழுப்பியா தாரங்கள்
ஓராறை யுங்கடந்து
தெள்ளுபுத் தமுதூறு மானந்த வாரிதி
திளைத்திதைய கமலமலரத்
தென்மயில மலைவந்த கந்தவே ளைப்பரவு
செந்தமிழ்க் கவிதழையவே. 7

அள்ளிருள் படலம் கிழித்து விட்டு எறியும் ஓர்
ஆயிரம் கிரணம் வீசி
ஆழிவட்டம் சூழும் நேமிவட்டம்குலவும்
அவனிநெடு வட்டம் எல்லாம்
வள்ளமென் கமலங்கள் பொறி அவிழ்த்து அளிகுலம்
வாய் மடுப்பப் பசுந்தேன்
மடல்கடை முறுக்கு உடைந்து ஒழுகஉதையம் செயும்
வான்இரவியைத் துதிப்பாம்
உள்ளநெக்கு உருகிஇரு வழியையும் அடைத்து மற்று
ஒருவழியினைத் திறந்தே
ஓங்காரம் மீதுஎழ எழுப்பிய ஆதாரங்கள்
ஓர்ஆறையும் கடந்து
தெள்ளு புத்தமுது ஊறும் ஆனந்த வாரிதி
திளைத்து இதைய கமலம் மலரத்
தென்மயில மலைவந்த கந்தவேளைப்பரவு
செந்தமிழ்க் கவிதழையவே. 7

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடைத்து, திறந்து, எழுப்பி (எழுப்ப), கடந்து.. திளைத்து (திளைக்க), மலர, வந்த கந்தவேளைப் பரவு, கவிதழைய , கிழித்து, வீசி, அவிழ்த்து, வாய்மடுப்ப, உதையஞ்செயும், இரவியை, (யாம்) துதிப்பாம் என்க.

(அடி – 1) அள்ளிருள் – அள்ளிக் கொள்வதை யொத்த மிக்க இருள் "அள்ளிக் கொளும்பேரழகன்" (பிரபு) "அள்ளிக் கொள்வன்ன குறுமுகுள வாயினும்" (நாலடியார்) நேமிவட்டம் – சக்கரவாளமலை. அவனி நெடுவட்டமெல்லாம் – உலகமுழுவதும்.

(அடி – 2) வள்ள மென் கமலங்கள் – வள்ளம் போலும் மென்மையான தாமரை மலர்கள், பொறி – திரட்சி, அளிகுலம் – வண்டின் கூட்டம்.

(அடி – 3) இருவழி – இடைகலை, பிங்கலை, ஒரு வழி – நடுநாடி, (சுழுமுனை) ஓங்காரம் – நாதம், அமுதூறும் ஆனந்த வாரிதி – சந்திர மண்டலத்தினின்று அமுதம் ஊறுகின்ற ஆனந்தக் கடல். இதய கமலம் மலர – உள்ளமாகிய தாமரை மலர.

யோகியர் குய்யத்தின் இரண்டங்குலத்தின் கீழுள்ள மூலாதரத்துப் பிராண வாயுவால் அனலை யெழுப்பி மூலாதரம் – சுவாதிட்டானம் – மணிபூரம் – அநாகதம் – விசுத்தி – ஆக்கினையென்னும் ஆறாதராங்களிலும் பிரணவத் தியானத்தோடு சென்று ஆங்காங்குள்ள கடவுளரைத் தரிசித்து அவ்வாறாதராங்களுக்கு மேற்பட்டுள்ள பிர்மரந்திரத்திலுள்ள சந்திரமண்டலத்தை அவ்வக்கினி தாக்க அம்மதியினின்று சொட்டுகின்ற அமுதப் பெருக்கையுண்டு நெடுநாள் வீற்றிருப்பர்.

உலகிலுள்ள தாமரை மலர்கள் முறுக் கவிழ்ந்து தேனொழுக அதனை வண்டினங்கள் அருந்த உதயகிரியில் உதிக்கும் சூரியனை, அன்பர்களது உள்ளக்கமலம் மலர மயிலமலையில் எழுந்தருளிய கந்தவேளைத் துதிக்கும் நம் கவி தழையத் துதிப்பாம் எனப் பொருள் காண்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துர்க்கை

வேறு

நயகுண விலாசச் செருக்கினால்
நலியுமலர் ஏவைத் துரக்குமோர்
செயவனிதை தாளைப் பழிச்சியே
தினமுமுடி சூடிச் செழித்துமே
அயிலை நெடுமாவைப் பிளக்கவே
அருளிவிடு வானைத் தருக்கியே
மயிலமலை வாழக் களிப்பினால்
வருமுருக வேளைப் புரக்கவே. 8

நயகுண விலாசச் செருக்கினால்
நலியுமலர் ஏவைத் துரக்கும் ஓர்
செயவனிதை தாளைப் பழிச்சியே
தினமும் முடிசூடிச் செழித்துமே
அயிலை நெடுமாவைப் பிளக்கவே
அருளிவிடு வானைத் தருக்கியே
மயிலமலை வாழக் களிப்பினால்
வரும்முருக வேளைப் புரக்கவே. 8

முருகவேளைப்புரக்க, தாளைப்பழிச்சி, சூடி, செழித்தும் என்க.

(அடி 1-4) நலியுமலர் ஏவை - பகைவரை வருத்தும்மலர்ப் பாணங்களை, துரக்கும் - செலுத்தும், செயவனிதை - கொற்றவை, அயிலை - வேலாயுதத்தை, நெடு மாவைப் பிளக்க - கடலில் மறைந்த சூரபதுமனாகிய நீண்ட மாமரத்தைப் பிளக்க "கொக்குருவைச் செற்ற அருணனை யன்ன செவ்வேற்படைச் செந்திலர்க்கு" (திருச்செந்தினிரோட்டகயமக வந்தாதி)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சப்த மாதர்கள்

வேறு

நிலனிடந்தொரு கொம்பினிற் சேர்த்தவள்
நிலவணிந்த கருங்குழற் கோற்றொடி
நிலைபெறும்படி யண்டரைக் காப்பவள்
நிமலன்முன்பு பதம்பெயர்த் தார்த்தவள்
இலகுபங்கய விஞ்சைநற் பார்ப்பனி
இனிதருந் தமுதந்தரற் கேற்றவள்
இகல்பொருங்கணி வெண்கரிக் கோர்கிளி
இனையர்தஞ் சரணங்களைப் போற்றுதும்
அலகிலும்பரும் உம்பர்பொற் காக்களும்
அகில அண்டமும் எண்டிசைத் தோர்களும்
அரியுமுண்டக அம்புயத் தோட்டனும்
அரவுவெம்புலி கண்டமெய்க் கூத்தனும்
அலையுமுந்து தடங்கடற் கூட்டமும்
வரமிகுந்த் னிடந்தனிற் போர்ப்படை
மகனெடும்பதி கண்டுயக் காட்டிய
மயிலைவந்த கடம்பனைக் காக்கவே. (௯)

நிலன்இடந்துஒரு கொம்பினில் சேர்த்தவள்
நிலவுஅணிந்த கருங்குழற் கோல்தொடி
நிலைபெறும்படி அண்டரைக் காப்பவள்
நிமலன்முன்பு பதம்பெயர்த்து ஆர்த்தவள்
இலகுபங்கய விஞ்சைநல் பார்ப்பனி
இனிது அருந்த அமுதம் தரற்கு ஏற்றவள்
இகல்பொருங்கணி வெண்கரிக்கு ஓர்கிளி
இனையர்தம் சரணங்களைப் போற்றுதும்
அலகில்உம்பரும் உம்பர்பொற் காக்களும்
அகில அண்டமும் எண் திசைத் தோர்களும்
அரியும்முண்டக அம்புயத் தோட்டனும்
அரவுவெம்புலி கண்டமெய்க் கூத்தனும்
அலையும் உந்து தடங்கடல் கூட்டமும்
வரமிகுந்த ன்இடந்தனிற் போர்ப்படை
மகனெடும்பதி கண்டு உ(ய்)யக் காட்டிய
மயிலைவந்த கடம்பனைக் காக்கவே. (௯)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உம்பரும், பொற்காக்களும், அகில அண்டமும், எண்திசைத் தோர்களும், அரியும், அம்புயத்தோட்டனும், கூத்தனும், கடற்கூட்டமும், தன் இடந்தனில், மகனெடும்பதி கண்டுயக் காட்டிய, கடம்பனைக் காக்க, (யாம்) இனையர்தம் சரணங்களைப் போற்றுதும் என்க.

(அடி - 1,2) சப்தமாதர்கள் : வராகி - மகேஸ்வரி - கௌமாரி - காளி - அபிராமி - வைணவி - இந்திராணி,

திருமால் வராக அவதாரத்தில் நிலத்தை ஒரு கொம்பினிற் கொண்ட செயலை வராகியின் செயலாக வைத்து "நிலனிடந்தொரு கொம்பினிற் சேர்த்தவள்" என்றும், ஈஸ்வரன் முடியில் "நிலவணிந்துள்ளதை மகேஸ்வரியின் செயலாகக் கொண்டு நிலவணிந்த கருங்குழல் கோற்றொடி" என்றும், தேவர்களை அசுரர்களது இடும்பையினின்றுங் காத்த குமரவேளின் செயலைக் கௌமாரியின் மீதேற்றி "நிலை பெறும்படி அண்டரைக் காப்பவள்" என்றுங் கூறியுள்ளார். சிவபெருமானுடன் வாதிட்டு நடம்புரிந்தவள் காளியாதலின் "நிமலன் முன்பு பதம்பெயர்த் தார்த்தவள்" என்றும், அபிராமி கலைக்குரியவளாதலின் "இலகுபங்கய விஞ்சை நற்பார்ப்பனி" என்றும், விஷ்ணு கடல் கடைந்து தேவர்களுக்கு அமுதளித்த செயலை வைணவி மீதேற்றி "இனிதருந் தமுதந்தரற் கேற்றவள்" என்றும், ஐராவதத்தின் மீதிவர்வோன் இந்திரனா தலின் அவன் செயலை இந்திராணி மீது வைத்து "வெண்கரிக் கோர் கிளி" என்றும் ஆசிரியர் கூறியிருந்தலை அறிக. தலைவர் கள் செயல்களை அவர்கள் தம் சத்திகளுக்கும் கூறுதல் மரபு.

(அடி - 3,4) முருகனுடைய திருவிளையாடலைக் கண்ட இந்திரன் "இவன் பாலனல்லன், அவுணர்களிலும் கொடியன்" என்று கருதிப் படையுடன் முருகனை எதிர்த்துப் பொருதான். போரில் தேவர்கள் முதலியோர் அழிந்தனர். பின்னர் வியாழனுடைய அறிவுரையால் முருகன் என்றுணர்ந்து இந்திரன் பணிந்தான். அப்பொழுது முருகப் பெருமான் பேருருக் கொண்டு தன்பால் முத்தேவர்களும் எல்லா அண்டங்களும் அடங்கிருத்தலை இந்திரனுக்குக் காட்டியருளினார். இதன் விரிவைக் கந்தபுராணம் திருவிளையாட்டுப் படலத்தில் அறிக. போர்ப்படை - போரைப் புரியும் படைகளுடன் கூடிய பொற்காக்களும், எண்டிசைத்தோர்களும், அரியும், அம்புயத் தோட்டனும், கூத்தனும், கூட்டமும் என்பவற்றில் ஐ உருபு விரித்துப் பொருள் கொள்க.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

திருமகள் – குபேரன் – முப்பத்து மூவர் – ஐயனார்

வேறு

கதலிக் கனியுஞ் சர்க்கரை யுஞ்செங்
கன்னற் பொழிபாலுங்
கருணையி னருள்செய் திவைபோ லச்சுவை
கனிதந் தினிதாயே
மதுரித் தமுதொழு கும்படி நம்மேல்
வடிதமிழ் பாடுகென
வரமுத வியமயி லைக்கிரி வேளை
மகிழ்ந்து புரந்தருள்வார்
குதலைக்கிளவித் திருமா தஞ்சொற்
கொடிமதில் அளகையர்கோன்
கொடியணி தேரும் விமானமும் விடையும்
கொற்றம் பெறவூரும்
அதிர்பொற் கழல்புனை தேவர்கள் நால்வகை
யாம்பதி னொருமூவர்
அகிலமு மகில சராசர முங்காத்
தருள்புரி ஐயனுமே. 10

கதலிக் கனியும் சர்க்கரையும் செங்
கன்னல் பொழி பாலும்
கருணையின் அருள்செய்து இவைபோலச்சுவை
கனிதந்து இனிதாயே
மதுரித்து அமுது ஒழுகும் படி நம்மேல்
வடிதமிழ் பாடுகென
வரம் உதவிய மயிலைக்கிரி வேளை
மகிழ்ந்து புரந்து அருள்வார்
குதலைக் கிளவித் திருமாது அம்சொல்
கொடிமதில் அளகையர்கோன்
கொடி அணி தேரும் விமானமும் விடையும்
கொற்றம் பெற ஊரும்
அதிர்பொன் கழல்புனை தேவர்கள் நால்வகை
யாம்பதி னொருமூவர்
அகிலமும் அகில சராசரமும் காத்து
அருள்புரி ஐயனுமே. 10

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

திருமாது, அளகையர்கோன், பதினொருமூவர், ஐயனும், மயிலைக் கிரிவேளை, புரந்தருள்வார் என்க. ஐயனும் என்பதிலுள்ள உம்மையைத் திருமாது முதலியவற்றுடனும் கூட்டுக.

(அடி - 1,2) மயிலை முருகப்பெருமான் தம்மீது நூலியற்றுமாறு அருளியதை ஆசிரியர் அறிவிக்கின்றார் கதலி - வாழை, கன்னல் பொழிபால் - கரும்பின் சாறு.

(அடி - 3) குதலைக் கிளவி அம்சொல் திருமாது - மழலை மொழிபோலும் அழகிய சொற்களையுடைய திருமகள். அளகையர் கோன் - குபேரன்.

(அடி -4) நால்வகையாம் தேவர்கள் பதினொரு மூவர் - அசுவினி தேவர் இருவர், வசுக்கள் எண்மர், உருத்திரர் பதினொருவர், சூரியர் பன்னிருவர் ஆக முப்பத்து மூவர். பதினொரு மூவர் - பண்புத் தொகை. பதினொன்றோடு மூன்றனையுறழ முப்பது மூன்று. ஐயன் - ஐயனார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. செங்கீரைப் பருவம்

பான்மாரி பெய்துடல் வழிந்தென்ன நீற்றொளி
பழுத்தசெம் மேனியெம்மான்
பங்கேரு கக்கரங் கூப்பிநின் றேத்தலும்
பரிவுவைத் தன்னவர்க்கும்
வான்மாரி பொய்ப்பினும் பொய்யாத காவேரி
மாநதி கொணர்ந்துதந்த
மலயமா தவனுக்கு மவனிட் வடத்தடரும்
வன்கலிக் கோடைதணியத்
தான்மாரி பெய்தன்ன நிதிமாரி பெய்யுமிரு
தாமரைச் செங்கையாளி
தயவாளி சிவஞான தேசிகரிக் கும்பழஞ்
சதுர்மறைப் பொருள்விரித்துத்
தேன்மாரி பெய்தென்ன வுரைத்தகுரு தேசிகா
செங்கீரை யாடியருளே
தென்மயிலை தழையவரு சேனா பதித்தலைவ
செங்கீரை யாடியருளே. 11

பால்மாரி பெய்துஉடல் வழிந்துஎன்ன நீற்றுஒளி
பழுத்த செம்மேனி எம்மான்
பங்கேரு கக்கரங் கூப்பி நின்று ஏத்தலும்
பரிவுவைத்து அன்னவர்க்கும்
வான்மாரி பொய்ப்பினும் பொய்யாத காவேரி
மாநதி கொணர்ந்து தந்த
மலயமாதவனுக்கும் அவனிவட்டத்து அடரும்
வன்கலிக் கோடைதணியத்
தான்மாரி பெய்து அன்ன நிதிமாரி பெய்யுஇரு
தாமரைச் செங்கையாளி
தயவாளி சிவஞான தேசிகர்க்கும் பழம்
சதுர்மறைப் பொருள்விரித்துத்
தேன்மாரி பெய்து அன்ன உரைத்த குரு தேசிகா
செங்கீரை ஆடிஅருளே
தென்மயிலை தழையவரு சேனாபதித் தலைவ
செங்கீரை ஆடிஅருளே. 11

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

முருகப்பெருமான் சிவபெருமான், அகத்தியர், சிவஞானபாலைய தேசிகர் ஆகிய மூவர்க்கும் நான்மறைப் பொருளை யுணர்த்தியதை அறிவிக்கும்.

அன்னவர்க்கும், மாவதனுக்கும், சிவஞான தேசிகர்க்கும், விரித்து, உரைத்த, குரு தேசிகா என்க.

(அடி - 1) பான்மாரி.... எம்மான் உவமையணி, பால்மழை பெய்து திருமேனியில் வழிந்தாலொத்த திருநீற்றொளிமிக்க சிவந்த திருமேனியையுடைய சிவபெருமான்.

(அடி - 2) மலயமாதவன் - அகத்தியர். வன் கலிக்கோடை தணிய - வலிய வறுமையாகிய வெப்பம் நீங்க “வான்மாரி பொய்ப்பினும் பொய்யாத காவேரி” என்னுந்தொடர் “வான் பொய்ப்பினும் தான் பொய்யா,. மலைத் தலைய கடற்காவிரி” (பட்டினப்பாலை) என்னும் அடிகளின் பொருளைக் கொண்டிருந்தல் காண்க.

(அடி -3) தாமரைச் செங்யைாளி - தாமரை மலர் போலும் செம்மையான திருக்கரங்களையுடையவர். பதுமரேகையுடைய செம்மையான திருக்கரங்களையுடையவர் என்றலுமாம்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

வையமீ ரேழுமொரு நொடியில்வல மாகவரு
வாகைபுனை தோகையாட
வல்லசுரர் வாகுஇட மாடவல மாடுநின்
வாரணத் துவசமாடப்
பையரா நெளியப் பதம்பெயர்க் குங்கரிப்
பருமணிக் கெண்டையாடப்
பற்றியே றுந்தகர்த் திருகுபுரி கோட்டிற்
பசும்பொனல காடவனசக்
கையில்வே லமராட அரைவடமும் ஐம்படைக்
கலனுமினி தாடநுதலில்
கட்டுமொரு பொற்சுட்டி யாடவா டக்கனக
குண்டலங் காதிலாடச்
செய்யவாய் மழலையமிழ் தூறன்மார் பாடநீ
செங்கீரை யாடிருளே
தென்மயிலை தழையவரு சேனா பதித்தலைவ
செங்கீரை யாடியருளே. *12*

வையம் ஈர்ஏழும் ஒரு நொடியில் வலமாகவரு
வாகை புனைதோகையாட
வல்அசுரர் வாகு இடஆட வலம் ஆடு நின்
வாரணத் துவசம் ஆடப்
பையரா நெளியப் பதம் பெயர்க்கும் கரிப்
பருமணிக் கெண்டையாடப்
பற்றியே றுந்தகர்த் திருகுபுரி கோட்டிற்
பசும்பொன் அலகுஆட வனசக்
கையில் வேல் அமரர்ஆட அரைவடமும் ஐம்படைக்
கலனும் இனிது ஆட நுதலில்
கட்டும் ஒரு பொற்சுட்டி ஆட ஆடக் கனக
குண்டலங் காதில்ஆடச்
செய்யவாய் மழலை அமிழ்து ஊறன் மார்பு ஆடநீ
செங்கீரை ஆடி அருளே
தென்மயிலை தழைய வரு சேனா பதித்தலைவ
செங்கீரை ஆடி அருளே. **12**

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

தோகையாட, வாகுஇடமாட, துவசம்ஆட, கெண்டை யாட, அலகாட, வேல் அமராட, இனிதாட, பொற்சுட்டியாட, குண்டலம் காதிலாட, மார்பாட, நீ செங்கீரை யாடிருள் என்க.

(அடி - 1) வாகை -வெற்றிமாலை, தோகை - மயில் (சினையாகு பெயர்) வாகு - தோள், அசுரர் தம் இடத் தோளாடல் அவர்க்குப் பின்னர் அழிவு நேர்வதைக் காட்டும் தீய அறிகுறி, வாரணத்துவசம் - சேவற்கொடி, "சேவலங் கொடியோன் காப்ப" (குறுந்தொகை).

(அடி - 2) அரா - ஆதிசேடன், கரி - முருகனுக்குரிய பிணிமுகம் எனப் பெயரிய யானை. தகர் - ஆட்டுக்கடா. நாரத முனிவரியற்றிய வேள்வியிற்றோன்றியது. அலகு - அம்புபோல் பொன்னாற் செய்து அணியும் அணி.

(அடி - 3) கையில் அமர் வேல் ஆட என மாற்றுக. ஐம்படைக்கலன் - குழவிப் பருவத்தில் காப்பாகச் சங்கு - சக்கரம் - வில் - வாள் - கதை என்ற ஆயுதங்களைப் போல் பொன்னாற் செய்து மார்பிலணியும் ஐம்படைத்தாலி. சுட்டி - நெற்றியணி.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

வைக்கத் தகாதென்று மதியாத குலவேடர்
மதகரி மருப்பு வாங்கி
வன்கா னிறுத்திமுக டிலைவேய்ந்து வள்ளிதனை
வைத்தவித ணங்கடோறும்
ஒக்கப் படிந்துவீழ் கிளிகடிந் தவள்திரிந்
தோலிடு புனங்கடோறும்
உளமூச லாடவன் னவளூச லாட்டயரும்
உயர்மரச் சூழல் தோறும்
பக்கத் தில்வருமெனக் காண்பரென ஓடிப்
பதுங்கிப் பொதும்பர்தோறும்
பாவையவள் புனல்பருகு பைஞ்சுனை இடந்தொறும்
பல்காலு மேநடந்து
செக்கச் சிவந்தஇரு சரணார விந்தனே
செங்கீரை யாடிருளே
தென்மயிலை தழையவரு சேனா பதித்தலைவ
செங்கீரை யாடிருளே 13

வைக்கத் தகாது என்று மதியாத குலவேடர்
மதகரி மருப்பு வாங்கி
வன்கான் இறுத்தி முகடு இலைவேய்ந்து வள்ளிதனை
வைத்த இதணங்கள் தோறும்
ஒக்கப் படிந்துவீழ் கிளிகடிந்து அவள் திரிந்து
ஒல்இடு புனங்கள் தோறும்
உளம் ஊசலாட அன்னவள் ஊசலாட்டு அயரும்
உயர்மரச் சூழல் தோறும்
பக்கத்தில் வரும் எனக் காண்பர் என ஓடிப்
பதுங்கிப் பொதும்பர்தோறும்
பாவைஅவள் புனல்பருகு பைஞ்சுனை இடந்தொறும்
பல்காலுமே நடந்து
செக்கச் சிவந்த இரு சரணார விந்தனே
செங்கீரை ஆடி அருளே
தென்மயிலை தழையவரு சேனா பதித் தலைவ
செங்கீரை ஆடி அருளே 13

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

இதணங்கடோறும், புனங்கடோறும், மரச்சசூழல் தோறும், பொதும்பர்தோறும், பைஞ்சுனையிடந்தொறும், நடந்து, சிவந்த, சாணாரவிந்தனே என்க.

(அடி - 1) வைக்கத்தகாதென்று - தினைப்புனத்தைக் காவல் புரிய வைக்கக்கூடா தென்று, மதியாத - கருதாத. மருப்பு -தந்தம், இதணங்கள் தோறும் - காவற்பரண்கள்தோறும்.

(அடி - 2) உளம் ஊசல் ஆட - உள்ளம் ஊசல் போல் அலைவுற.

(அடி - 3) வரும் என - வருவாள் என்று. காண்பர் என - வள்ளியினுடைய தோழியர், தந்தை முதலியோர் காண்பார் என்று.

(அடி -4) சரணாரவிந்தனே - தாமரை மலர் போலும் திருவடிகளையுடையவனே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துங்கமால் வரைபுரையும் அயிராவ தப்பகடு
துன்னுகா னஞ்செலாமல்
சுரர் சிறைக் கூடம் புகாமல்விண் டல மெலாந்
தூளி பட் டழிவுறாமல்
கொங்கையா ருந்தருத் தறியுணா தமுதமும்
கொள்ளைபோ காமலிந்த்ரன்
கும்பிட்டு நில்லாமல் இந்த்ராணி மங்கலக்
குலரத்ன பணிவிடாமல்
சங்கமோ லிட்டதிர மேலிட்ட வல்லசுரர்
சமரிட்ட வெங்களத்துத்
தாருகா சுரனொடு கிரவுஞ்ச கிரியைநொடி
தகர்த்துவரு கென்றுபதுமச்
செங்கைவேல் பணிகொண்ட அணிகொண்ட சேவகா
செங்கீரை யாடிருளே
தென்மயிலை தழையவரு சேனா பதித்தலைவ
செங்கீரை யாடிருளே 14

துங்கமால் வரைபுரையும் அயிராவதப் பகடு
துன்னு கானம் செலாமல்
சுரர் சிறைக் கூடம் புகாமல் விண்தலம் எலாம்
தூளி பட்டு அழிவுஉறாமல்
கொங்கை ஆரும் தருத் தறியுணாது அமுதமும்
கொள்ளை போகாமல் இந்திரன்
கும்பிட்டு நில்லாமல் இந்திராணி மங்கலக்
குலரத்ன பணிவி டாமல்
சங்கம்ஒ லிட்டுஅதிர மேலிட்ட வல்அசுரர்
சமரிட்ட வெங்களத்துத்
தாருகாசுரனொடு கிரவுஞ்ச கிரியை நொடி
தகர்த்து வருக என்று பதுமச்
செங்கைவேல் பணிகொண்ட அணிகொண்ட சேவகா
செங்கீரை ஆடி அருளே
தென்மயிலை தழையவரு சேனா பதித் தலைவ
செங்கீரை ஆடி அருளே. 14

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அடி - 1-4) ஐராவதம் அசுரர்களுக்கஞ்சிக் காட்டை யடையாமலும், தேவர்கள் அசுரர்கள் இட்ட சிறைக் கூடத்தை யாடையாமலும், அசுரர்களால் விண்ணுலகம் அழிவு படாமலும், கற்பகத்தரு அவர்களால் வெட்டப் படாமலும், தேவர்களின் உணவாகிய அமுதத்தை அவர்கள் கொள்ளை கொண்டு செல்லாமலும், இந்திரன் அவர்களுக்குப் பணிந்து நில்லாமலும், இந்திராணியின் மங்கல அணி நீங்காமலுமிருக்கத் தாருகாசுரனையும் அவன் மறைந்த கிரவுஞ்சமலையையும் தகர்த்து வருமாறு திருக்கரத்துள்ள வேற்படையை விட்டருளிய சேவகா எனப் பொருள் கொள்க.

(அடி -2) கொங்கை -கொங்கு, மணம். ஐயீற்றுடைக் குற்றுகரம்.

(அடி -3) தாருகன் - சூரபதுமனின் இளவல். “குன்றுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்” (குறுந்தொகை) “விண்ணோர் சிறைமீட்ட தீரவேல்” “குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும், அன்றங் கமரிடர் தீர்த்ததுவும்......... மெய்விடா வீரன்கை வேல்” (திருமுருகு - பிற்பாடல்) என்பனவற்றால் முருகக் கடவுளது வேற்படையின் ஆற்றலை அறிக.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மான்நாகம் எட்டின் பணாமணி மழுங்காமல்
வரைமார்பின் மணிமழுங்க
வானமணி மாசூர ஆசைதொறு மேகட்டு
மத்தமால் யானையெட்டும்
ஆனாது மும்மதம் பொழியுங் கவுட்குன்
டடைப்பப் புடைத்தெற்றிநீ
டம்புரா சிகளேழும் வற்றிக் குழம்புபட
அவுணர்குல மடமாதரார்
ஊனாடல் வேற்கண் புதைப்பக் கொடுஞ்சமர்
உழந்தெதிர் எழுந்தசூரன்
உள்ளமும் புலரவாய் புலரமுக மும்புலர
உலகமுழு தும்பரந்து
சேனா பராகந் திளைப்பவமர் பொருமுருக
செங்கீரை யாடியருளே
தென்மயிலை தழையவரு சேனா பதித்தலைவ
செங்கீரை யாடியருளே 15

மால் நாகம் எட்டின் பணாமணி மழுங்காமல்
வரைமார்பின் மணி மழுங்க
வானமணி மாசூர ஆசைதொறு மேகட்டு
மத்தமால் யானை எட்டும்
ஆனாது மும்மதம் பொழியும் கவுட்குன்று
அடைப்பப் புடைத்து எற்றிநீடு
அம்புராசிகள் ஏழும் வற்றிக் குழம்புபட
அவுணர்குல மடமாதரார்
ஊன்ஆடல் வேல்கண் புதைப்பக் கொடும்சமர்
உழந்து எதிர் எழுந்தசூரன்
உள்ளமும் புலரவாய் புலர முகமும் புலர
உலகம் முழுதும் பரந்து
சேனா பராகம் திளைப்ப அமர் பொரு முருக
செங்கீரை ஆடி அருளே
தென்மயிலை தழையவரு சேனா பதித் தலைவ
செங்கீரை ஆடி அருளே.

முருகக் கடவுளின் பூதப்படைகளாலுண்டான புழுதி எவ்விடத்தும் பரவியதைக் கூறுகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மணி மழுங்க, மணிமழுங்க, மாசூர, கவுட்குண்டடைப்ப, குழம்புபட, புதைப்ப, புலர, புலர, புலர, பரந்து சேனாபராகந் திளைப்ப அமர் பொரு முருக என்க.

(அடி - 1) மால்நாகம் எட்டு -எட்டுத்திக்கிலுமுள்ள நாகங்கள். அவை : வாசுகி, அனந்தன், தக்கன், சங்கன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடன், பணாமணி - படத்திலுள்ள மணி. மால் - திருமால், மணி - கவுத்துவமணி, வானமணி - சூரியன். ஆசை - திக்கு. எட்டுத்திசையானைகள்: அயிராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம்,சுப்பிரதீகம்.

(அடி - 2,3) மும்மதம் - கன்னமதம், கபோல மதம், பீஜமதம், கவுள் குண்டு - கன்னத்திலுள்ள பள்ளம். அம்பு ராசிகள் ஏழும் - ஏழுகடல்களும், சூரன் -சூரபதுமன்.

(அடி - 4) சேனாபராகம் - சேனைகளாலுண்டான புழுதி "எழுதருஞ் சேனாபராகம் விண்படர்ந்து" (கூர்மபுராணம்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேறு

எம்முடைய வல்வினை இருகட லுடனோர்
எழுகட லுஞ்சுவற
ஈறில் இடும்பை யெனுங்குவ டுடனெதிர்
இகல்குவ டுந்தகர
மும்மல வேருடன் அடல்புரி வெஞ்சூர்
முதலெவ ரும் பொருது
முரிபுரு வக்கடை சிறிது குனித்து
முனிந்தடு சங்க்ராம
நம்மினும் இவனதி கம்மென அளிகூர்
நளின பதத்துணைகள்
நமவென இனிது வணங்கி மறைப்பொருள்
நவில்கென வுபதேசித்
தைம்முக னுக்கருள் அறுமுக குருபரன்
ஆடுக செங்கீரை
அணிதரு மயிலையில் வருமுரு கன்குகன்
ஆடுக செங்கீரை. 16

எம்முடைய வல்வினை இருகடல்உடன் ஓர்
எழுகடலும் சுவற
ஈறுஇல் இடும்பை எனும் குவடு உடன் எதிர்
இகல் குவடும் தகர
மும்மல வேருடன் அடல்புரி வெஞ்சூர்
முதல் எவரும் பொருது
முரிபுருவக் கடை சிறிது குனித்து
முனிந்து அடு சங்கிராம
நம்மினும் இவன் அதிகம் என அளிகூர்
நளின பதத்துணைகள்
நமவென இனிது வணங்கி மறைப்பொருள்
நவில் கென உபதேசித்து
ஐம்முகனுக் அருள் அறுமுக குருபரன்
ஆடுக செங்கீரை
அணிதரு மயிலையில் வருமுருகன் குகன்
ஆடுக செங்கீரை. 16

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA)

சுவற, தகர, பொருது, அடுசங்க்ராம எனவும், வணங்கி, நவில்கென, அருள் அறுமுக குருபரன் எனவும் கூட்டுக.

(அடி - 1) வல்வினை - நல்வினை, தீவினைகள், வல்வினை இருகடல் - உருவகம் இடும்பை -பிறவித் துன்பம், அவை : 1. ஆதிதைவிகம் - தெய்வங் காரணமாக வரும் கருவிற்றுயர். உதித்தற்றுயர் முதலியன. 2. ஆதி பௌதிகம் - பனி, இடி, வாடை முதலியவற்றால் வருவன. 3. ஆத்தியான் மிகம் - தன்னாலும் பிறரராலும் வருவன. இடும்பை யெனுங்குவடு - உருவகம். எதிர் இகல் குவடு - எதிர்ப்பட்ட பகையாகிய கிரவுஞ்சமலை.

(அடி -2) மும்மல வேர் - மும்மலமாகிய கிழங்கு "மும்மலக் கிழங்கை முதலொடும் அகழ்ந்து" (பண்டார மும்மணிக் கோவை) மும்மலம் - ஆணவம், மாயை, கன்மம், வெஞ்சூர் முதலெவரும் - கொடி சூரபதுமன் முதலிய யாவரையும் சங்க்ராம- போரையுடையவனே.

(அடி - 3) நம - வணக்கம். மறைபொருள் - ஈண்டுப் பிரணவப் பொருள்.

(அடி - 4) ஐம்முகன் - சத்தியோசாதம், வாமதேவாம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்னும் ஐந்து திருமுகங் களையுடைய சிவபெருமான்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

சோதி தருங்கன கத்திரு நாடுஞ்
சுரரும் சுரர்பதியுந்
துளவ மணங்கமழ் புயமுழு தானுந்
துளைநா ளப்பதுமப்
போதில் வருஞ்சது ரானன னுந்திகழ்
புரிநூல் முனிவரரும்
பூதல முமெழு பாதல மும்படு
புன்கண் ணவைதீரப்
பாதி சிவந்தொரு பாதியு மென்னப்
பச்சென இச்சையுடன்
பவளக் கிரியைத் துவளப் பொருது
பகுந்து கலந்தருளும்
ஆதி பரம்பரை அருளிய சண்முகன்
ஆடுக செங்கீரை
அணிதரு மயிலையில் வருமுரு கன்குகன்
ஆடுக செங்கீரை. *17*

சோதி தரும் கனகத் திருநாடும்
சுரரும் சுரர்பதியும்
துளவ மணங் கமழ் புய முழுதானும்
துளை நாளப் பதுமப்
போதில் வரும் சதுரானனனும் திகழ்
புரிநூல் முனிவரரும்
பூதலமும் எழுபாதலமும் படு
புன்கண் நவைதீரப்
பாதி சிவந்து ஒரு பாதியும் என்னப்
பச்சென இச்சையுடன்
பவளக் கிரியைத் துவளப் பொருது
பகுந்து கலந்து அருளும்
ஆதி பரம்பரை அருளிய சண்முகன்
ஆடுக செங்கீரை
அணிதரு மயிலையில் வருமுருகன் குகன்
ஆடுக செங்கீரை. **17**

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

மூவுலகத்தோரது துன்பம் நீங்க அவதரித்தவர் முருகக் கடவுளென்பது கூறப்படுகின்றது.

புண்கண்தீர, அருளிய, சண்முகன், செங்கீரை ஆடுக என்க.

(அடி -1) கனகத் திருநாடு - பொன்னாடு, சுரர்பதி - இந்திரன், துளவ மணங்கமழ் புய முழுதானும் - திருமாலும்.

(அடி -2) சதுரானன் - நான்முகன், பிரமன், புன்கண் - துன்பம்,

(அடி -3,4) பாதியும் பச்சென என்ன -மற்றொரு பாதியம் பச்சையென்று சொல்லும்படி. பவளக் கிரி - பவள மலை போலும் செந்நிறமுடைய சிவபெருமான்.

"பாதிசிவந்தொரு ...... ஆதிபரம்பரை" என்றது சிவபெருமானுடைய இடப்பாகத்திற் கலந்த உமை வடிவத்தைக் குறித்தது." ஒருபுறம் பசந்துள சுவைதரு செங்கனி" (பிரபு)

பரம் பரை -மேலான சிவசத்தி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நறுமலர் குடுமி வகிர்ந்து புனைந்து
நலந்திகழ் வித்தேமு
நானநெய் பூசி மணிச்சிறு சுட்டி
நயந்து தரித்தேமும்
இறுகிய காதலின் உன்னை அழேலென
இனிதின் அணைத்தேமும்
இலகுபொன் அரைவடம் ஐம்படை யாரம்
எடுத்தணி தந்தேமும்
மறுவின் மணிச்சிறு தண்டை சதங்கை
வனைந்து பணிந்தேமும்
வண்பது மத்தொரு தொட்டில் அசைத்திரு
வருமுலை யமுதருளும்
அறுவரும் அன்னையர் அனைவரு மகிழ்வர
ஆடுக செங்கீரை
அணிதரு மயிலையில் வருமுரு கன்குகன்
ஆடுக செங்கீரை. 18

நறுமலர் குடுமி வகிர்ந்து புனைந்து
நலந்திகழ் வித்தேமு
நானம் நெய் பூசி மணிச்சிறு சுட்டி
நயந்து தரித்தேமும்
இறுகிய காதலின் உன்னை அழேல் என
இனிதின் அணைத்தேமும்
இலகுபொன் அரைவடம் ஐம்படை ஆரம்
எடுத்து அணிதந்தேமும்
மறுவின் மணிச்சிறு தண்டை சதங்கை
வனைந்து பணிந்தேமும்
வண்பதுமத்து ஒரு தொட்டில் அசைத்து இரு
வருமுலை அமுது அருளும்
அறுவரும் அன்னையர் அனைவரும் மகிழ்வர
ஆடுக செங்கீரை
அணிதரு மயிலையில் வருமுரு கன்குகன்
ஆடுக செங்கீரை. 18

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கார்த்திகைப் பெண்களாகிய தாய்மார் அறுவரும் தாம் மகிழுமாறு செங்கீரை ஆடுக என வேண்டிக் கோடல்.

(அடி - 1,4) இச்செய்யுளில் அவ்வன்னையர் அறுவரும் முருகனாகிய குழந்தைக்கு இயற்றிய பணிகள் கூறப்பட்டுள்ளன.

நானம் -புனுக, அரைவடம் - இடையில் அணியும் அணி. ஐம்படையாரம் - ஐம்படைத் தாலி. முருகக்கடவுள் சரவணப் பொய்கையில் தாமரை மலரில் வளர்ந்தாரதலின் "வண்பதுமத் தொரு தொட்டில்" என்றார். "நளினத்துப் பிறவியை" (பரிபாடல்).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேறு

எங்களுயி ருக்குயி ரெனும்படி சிறந்தாய்
இன்பா லன்பாக
எங்குநிறை வுற்றுமெ மருங்கினி லிருந்தாள்
எந்தாய் வன்பால
வெங்கள்பொழி யத்துணர் விரிந்தலர் கடம்பா
வெஞ்சூர் பஞ்சாகி
விண்டமரி னுக்குடைய முன்சம ருடன்றே
வெந்கா ணுந்தீர
தங்கள்குறை யற்றதென உம்பர்பணி யுந்தாள்
தந்தா ளுஞ்சீல
தந்திதரு பொற்றொடி அரும்பிய தனந்தோய்
அசைந்தா டுந்தோள
திங்கள்முடி வைத்தவர் பயின்றதிரு மைந்தா
செங்கோ செங்கீரை
செம்பொன்மயி லைக்கிரி யுகந்துவளர் கந்தா
செங்கோ செங்கீரை. 19

எங்கள் உயிருக்கு உயிர் எனும்படி சிறந்தாய்
இன்பால் அன்பாக
எங்குநிறை வுற்றும் எம் மருங்கினில் இருந்தாள்
எந்தாய் வன்பால
வெங்கள் பொழியத் துணர் விரிந்துஅலர் கடம்பா
வெஞ்சூர் பஞ்சாகி
விண்தமரி னுக்குடைய முன் சமருடன்றே
வெந் காணுந்தீர
தங்கள்குறை அற்றது என உம்பர்பணியும் தாள்
தந்து ஆளும் சீல
தந்திதரு பொற்றொடி அரும்பிய தனந்தோய்
அசைந்தாடும் தோள
திங்கள்முடி வைத்தவர் பயின்ற திருமைந்தா
செங்கோ செங்கீரை
செம்பொன் மயிலைக்கிரி உகந்துவளர் கந்தா
செங்கோ செங்கீரை. 19

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அடி - 1,4) எங்கும் நிறைவுற்றும் - எவ்விடத்தும் வியாபித்திருந்தும் எம் மருங்கினில் - எங்கள் இடையில். வெம்கள் பொழி அதுணர் - விரும்பத் தக்க தேனைப் பொழிகின்ற அழகிய பூங்கொத்து. வெஞ்சூர் - கொடிய சூரபதுமன். பஞ்சாகி - பஞ்சைப் போல வலிமையற்று. வெந் - புறம், முதுகு தந்திதரு பொற்றொடி - தெய்வானைம்மையார். தனந்தோய் தோள, அசைந்தாடும் தோள என்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஐங்கரவ னுக்கிளைய தம்பியெனு நம்பா
*அந்தார் செந்தார
அண்டர்சர ணத்துணை பணிந்திட அணைந்தே
அன்பார் செந்தூர
பங்கய மலர்த்தவி சயன்செயல் புரிந்தே
பண்டா ளுந்தேவ
பந்தமற முத்திநெறி தந்தருள் பொழிந்தே
பண்போ தும்போத
வெங்கரி யுகைத்துவரும் இந்திரன் அயர்ந்தே
(1) வெங்கோ தம்போக
விண்டல நடுக்கமுற வந்தம ருடன்றே
வென்றே நின்றாடுஞ்
சிங்கமுக னுக்குமொரு சிங்கமென வந்தாய்
செங்கோ செங்கீரை
செம்பொன்மயி லைக்கிரி யுகந்துவளர் கந்தா
செங்கோ செங்கீரை. 20

ஐங்கரவனுக்கு இளைய தம்பி எயனு நம்பா
*அந்தார் செந்தார
அண்டர் சரணத்துணை பணிந்திட அணைந்தே
அன்பார் செந்தூர
பங்கய மலர்த்தவிசு அயன்செயல் புரிந்தே
பண்டு ஆளும் தேவ
பந்தம்அற முத்திநெறி தந்து அருள்பொழிந்தே
பண்போதும் போத
வெங்கரி உகைத்துவரும் இந்திரன் அயர்ந்தே
(1) வெங்கோதம் போக
விண்தலம் நடுக்கமுற வந்து அமருடன்றே
வென்றே நின்றாடும்
சிங்கமுகனுக்கும் ஒரு சிங்கமென வந்தாய்
செங்கோ செங்கீரை
செம்பொன்மயி லைக்கிரி யுகந்துவளர் கந்தா
செங்கோ செங்கீரை. 20

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஐங்கரவன் -விநாயகக்கடவுள். நம்பா - இறைவனே

(அடி - 1) அம் தார் - செந்தார - அழகிய ஒழுங்காயணியப் பெற்ற செம்மையான மாலையையுடையவனே. அண்டர் - தேவர், செந்தூர - திருச்செந்தூரில் எழுந்தருளியிருப்பவனே.

(அடி - 2) அயன்செயல் புரிந்தது : முருகக் கடவுள்பிரணவப் பொருளை வினவியகாலை நான்முகன் கூற அறியாததால் அவனைக் குட்டிக் கந்தவெற்பில் சிறையிட்டார். அந்நான்முகன் புரிந்த படைத்தல் தொழிலைத் தாமே செய்தருளினார். போத - ஞானத்தையுடையவனே.

(அடி -4) சிங்கமுகன்- சிங்கமுகாசுரன், சூரபதுமனின் இளவல்.

* வந்தார் சிந்தார - பி-ம். (1) வெங்கோதம் போத - பி-ம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. தாலப் பருவம்
வேறு

அரும்பு கருணை மாரிசொரிந்
தன்பு பூண்டா ரனைவருக்கும்
ஆண வாதிப் பாசங்கள்
அகற்றித் தாபத் திரையந் தணிய
இரும்பு போலு மனங்களையும்
இளக்கி யுளக்கண் கொடுத்தருளி
ஈடேற் றுதற்கே யெழுந்தருளும்
<u>எங்கள் செல்வச் சிவஞானி</u>
கரும்பு பொழிந்த செழும்பாலே
கனியில் வடித்த கொழுஞ்சாறே
கண்டு கேட்டுண் டுயிர்த்துற்றுக்
களிக்கு மமுதே யென்றென்று
விரும்பி நுகரும் பேரின்ப
விளைவே தாலோ தாலேலோ
வீறு மயிலை மலையின்மணி
விளக்கே தாலோ தாலேலோ 21

அரும்பு கருணை மாரிசொரிந்து
அன்பு பூண்டோர் அனைவருக்கும்
ஆணவ ஆதிப் பாசங்கள்
அகற்றித் தாபத் திரையம் தணிய
இரும்பு போலும் மனங்களையும்
இளக்கி உளக்கண் கொடுத்துஅருளி
ஈடேற் றுதற்கே எழுந்துஅருளும்
<u>எங்கள் செல்வச் சிவஞானி</u>
கரும்பு பொழிந்த செழும்பாலே
கனியில் வடித்த கொழுஞ்சாறே
கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றுக்
களிக்கும் அமுதே என்று என்று
விரும்பி நுகரும் பேரின்ப
விளைவே தாலோ தாலேலோ
வீறு மயிலை மலையின்மணி
விளக்கே தாலோ தாலேலோ 21

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருட் செல்வராகிய சிவஞானியின் பெருமையும், அவர் முருகக்கடவுளைப் பாராட்டும் சிறப்பும் கூறப்படுகின்றன.

அனைவருக்கும், சொரிந்து, அகற்றி, இளக்கி; கொடுத்தருளி, ஈடேற்றுதற்கே எழுந்தருளும் சிவஞானி எனவும், சிவஞானி, பாலே, சாறே, அமுதே, என்றென்றும் நுகரும் விளைவே எனவும் இயைக்க.

(அடி-1) அரும்பு - உண்டாகின்ற. ஆணவாதிப்பாசங்கள்: ஆணவம் - மாயை - கன்மம், தாபத்திரையங்கள் - மூவகைத்தாபங்கள் அவை : ஆத்தியான்மிகம் - ஆதிதைவிகம் - ஆதிபௌதிகம். மண் - பொன் - பெண்ணாசை யெனவும் உரைப்பர்.

(அடி - 2) உளக்கண் - ஞானக்கண், ஈடேற்றுதல் - பிறவியினின்றும் நீக்கல்.

(அடி - 3,4) கனி - வாழை, மா, பலா என்ற முக்கனிகள்.

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றுக் களிக்கும் அமுதே - கண்ணால் கண்டும், செவியால் கேட்டும், உண்டும், மூக்கால் மோந்தும், மெய்யால் தீண்டியும் களிப்புறுதற்கேதுவான அமுதமே. அன்பர்கள் தம் ஐம்பொறிகளுக்கும் ஒரு காலத்தே இன்பம் பயக்கும் சிறப்பு நோக்கி இங்ஙனம் உரைத்தார்.

"கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும்" (குறள் - 1101) வீறு - வேறொன்றிற்கில்லாத அழகு என்பர் நச்சினார்க்கினியர் (சிந்தா - கோவிந் -செய் -81)

மணிவிளக்கே - இரத்தின தீபமே. மலையில் மணி தோன்று மாதலின் அவ்வியைபு பற்றி, "மலையின் மணி விளக்கே" என்றார். "மலையிடைப் பிறவா மணியே என்கோ" (சிலப்பதிகாரம்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வள்ளன் மௌலி மீதேறி
மலர்ந்த இதழி நறுந்தெரியல்
மாற்றா யிரம்பெற் றொளிதழைத்து
வயங்கும் பசும்பொற் சரக்காக
அள்ளி அணிந்த தும்பை யம்போ
தடுத்த வெள்ளிக் குவையாக
அருகே யசைந்து பணங்கள்விரித்
தாடும் அரவந் துடுப்பாகப்
பிள்ளை மதிய மோடுமொரு
பீடார் தோணி யதுவாகப்
பெரிது மோட்டி வேணியந்தார்
பிணித்துக் களித்துத் திளைத்தாடி
வெள்ளை நதியில் விளையாடும்
வேலா தாலோ தாலேலோ
வீறு மயிலை மலையின்மணி
விளக்கே தாலோ தாலேலோ 22

வள்ளல் மௌலி மீதுஏறி
மலர்ந்த இதழி நறுந்தெரியல்
மாற்றுஆயிரம் பெற்றுஒளி தழைத்து
வயங்கும் பசும்பொன் சரக்காக
அள்ளி அணிந்த தும்பை அம்போது
அடுத்த வெள்ளிக் குவையாக
அருகே அசைந்து பணங்கள் விரித்து
ஆடும் அரவம் துடுப்பாகப்
பிள்ளை மதிய மோடும்ஒரு
பீடார் தோணி அதுவாகப்
பெரிதும் ஓட்டி வேணிஅந்தார்
பிணித்துக் களித்துத் திளைத்து ஆடி
வெள்ளை நதியில் விளையாடும்
வேலா தாலோ தாலேலோ
வீறு மயிலை மலையின் மணி
விளக்கே தாலோ தாலேலோ 22

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

முருகன் சிவபெருமானிடத்து விளையாடுதலைக் குறிக்கின்றது. இதழி, பசும்பொன் சரக்காக, தும்பையம்போது, வெள்ளிக்குவையாக, அரவம், துடுப்பாக, பிள்ளைமதியம். தோணியாக, வேணியந்தார் பிணித்து, வெள்ளை நதியில் விளையாடும் வேலா என்க.

(அடி -1) வள்ளல் - அன்பர்க்கு வீடுபேற்றினை யளிக்கும் அருள் வள்ளலாகிய சிவபெருமான், மௌலி -முடி, இதழி - கொன்றைமலர்.

(அடி -2) வெள்ளிக்குவை - வெள்ளிக்குவியல், துடுப்பு - தோணியைத் தள்ளும் கோல்.

(அடி - 3) தார் - கயிறு, வேணியந்தார் - சடையாகிய கயிறு. பிள்ளை மதியம் - இளஞ்சந்திரன்.

(அடி - 4) வெள்ளைநதி - கங்கை (கங்கை வெண்ணிறமுடையது)

முருகப்பெருமான் இளைய பிள்ளையாதலின் தந்தையாகிய சிவபெருமானுடைய முடிமீதேறி, ஆங்குள்ள இளஞ் சந்திரனைத் தோணியாகவும்,கொன்றை மலரைப் பொற் சரக்காகவும், தும்பை மலர்களை வெள்ளிச் சரக்காகவும் அதில் ஏற்றிப் பாம்பைத் துடுப்பாகவும் கொண்டு கங்கை யாற்றில் செலுத்திப் பின் அதனைச் சடையாகிய கயிற்றில் கட்டி நிறுத்தி விளையாடுதலாக ஆசிரியர் கற்பித்துரைக்குந்திறனை காண்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வழியும் புனல்பெய் யொருகலசம்
வயிறு வாய்த்த குறுமுனிக்கு
வடநூற் கடலும் அமுதொழுக
வடித்த மதுரத் தமிழ்க்கடலு
முழுதும் புகட்டி யதுவன்றி
முடவெண் டிரைகள் சுருட்டியெறி
முந்நீர்ப் பரவை யொருமுறையின்
முற்றும் பருக அருளுதவி
அழிவில் பொருளாய்ப் பரஞ்சுடராய்
ஆதி நடுவந் தமுமின்றி
அகண்டா காரச் சின்மயமாய்
அமர்ந்த முக்கட் பெரும்பெருமான்
விழியொன் றினில்வந் தீராறு
விழிகள் படைத்தாய் தாலேலோ
வீறு மயிலை மலையின்மணி
விளக்கே தாலோ தாலேலோ 23

வழியும் புனல்பெய் ஒருகலசம்
வயிறு வாய்த்த குறுமுனிக்கு
வடநூல் கடலும் அமுது ஒழுக
வடித்த மதுரத் தமிழ்க் கடலும்
முழுதும் புகட்டி அதுஅன்றி
முடவெண் திரைகள் சுருட்டி எறி
முந்நீர்ப் பரவை ஒருமுறையின்
முற்றும் பருக அருள்உதவி
அழிவில் பொருளாய்ப் பரஞ்சுடராய்
ஆதி நடு அந்தமும் இன்றி
அகண்டா காரச் சின்மயமாய்
அமர்ந்த முக்கண் பெரும்பெருமான்
விழி ஒன்றினில் வந்து ஈர்ஆறு
விழிகள் படைத்தாய் தாலேலோ
வீறு மயிலை மலையின்மணி
விளக்கே தாலோ தாலேலோ 23

Digitization by Hindu-Heritage-Foundation of America -HHFA(USA)

(அடி - 1,2) குறுமுனி - அகத்திய முனிவர். வயிறு வாய்த்தல் - பிரசவித்தல் என்னும் குறிப்பு மொழி

முந்நீர்ப்பரவை - படைத்தல், காத்தல், அழித்தலென்னும் மூன்று தன்மையைப் பெற்ற கடல்.

"முடவெண்டிரைகள்... முற்றும் பருக" - அகத்தியர் கடலையருந்திய வரலாறு. இந்திரன் விருத்திராசுரனைக் கொல்லப் போர் புரிந்த காலை அவ்விருத்திராசுரன் கடலில் மறைந்தான். இந்திரன் அகத்தியரை வேண்டிக்கொள்ள் அகத்தியர் கடலை அருந்தினார். ஆண்டுக் காணப்பட்ட அவ்வசுரனை இந்திரன் கொன்றான்.

(அடி - 3) அழிவில் பொருளாய் -நித்தியமாய். பரஞ்சுடராய் - பேரொளியாய். ஆதி நடு அந்தமுமின்றி - தோற்றமும். நிற்றலும் அழிவுமின்றி, சின்மயமாய் - அறிவு மயமாய்.

(அடி -4) விழி ஒன்று - நெற்றிக்கண்.. ஈராறு விழிகள் - பன்னிரு விழிகள். "விழியொன்றினில் வந்து ஈராறு விழிகள் படைத்தாய்" என்பதன் நயங் காண்க.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

வேறு

மந்தா கினிதன் மகவே மகவான்
வானத் தரசாள
வருகே சரியே பணிபூ சுரர்தம்
வாழ்வே வாழ்வுதரும்
எந்தா யகமே எளியேம் உயிரே
இமைய மடக்கொடிதன்
எழின்முக பங்கய மலர வுதித்த
இளங்கதி ரேகதிர்சூழ்
சிந்தா மணியே இருகண் மணியே
தேவர் சிகாமணியே
தெள்ளா ரமுதே கள்ளார் நீபத்
தெரியல் புனைந்தருளுந்
தந்தா வளமே மயிலைக் கரசே
தாலோ தாலேலோ
சமர விபாடன முகர சடானன
தாலோ தாலேலோ **24**

மந்தா கினி தன் மகவே மகவான்
வானத்து அரசுஆள
வருகேசரியே பணி பூசுரர்தம்
வாழ்வே வாழ்வுதரும்
எம்தாயகமே எளியேம் உயிரே
இமைய மடக்கொடிதன்
எழில்முக பங்கய(ம்) மலர உதித்த
இளங்கதிரே கதிர்சூழ்
சிந்தாமணியே இருகண் மணியே
தேவர் சிகாமணியே
தெள்ஆர் அமுதே கள்ஆர் நீபத்
தெரியல் புனைந்த அருளும்
தந்தா வளமே மயிலைக்கு அரசே
தாலோ தாலேலோ
சமர விபாடன முகர சடானன
தாலோ தாலேலோ **24**

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அடி - 1) மந்தாகினி தன் மகவே - கங்கையின் புதல்வனே. காங்கேயன் என்பது முருகக் கடவுளுக்கோர் திருநாமம். "கிழவியாகிக் கிரிக்கோன் மகப்பெறும் அழகு நீர்மகள்" (பிரபு) மகவான் - இந்திரன். கேசரி - சிங்கம்.

(அடி - 2) "இமைய மடக்கொடிதன், எழின்முக பங்கய மலர வுதித்த இளங்கதிரே" உமையம்மையை "இமைய மடக்கொடி" என்றதற்கேற்ப அவரது திருமுகத்தைத் தாமரைமலராகவுருவகித்தும், முருகப்பெருமானின் தோற்றத்தைக் கண்டு உமையம்மையார் உற்ற உள்ளு வகையால் முக மலர்ச்சி யுற்றாராதலின் முருகப்பெருமானை "மலர வுதித்த இளங்கதிரே" எனவும் கூறியுள்ள நயத்தைக் காண்க.

(அடி - 3) சிந்தாமணியே - அன்பர் எண்ணியதை எண்ணியவாறே அருளுபவனாதலின் "சிந்தாமணியே" என விளித்தார். நீபத்தெரியல் - கடப்ப மலர் மாலை.

(அடி - 4) சமர விபாடன - போரை அழிப்பவனே. சட்+ ஆனை = சடாசனன, ஆறு திருமுகங்களையுடையவனே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு சிற் பரனே தமிழ்விற் பனனே
உலகமெ லாமுதவும்
உமையவள் உயிரே எமையினி தாள
உகந்த கிரு பாநிதியே
அருமைத் தனமே ஒருமைக் கதியே
அவுணர் குலப்பகையே
அண்டர்க் குறவே தொண்டர்க் கிணையா
அருண்மழை மாரிபெயுங்
குருவித் தகனே எழிலற் புதனே
குஞ்சரி மஞ்சரியுங்
கொடிய கிராதர் குலக்கொடி யும்புணர்
*கோவே யாவினையும்
தருகற் பகமே மயிலைக் கரசே
தாலோ தாலேலோ
சமர விபாடன முகர சடானன
தாலோ தாலேலோ 25

ஒரு சிற் பரனே தமிழ்விற் பனனே
உலகம் எலாம் உதவும்
உமையவள் உயிரே எமைஇனிது ஆள
உகந்த கிருபாநிதியே
அருமைத் தனமே ஒருமைக் கதியே
அவுணர் குலப்பகையே
அண்டர்க் குறவே தொண்டர்க்கு இணையா
அருள்மழை மாரிபெயும்
குருவித்தகனே எழில் அற்புதனே
குஞ்சரி மஞ்சரியும்
கொடிய கிராதர் குலக்கொடியும் புணர்
*கோவே யாவினையும்
தருகற் பகமே மயிலைக் கரசே
தாலோ தாலேலோ
சமர விபாடன முகர சடானன
தாலோ தாலேலோ 25

Digitization by Hindu-Heritage-Foundation of America :HHFA(USA)

(அடி - 1) ஒரு சிற்பரனே - ஒப்பற்ற இறைவன். தமிழ் விற்பனனே - தமிழை அறிந்தவனே, உலக மெலாம் உதவும் உமையவள் உயிரே - அகில உலகங்களையும் ஈன்ற உமையம்மைக்கு உயிர் போன்றவனே, "அகனுலகம் எண்ணிறந்த சராசரங்க ளீன்றுந் தாழா, கொங்கயற் கண்மலர்க் கூந்தல் குமரி" (திருவிளை - புராணம்) "பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்த வண்ணம் காத்தவளே" (அபிராமியந்தாதி)

(அடி - 2,4) ஒருமைக்கதியே - ஒப்பற்ற வீட்டின்பமே, குஞ்சரி மஞ்சரி - தெய்வயானையாகிய பூங்கொத்து, கிராதர் குலக்கொடி -வள்ளிநாயகி.

* கோவே யெப்பொருளும்-பி.ம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உத்திப் பன்மணி ராசிகள் பற்பகல்
உண்ட செழுங்கதிர்கள்
உமிழ்வது போலத் திசைதிசை தோறும்
உதிர்ந்துக மீது துயில்
நத்துக் கரதலன் ஒருபால் ஒருபால்
நாபிக் கமலத்தோன்
நளினத் தவளணி மணியொரு பால்விழ
நாகா திபன்வெருவக்
கொத்திக் கடிதின் எடுத்துத றிக்களி
கொண்டினி தாடுமயில்
குரகத மேறிப் பஃறலை யருவி
குதித்துக் குவடுதொறுந்
தத்துப் பொருமயி லைக்கிரி வருவாய்
தாலோ தாலேலோ
சமர விபாடன முகர சடானன
தாலோ தாலேலோ. *26*

உத்திப் பன்மணி ராசிகள் பற்பகல்
உண்ட செழுங்கதிர்கள்
உமிழ்வது போலத் திசைதிசை தோறும்
உதிர்ந்து உக மீது துயில்
நத்துக் கரதலன் ஒருபால் ஒருபால்
நாபிக் கமலத்தோன்
நளினத் தவளணி மணியொரு பால்விழ
நாகாதிபன் வெருவக்
கொத்திக் கடிதின் எடுத்து உதறிக் களி
கொண்டு இனிது ஆடுமயில்
குரகதம் ஏறிப் பஃறலை அருவி
குதித்துக் குவடுதொறும்
தத்துப் பொருமயிலைக் கிரி வருவாய்
தாலோ தாலேலோ
சமர விபாடன முகர சடானன
தாலோ தாலேலோ. 26

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முருகக் கடவுளின் ஊர்தியாகிய மயிலின் சிறப்புக் கூறப்படும். உதிர்ந்துக, நத்துக் கரதலன் ஒருபால், நாபிக் கமலத்தோன்ஒருபால், நளினத்தவள் (உம்) மணி(உம்) ஒருபால் விழ, வெருவக் கொத்தி, உதறி, ஆடு மயில் என்க.

(அடி -1) "உத்திப்பன்மணி.... உதிர்ந்துக" ஆதி சேடனுடைய முடியின்கண் உள்ள பல இரத்தினத் தொகுதிகள் முன்னர்ப் பலநாள் உண்ட சூரிய சந்திரர்களை யுமிழ்வது போலப் பல திக்குகளிலும் சிந்த.

(அடி -2) நத்து - நந்து, சங்கு (வலித்தல் விகாரம்) நத்துக்கரதலன் -திருமால், ஒருபால் -ஒருபக்கம், நாபிக்கமலத்தோன் -திருமாலின் உந்தித் தாமரையிலுள்ள பிரமன். நளித்தவள் - திருமகள். மணி -கவுத்துமணி. நாகாதிபன் - ஆதிசேடன்.

(அடி - 3) மயில் குரகதம் - மயிலாகிய குதிரை. பல் + தலை + அருவி = பஃறலையருவி. பலபக்கங்களிற் செல்லும் அருவி.

இச்செய்யுள். "பொறியொரு புடையில் வளையொரு புடையில் இரவியி னிருளை நாமறத் தீர்த்தெரி, மணிமிளிர் திகிரி யொடுபல வணிகள் முடியொரு புடையிலாருயிர்க் காப்புறு, புயினிற வடிவ அரியொரு புடையில் விழவர வணையை வானுறத் தூக்குவு, மறிதிரை கதறு கடலிடை யுதறு பொறிமயில் கடவுவீரன் மெய்ச் சீர்த்தியன்" (சிவஞான பாலைய தேசிகர் பிள்ளைத் தமிழ்) என்னும் அடிகளின் பொருள் கொண்டிருத்தலை அறிக.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உருவத் தனதட அமர மடந்தையர்
ஒளிமணி நிரைவாரி
உயர்சிக ரந்தவழ் மாலைவெள் ளருவியின்
ஊடு படிந்தாடச்
செருவித் தொழில்பயில் வனசர மங்கையர்
செங்கனி வாய்வெளிறச்
சேல்பொரு விழிகள் சிவப்பச் சுரநதி
சென்று குடைந்தாடப்
பருவப் பசுமுட் புறவண் கனிதரு
பலவி னெடுஞ்சினையில்
பைம்பொற் கரவில தைப்பட ரத்துணர்
பசிய கறிக்கொடிகள்
தருவிற் படரு மயிலைக் கிரியாய்
தாலே தாலேலோ
சமர விபாடன குமர சடானன
தாலே தாலேலோ 27

உருவத் தனதட அமர மடந்தையர்
ஒளிமணி நிரைவாரி
உயர்சிகரம் தவழ் மாலைவெள்அருவியின்
ஊடு படிந்து ஆடச்
செருவித் தொழில்பயில் வனசர மங்கையர்
செங்கனி வாய்வெளிறச்
சேல்பொரு விழிகள் சிவப்பச் சுரநதி
சென்று குடைந்து ஆடப்
பருவப் பசுமுள் புறவண் கனிதரு
பலவின் நெடுஞ்சினையில்
பைம்பொற் கரஇல தைப்படரத் துணர்
பசிய கறிக்கொடிகள்
தருவிற் படரு மயிலைக் கிரியாய்
தாலே தாலேலோ
சமர விபாடன குமர சடானன
தாலே தாலேலோ 27

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

அரமடந்தையர், வெள்ளருவி படிந்தாட : வனசர மங்கையர், வெளிற, சிவப்ப, சுரநதி குடைந்தாட : இலதை, நெடுஞ்சினையில் படர, கறிக்கொடிகள், தருவிற்படரும் மயிலைக்கிரி என்க.

(அடி - 1 ,4) உருவ - அழகிய, அமர மடந்தையர் - தேவமகளிர். வனசரமங்கையர் - வேடர்குலப்பெண்கள். சுரநதி - வான் கங்கை. பைம்பொன் கர இலதை படர - கரத்தை யொத்த பசிய பொற்கொடிகள் படர (வானுலகிலுள்ள ஒளிக் கொடி) கறிக்கொடி - மிளகுக் கொடி.

விண்ணுலகிலுள்ள அரமடந்தையர் மயில மலை யருவியில் முழுகி நீராட, மயில மலையிலுள்ள வேடர் குலப்பெண்கள் ஆகாய கங்கையில் நீராட, விண்ணுலகிலுள்ள ஒளிக்கொடிகள் மயில மலைக்கண் உள்ள பலா மரத்தில் படர, மயில மலையிலுள்ள மிளகுக் கொடிகள் கற்பகத் தருவில் படரும் மயிலைக்கிரி. உயர்வு நவிற்சியணி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தூவுந் துளிமழை பொழிதரு மேகஞ்
சூழ மதக்கலுழிச்
சொரிகரி யாமென வானின் மடங்கல்
தொடர்ந்து களப் பொதுளு
மாவும் பனசமும் வாழையு மீதுயர்
வழையுந் தழைசாரல்
வழியிற் குழியின் வந்து பதுங்கி
வதிந்துவிண் ணிடைமேட
மேவும் பொழுதிரு கால்கள் நிமிர்த்துகிர்
விட்டழல் விழிசுழல
வெம்புலி வாலை முறுக்கி யடித்தடல்
வெவ்வா யங்காந்து
தாவுங் குவடுயர் மயிலைக் கிரியாய்
தாலோ தாலேலோ
சமர விபாடன குமர சடானன
தாலோ தாலேலோ 28

தூவும் துளிமழை பொழிதரு மேகம்
சூழ மதக்கலுழிச்
சொரிகரியாம் என வானின் மடங்கல்
தொடர்ந்து களப் பொதுளு
மாவும் பனசமும் வாழையும் மீதுஉயர்
வழையும் தழைசாரல்
வழியிற் குழியின் வந்து பதுங்கி
வதிந்து விண்ணிடை மேட
மேவும் பொழுது இரு கால்கள் நிமிர்த்து உகிர்
விட்டுஅழல் விழிசுழல
வெம்புலி வாலை முறுக்கி அடித்தஅடல்
வெவ்வாய் அங்காந்து
தாவுங் குவடுஉயர் மயிலைக் கிரியாய்
தாலோ தாலேலோ
சமர விபாடன குமர சடானன
தாலோ தாலேலோ 28

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

மேகம் சூழ, கரியாமெென, வானின் மடங்கல் உகள, விண்ணிடை மேடம் மேவும் பொழுது, வெம்புலி , தாவும் குவடுயர் மலையாய் என்க.

(அடி -1) மதக்கலுழி - மதநீர்ப் பெருக்கு. வானின் மடங்கல் -சிங்கராசி. உகள - தாவ.

(அடி -2) பொதுளும் - நெடுங்கிய. பனசம் - பலா. வழை - சுரபுன்னை விண்ணிடை மேடம் -மேட ராசி; ஆட்டின் வடிவமாக வ்ுள்ளது.

(அடி - 3,4) உகிர்விட்டு - நகத்தை நீட்டி. வெவ்வாய் அங்காந்து - கொடிய வாயைத் திறந்து. குவடு - மலையுச்சி.

மயில மலைமீது மழைநீரைப் பொழிகின்ற மேகம் சூழ்ந்த போது அதனை மதநீரைச் சொரிகின்ற யானையென்று கருதி வானில் சஞ்சரிக்கும் சிங்கம் (சிங்கராசி) பாயா நிற்க, விண்ணில் சஞ்சரிக்கும் மேடராசி மயில மலையை அணுகும் போது ஆடு என்று கருதி அம்மலைச் சாரலிலுள்ள குழியில் பதுங்கியிருக்கும் புலி அதனைத் தாக்க வாலை முறுக்கியடித்து வெவ்வாயைத் திறந்து தாவும் உச்சியையுடைய மயிலைக்கிரி. இச்செய்யுள் மயக்க அணி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேறு

அழுதழுது கண்கள் பிசைந்தே
யோர்போ தோர்போதால்
அனைமடி யிருந்து மகிழ்ந்தே
பால்வா யோடேதான்
எழுதரிய திங்கள் முகம்பா
ராநே ராயேபோர்
இபமுக னணைந்தே வழிந்தே
சோர்பா லாராமே
குழலிசையை வென்று செழும்பா
கோடே மாறாயே
குலவிவடி கொண்ட பசுந்தே
னேபோல் ஆனாதே
மழலைமொழி கொஞ்சு குழந்தாய்
தாலே தாலேலோ
மயிலைமலை வந்த கடம்பா
தாலே தாலேலோ 29

அழுது அழுது கண்கள் பிசைந்தே
ஓர்போது ஓர்போதால்
அனைமடி இருந்து மகிழ்ந்தே
பால்வா யோடே தான்
எழுதஅரிய திங்கள் முகம்பாரா
நேராயே போர்
இபமுகன் அணைந்தே வழிந்தே
சோர் பால் ஆராமே
குழல் இசையை வென்று செழும்பா
கோடே மாறாயே
குலவிவடி கொண்ட பசுந்தே
னேபோல் ஆனாதே
மழலைமொழி கொஞ்சு குழந்தாய்
தாலே தாலேலோ
மயிலைமலை வந்த கடம்பா
தாலே தாலேலோ 29

Digitization by Hindu-Heritage-Foundation of America -HHFA(USA).

உமையம்மையாரிடம் முருகக் கடவுள் குழவிப் பருவச் செயல் புரிந்தமை கூறப்பட்டது.

ஓர் போது, கண்கள் பிசைந்து, ஓர் போது, அனை மடியிருந்து மகிழ்ந்து, முகம் பாரா (பார்த்து), அணைந்து, பால் ஆராமே, மழலை மொழி கொஞ்சு குழந்தாய் என்க.

(அடி - 1) போது - பொழுது, சமயம். அனை - அன்னை (இடைக்குறை)

(அடி -2) எழுத + அரிய = எழுதரிய (தொகுத்தல் விகாரம்) பாரா -பார்த்து (செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்) நேராய் போர் இபமுகன் அணைந்து - ஒன்றுபட்டு விநாயக் கடவுளுடன்கூடி.

(அடி - 3) குழல் - புல்லாங்குழல். ஆனாது - நீங்காமல். வடிகொண்ட - வடித்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அலகில் புகழ்கொண்டு சிறந்தாய்
வேறா யாகாமே
அகிலவுல கெங்கும் நிறைந்தாய்
நாவால் ஓதாமே
பலகலை தெரிந்து பகர்ந்தாய்
மீதூர் மாலாலே
பளியர் குலமங்கை புணர்ந்தாய்
ஓர்நாண் மாறாமே
கலசமுனி யன்பை யுகந்தாய்
நீர்சூழ் பார்மேலே
கவுணியர் விளங்க மகிழ்ந்தாய்
வாளா மீளாமே
மலரயனை அஞ்ச மலைந்தாய்
தாலே தாலேலோ
மயிலை மலை வந்த கடம்பா
தாலோ தாலேலோ 30

அலகில் புகழ் கொண்டு சிறந்தாய்
வேறாய் ஆகாமே
அகில உலகு எங்கும் நிறைந்தாய்
நாவால் ஓதாமே
பலகலை தெரிந்து பகர்ந்தாய்
மீதூர் மாலாலே
பளியர் குலமங்கை புணர்ந்தாய்
ஓர்நாண் மாறாமே
கலசமுனி அன்பை உகந்தாய்
நீர்சூழ் பார்மேலே
கவுணியர் விளங்க மகிழ்ந்தாய்
வாளா மீளாமே
மலர் அயனை அஞ்ச மலைந்தாய்
தாலே தாலேலோ
மயிலை மலை வந்த கடம்பா
தாலோ தாலேலோ 30

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிறந்தாய், நிறைந்தாய், பகர்ந்தாய், புணர்ந்தாய், உகந்தாய், மகிழ்ந்தாய், மலைந்தாய், தாலேலோ என்க.

(அடி - 1) "வேறாயாகாமே அகில வுலகெங்கும் நிறைந்தாய்" - முருக்கடவுள் எப்பொருளிலும் எவ்வுலகிலும் நிறைந்திருத்தலைக் கூறியதாம். (வியாபகத்தன்மை) "நாவால் ஓதாமே பலகலை யுணர்ந்தாய்" - ஓதாதுணர்ந்தோன் என்பதை அறிவித்தாம்.

பளியர் குலமங்கை - வள்ளிநாயகி

(அடி -3) கவுணியர் விளங்க - திருஞானசம்பந்தராக அவதரிக்க. ஆக என்ற சொல் தொக்கது.

(அடி -4) "மலரயனை அஞ்ச மலைந்தாய்" என்றது நான்முகனைப் பிரணவப் பொருள் வினவ, அவன் கூற அறியாதிருந்தபோது குட்டிச் சிறையிட்டதைக் குறித்ததாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. சப்பாணிப் பருவம்

இந்திரன் கனிவந்து வந்தனை புரிந்தன்பின்
எந்நாளு மலரவென்ன
இந்தீ வரஞ்சுனைத் தந்தீ வரம்பெற்ற
இசைபெறு திருத்தணியினும்
அந்தரந் தொடுசிகர வொருபரங் குன்றினும்
அலைவாயி னுஞ்சிறந்த
ஆவினன் குடியினும் ஏரகந் தன்னினும்
அருவிபாய் குன்றந்தொறும்
சிந்துரந் திரிசோலை மலையினு மயிலையஞ்
செம்பொன்மால் வரையகத்துஞ்
சிவஞான தேசிகன் சிந்தையினும் எளியனேன்
சேர்த்ததமிழ் மாலைதனிலும்
சந்ததங் குடிகொண்டு பணிகொண்ட அருளாள
சப்பாணி கொட்டியருளே
சமரபிணி முகவலவ குமரசர வணமுருக
சப்பாணி கொட்டியருளே. 31

இந்திரன் கனிவந்து வந்தனை புரிந்து அன்பின்
எந்நாளும் மலரஎன்ன
இந்தீவரம் சுனைத் தந்தீவரம் பெற்ற
இசைபெறு திருத்தணியினும்
அந்தரம் தொடுசிகரம் ஒருபரங்குன்றினும்
அலைவாயி னும்சிறந்த
ஆவினன் குடியினும் ஏரகம் தன்னினும்
அருவிபாயி குன்றம்தொறும்
சிந்துரம் திரிசோலை மலையினும் மயிலையம்
செம்பொன்மால் வரைஅகத்தும்
சிவஞான தேசிகன் சிந்தையினும் எளியனேன்
சேர்த்ததமிழ் மாலைதனிலும்
சந்ததம் குடிகொண்டு பணிகொண்ட அருளாள
சப்பாணி கொட்டியருளே
சமரபிணி முகவலவ குமரசர வணமுருக
சப்பாணி கொட்டியருளே 31

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் முதலியவை கூறப்பட்டுள்ளன.

திருத்தணியினும், பரங்குன்றினும், அலைவாயினும், ஆவினன் குடியினும், ஏரகந் தன்னினும், குன்றந்தொறும், சோலைமலையினும், மயிலை வரையகத்தும், சிவஞான தேசிகன் சிந்தையினும், எளியனேன் தமிழ்மாலைதனிலும், குடிகொண்டு பணிகொண்ட அருளாள சப்பாணி கொடியருள் என்க.

(அடி -1) கனிவந்து - மனமுருகி, இந்தீவரம் - கருங்குவளை மலர், நெய்தல் மலரென்றும் உரைப்பர். இந்தீவரமே நெய்தலாகும் (அகராதி நிகண்டு)

இந்தீவரம் சுனை தந்து ஈ வரம் பெற்ற - கருங்குவளை மலரைச் சுனையின்கண் இட்டு எக்காலத்தும் முப்போதும் கொடுக்கும் வரத்தைப் பெற்ற.

இந்திரன் திருத்தணிகை முருகக்கடவுளுக்குத் தினந்தோறும் அணியும்படி மூன்று கருங்குவளை மலர்களை முன்னாளிலே சுனையில் வைத்து உண்டாக்கினான். அவைகளில் காலையில் ஒன்றும் நண்பகலில் ஒன்றும் மாலையில் ஒன்றுமாக மூன்றுமலர்கள் எந்நாளும் மலரும் படியான வரத்தைப் பெற்றான் என்பது புராணம்.

"துறக்கம் வாழ் குவளைவாங்கிச் சுனையிடைக் காலமூன்றும், முறுக்கவிழ் மலர்கண் மூன்று முகிழ்க்குமா நிருமித்திட்டேன், நறைக்கடம் பணிந்தோய் நாளு நயந்தணிந் துலகமெல்லாம், இறக்குமந் நாளுமன்னி யிருக்கவக் கழுநீர்மாதோ" (தணிகைப் புராணம் - இந்திரனருள் - செய் 25)

(அடி - 2,4)பரங்குன்று - திருப்பரங்குன்றம், அலைவாய் - திருச்சீரலைவாய், திருச்செந்தூர் ஆவினன்குடி - பழநி, ஏரகம் - சுவாமிமலை, சிந்துரம் - யானை சமர பிணிமுக, வலவ - போர் புரிகின்ற பணிமுகமென்னும் யானையைச் செலுத்துபவனே. பிணிமுகம் - மயிலுக்கும் ஒரு பெயர். "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" (திருமுருக)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வானவரு மிந்த்ராணி முலைபாய மடல்விண்ட
மந்தார மாலைகமழு
மணிமார்பி னிந்த்ராதி யதிபதிக ளனைவரு
மகிழ்ந்துமலர் மாரிகொட்டக்
கானமரு மிருளோதி யரமாதர் கொங்கையிற்
கற்புரக் கலவைகொட்டக்
கலைக்குமரி யாள்வலங் கொட்டவழு தகுவியர்
கருங்கண்மழை மாரிகொட்ட
ஊனமரும் வேல்முனை துளைத்தவழி யேயவுணர்
உரமுமுர மிகுவாகுவும்
ஒழுகுசெங் குருதிநீர் கொட்டநூ றாயிரத்
தொன்பதின்ம ரொடுபோரிடத்
தானைமுழு துங்கொம்மை கொட்டமயி லச்சயில
சப்பாணி கொட்டியருளே
சமரபிணி முகவலவ குமரசர வணமுருக
சப்பாணி கொட்டியருளே. 32

வானவரும் இந்திராணி முலைபாய மடல்விண்ட
மந்தார மாலைகமழு
மணிமார்பின் இந்திராதி அதிபதிகள் அனைவரும்
மகிழ்ந்துமலர் மாரிகொட்டக்
கானமரும் இருளோதி அரமாதர் கொங்கையில்
கற்புரக் கலவைகொட்டக்
கலைக்குமரியாள் வலம் கொட்ட வழுதகுவியர்
கருங்கண்மழை மாரிகொட்ட
ஊனமரும் வேல்முனை துளைத்தவழியே அவுணர்
உரமும் உரமிகு வாகுவும்
ஒழுகுசெங் குருதிநீர் கொட்ட நூறாயிரத்து
ஒன்பதின்ம ரொடு பாரிடத்
தானைமுழுதும் கொம்மை கொட்ட மயிலச்சயில
சப்பாணி கொட்டிஅருளே
சமரபிணி முகவலவ குமரசர வணமுருக
சப்பாணி கொட்டிஅருளே. 32

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவர் முதலியோரது வெற்றிக் களிப்பும் அசுரர்களின் அவலமும் கூறப்படும்.

மலர்மாரி கொட்ட, கலவை கொட்ட, வலங்கொட்ட, கண்மழைமாரி கொட்ட, குருதிநீர் கொட்ட, கொம்மைகொட்ட, சப்பாணி கொட்டியருள் என்க.

(அடி - 1,2) மந்தாரமாலை - மந்தாரமலர்மாலை, மந்தாரம் - தேவ தருக்கள் ஐந்தனுள் ஒன்று. கான் அமரும் - மணம் பொருந்திய, ஓதி - கூந்தல், கலைக்குமரி - கொற்றவை, தகுவியர் - அசுரமகளிர்

(அடி - 3) உரமும் உரமிகு வாகுவும் - மார்பும் வலிமை மிக்க தோளும், குருதி - இரத்தம், பாரிடத் தரனை - முருகக் கடவுளின் பூதப்படை. கொம்மைகொட்ட - வெற்றிக்களிப்பால் கைகுவித்துக் கொட்ட.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முனிவே படைத்தமர் தொடங்குவல் லசுரர்படை
முதுகுதந் தோட்டெடுப்ப
முரிதிரைக் கடல்பசுங் குருதிமா நதிபாய்ந்து
முற்றும் பெருக்கெடுப்பப்
பனிவேய் நிகர்த்ததோள் பண்ணம்ப ணத்தியிகல்
பயில்குரவை யாட்டெடுப்பப்
பாகசா தனனாடல் வெல்கொடி யெடுப்பப்
பழஞ்சுருதி தலையெடுப்ப
இனிமே னமக்கோர் இடுக்கண்ணு மில்லையென
இமையவர்கள் வாழ்த்தெடுப்ப
எதிரேறு சூரன்முத லவுணர்மணி மௌலிபா
ரிடமெடுப்பக் களத்துத்
தனிவே லெடுத்தகைக் கொடுமயில மலையதிப
சப்பாணி கொட்டியருளே
சமரபிணி முகவலவ குமரசர வணமுருக
சப்பாணி கொட்டியருளே 33

முனிவே படைத்துஅமர் தொடங்குவல் அசுரர்படை
முதுகுதந்து ஓட்எடுப்ப
முரிதிரைக் கடல்பசுங் குருதி மாநதிபாய்ந்து
முற்றும் பெருக்குஎடுப்பப்
பனிவேய் நிகர்த்ததோள் பண்அம்பணத்தி இகல்
பயில்குரவைஆட்டு எடுப்பப்
பாகசாதன் ஆடல் வெல்கொடி எடுப்பப்
பழம் சுருதி தலைஎடுப்ப
இனிமேல் நமக்கு ஓர் இடுக்கண்ணும் இல்லைஎன
இமையவர்கள் வாழ்த்துஎடுப்ப
எதிர்ஏறு சூரன்முதல் அவுணர் மணி மௌலி பா(ர்)
இடம் எடுப்பக் களத்துத்
தனிவேல் எடுத்த கைக்கொடு மயில மலைஅதிப
சப்பாணி கொட்டி அருளே
சமரபிணி முகவலவ குமரசர வண முருக
சப்பாணி கொட்டியருளே.

Digitization by Hindu-Heritage-Foundation (HHFA USA)

மயிலமலை யதிப, ஓட்டெடுப்ப, பெருக்கெடுக்க, குரவையாட்டெடுப்ப, வெல் கொடி யெடுப்ப, சுருதி தலையெடுப்ப, வாழ்த்தெடுப்ப, பாரிடம் மௌலி யெடுப்ப, சப்பாணி கொட்டியருள் என்க.

(அடி -1,2) ஓட்டெடுப்ப - ஓட, குருதி மால் நதி - இரத்தப் பெருக்காறு, பண் அம்பணத்தி - அலங்கரிக்கப் பெற்ற துர்க்கை. குரவை யாட்டெடுப்ப - வெற்றிக்களிப்பால் குரவைக் கூத்தாடுதலைச் செய்ய. பாகசாதனன் - இந்திரன். (பாகன் என்னும் அசுரனைக் கொன்றவன்) தலையெடுப்ப - தாழ்நிலையினின்றும் மேம்பட

(அடி -4) தனிவேல் - ஒப்பற்றவேல்; சிவபிரானால் முருகக்கடவுளுக்கு அருளப்பெற்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெண்டா மரைத்தவள வெள்ளிமண் டபமேவு
மெல்லியலை நாவில்வைத்த
வேதியனை வேதமுடி யோதுகென ஓதியவன்
வெண்ணரைக் குடுமிபெயரக்
கண்டார் நகைப்பப் புடைப்பதற் கொருமுறை
கவித்துக் குவித்தொருமுறை
காவற் றினைப்புன மருங்கெய்தி யெய்திய
கடும்பசி தணிப்பவன் போல்
வண்டாடு கொந்தளக பந்தரிடு குறமாதின்
வாயெயிற் றூறலேய்ப்ப
வாக்குசெந் தேனோடு பசியதினை மாவிற்கு
வாயூறி யேவிரித்த
தண்டாம ரைக்கைகொடு மயிலமலை யதிபனே
சப்பாணி கொட்டியருளே
சமரபிணி முகவலவ குமரசர வணமுருக
சப்பாணி கொட்டியருளே. 34

வெண்தாமரைத்தவள வெள்ளி மண்டபமேவு
மெல்லியலை நாவில்வைத்த
வேதியனை வேதமுடி ஓதுக என ஓதியவன்
வெண்நரைக் குடுமிபெயரக்
கண்டார் நகைப்பப் புடைப்பதற்கு ஒருமுறை
கவித்துக் குவித்து ஒருமுறை
காவல் தினைப்புனம் மருங்குஎய்தி எய்திய
கடும்பசி தணிப்பவன் போல்
வண்டுஆடு கொந்துஅளக பந்தர்இடு குறமாதின்
வாய் எயிற்று ஊறல் ஏய்ப்ப
வாக்கு செந்தேனோடு பசியதினை மாவிற்கு
வாய் ஊறியே விரித்த
தண்தாமரைக் கைகொடு மயிலமலை அதிபனே
சப்பாணி கொட்டி அருளே
சமரபிணி முகவலவ குமரசர வணமுருக
சப்பாணி கொட்டி அருளே. 34

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

மயில மலையதிபனே, ஒருமுறை கவித்துக்குவித்து, ஒருமுறை விரித்த, கைக்கொடு, சப்பாணி கொட்டியருள் என்க.

(அடி -1,2) வெண்டாமரைத் தவள வெள்ளி மண்டப மேவு மெல்லியலை - கலைமகளை. வேதியனை -பிரமனை, வேதமுடி - பிரணவத்தின் பொருள். கவித்துக் குவித்து - வளைத்துக் குவித்து.

(அடி -3) வண்டு ஆடு கொந்தளக பந்தரிடு குறமாதின் - வண்டுகள் படிகின்ற பூங்கொத்துக்களை யணிந்துள்ள கூந்தற் பரப்பினையுடைய வள்ளி நாயகியின். ஏய்ப்ப - ஒப்ப. வாய் எயிற்றூறல் - செந்தேனுக்கு உவமை.

வாயூறி - மிக்க விருப்பங்கொண்டு. "தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன் செங்கீரை யாடிருளே" (முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்)

முருகக் கடவுளின் திருக்கரம் பிரமனைக் குட்ட ஒருமுறை குவித்தது; ஒருமுறை வள்ளி நாயகிபால் தேன் கலந்த தினைமாவினைப் பெற விரித்தது. மற்ற, எக்காலத்தும் எவ்விடத்தும் எதன் பொருட்டும் குவித்தலையும் விரித்தலையும் அறியாத திருக்கரங்கள் என்று திருக்கரங்களின் பெருமையை உணர்த்தியவாறறிக.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நந்துபொரு களமதில் நறுஞ்சாந்து பூசியு
நாட்டமஞ் சனமெழுதியு
நல்கெனச் சிவுகம் பிடித்துவச் சிரகச்சின்
நகைமணி முடிச்சவிழ்த்தும்
பந்துபொரு மிளமுகுள தனயுகளம் வருடியும்
பணிமுத்த வடமணிந்தும்
பாதசா லத்தினொடு கிண்கிணி திருத்தியும்
பைந்தூசு தனைநெகிழ்த்தும்
இந்துநுத லிற்றிலதம் இட்டுரத் தினசுட்டி
எழில்பெறத் தூக்கியிட்டும்
இனமலர் புனைந்துவரி வண்டோச்சி யுங்காதல்
எயினர்குல மாதின்புறத்
தந்துமகிழ் பன்னிருகை கொடுமயில மலையதிப
சப்பாணி கொட்டியருளே
சமரபிணி முகவலவ குமரசர வணமுருக
சப்பாணி கொட்டியருளே 35

நந்துபொரு களம் அதில் நறும்சாந்து பூசியும்
நாட்டம் அஞ்சனம் எழுதியும்
நல்குஎனச் சிவுகம் பிடித்து வச்சிரகச்சின்
நகைமணி முடிச்சு அவிழ்த்தும்
பந்துபொரு இளமுகுள தனஉகளம் வருடியும்
பணிமுத்த வடம் அணிந்தும்
பாதசா லத்தினொடு கிண்கிணி திருத்தியும்
பைந்தூசு தனைநெகிழ்த்தும்
இந்து நுதலில் திலதம் இட்டு ரத்தினசுட்டி
எழில்பெறத் தூக்கியிட்டும்
இனமலர் புனைந்து வரி வண்டு ஓச்சியும் காதல்
எயினர் குலமாது இன்புறத்
தந்துமகிழ் பன்னிருகை கொடுமயில மலையதிப
சப்பாணி கொட்டி அருளே
சமரபிணி முகவலவ குமரசர வணமுருக
சப்பாணி கொட்டி அருளே 35

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

முருகக்கடவுளின் பன்னிரு திருக்கரங்களும் வள்ளி நாயகிபால் அனுபவிக்கும் இன்ப விளையாட்டில் ஈடுபட்டதை உணர்த்தும்.

மயில மலை அதிப, பூசியும், எழுதியும், பிடித்து அவிழ்த்தும், வருடியும், அணிந்தும், திருத்தியும், நெகிழ்த்தும், திலகமிட்டும், தூக்கிலிட்டும், புனைந்து வண்டோச்சியும், தந்து மகிழ் பன்னிருகை கொடு சப்பாணி கொட்டியருள் என்க.

(அடி - 1) நந்து பொரு களமதில் - சங்கினை யொத்த கழுத்தில், நாட்டம் -கண். அஞ்சனம் - மை. சிவுகம் - தாடை (வடசொல்)

(அடி - 2) இள முகுள தன உகளம் - இளமை பொருந்திய அரும்பினையொத்த இருநகில்களை, முத்து வடம் - முத்து மாலை, பாதசாலம் - கிண்கிணி = காலணிகள், தூசு தனை நெகிழ்த்தும் - ஆடையை நெகிழச்செய்தும்.

(அடி - 3) வண்டோச்சியும் - கூந்தலிற் படியும் வண்டுகளைத் துரத்தியும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேறு

தண்டமிழ் விரகன் பரனொடு வாது செய்
சங்கத் தமிழ் நிபுணன்
சகல கலாதரன் இறைவ னுரைக்குரை
தந்தருள் நக்கீரன்
கொண்ட லெனச்சந் தத்தமிழ் மாரிபெய்
கொற்றவன் அருணகிரிக்
கோமான் எண்டிசை யளவு நெடும்புகழ்
கொண்ட அருட்செந்தேன்
அண்டர்தெள் ளமுதொடு முக்கனி யூறல்
அளவி வடித்தென்ன
அணிபெறு கவிதா மாலிகை நீபத்
தலர்மா லிகையினுடன்
கொண்டணி பன்னிரு பொற்புய பூதர
கொட்டுக சப்பாணி
குக்குட கேதன மயில நிகேதன
கொட்டுக சப்பாணி 36

தண்டமிழ் விரகன் பரனொடு வாது செயி
சஙகத் தமிழ் நிபுணன்
சகல கலாதரன் இறைவன் உரைக்கு உரை
தந்துஅருளி நககீரன்
கொண்டல் எனச் சந்தத் தமிழ் மாரிபெயி
கொற்றவன் அருணகிரிக்
கோமான் எண்திசை அளவு நெடும்புகழ்
கொண்ட அருட்செந்தேன்
அண்டர்தெள் அமுதொடு முககனி ஊறல்
அளவி வடித்து என்ன
அணிபெறு கவிதா மாலிகை நீபத்(து)
அலர் மாலிகையினுடன்
கொண்டுஅணி பன்னிரு பொற்புய பூதர
கொட்டுக சப்பாணி
குக்குட கேதன மயில நிகேதன
கொட்டுக சப்பாணி 36

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மயில நிகேதன, நக்கீரன், அருணகிரிக் கோமான், கவிதா மாலிகை (யை), நீபத்தலர் மாலிகையுடன் கொண்டணி புயபூதர, சப்பாணி கொட்டியருள் என்க.

(அடி -1) விரகன் -புலமையுடையோன், பரனொடு வாது செய் சங்கத் தமிழ் நிபுணன் - "கொங்குதேர் வாழ்க்கை" (குறுந்தொகை) என்னும் பாட்டின் பொருள் குறித்துச் சிவபெருமானுடன் வாது புரிந்த கடைச் சங்கத் தமிழ்ப்புலவராகிய நக்கீரர். சகல கலாதரன் -சகல கலைகளுக்கும் நிலையமாக வுள்ளவனாகிய இறைவன். இறைவன் உரைக்கு உரைதந்தருள் நக்கீரன் - மதுரைச் சொக்கநாதர் அருளிய இறையனாரகப் பொருள் என்னும் பொருளிலக்கண நூலிற்கு உரைவகுத்த நக்கீரர்.

(அடி - 2) கொண்டல் - மேகம் , சந்தத் தமிழ் - திருப்புகழ்

(அடி - 3,4) கவிதா மாலிகை - பாமாலை, பொற்புய பூதர - அழகிய புயமாகிய மலையையுடையவனே. குக்குடகேதன - சேவற்கொடியை யுடையவனே. மயில நிகேதன - மயில மலை யென்னும் திருத்தலத்தை இருப்பிடமாகக் கொண்டவனே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தஞ்சென அடிதொழும் அடியர் கிருபாகர
தற்பத கேமவருட்
சத்திய குணோதய நித்திய நிராமய
சகல கலாநிபுண
அஞ்சினும் ஆறினும் எட்டினு மூன்றினும்
ஐம்பத் தொன்றினுமே
அறியு நிரந்தர புனித புரந்தர
அதுல துரந்தரிக
மஞ்சென மாரி பொழிந்து திவாகரன்
வடிவா யொளிவீசும்
வானவர் தேனமர் பொற்பமர் கற்பக
மஞ்சரி சூடுமொரு
குஞ்சரி வல்லப வல்லி மனோகர
கொட்டுக சப்பாணி
குக்குட கேதன மயில நிகேதன
கொட்டுக சப்பாணி 37

தஞ்சென அடிதொழும் அடியர் கிருபாகர
தற்பத கேமஅருட்
சத்திய குணோதய நித்திய நிராமய
சகல கலாநிபுண
அஞ்சினும் ஆறினும் எட்டினு(ம்) மூன்றினும்
ஐம்பத் தொன்றினுமே
அறியு நிரந்தர புனித புரந்தர
அதுல துரந்தரிக
மஞ்சென மாரி பொழிந்து திவாகரன்
வடிவாய் ஒளிவீசும்
வானவர் தேன்அமர் பொற்புஅமர் கற்பக
மஞ்சரி சூடும் ஒரு
குஞ்சரி வல்லப வல்லி மனோகர
கொட்டுக சப்பாணி
குக்குட கேதன மயில நிகேதன
கொட்டுக சப்பாணி 37

Digitization by Hindu-Heritage-Foundation of America HHF (USA)

தஞ்சென - தஞ்சம்என்று. கிருபாகர - அருளுக்கிட மானவனே,

(அடி -1) தற்பத - தத் என்ற பதத்தாலுணர்த்தப்படுவனே, கேம அருள் சத்திய குணோதய - நன்மையைத் தருகின்ற உண்மையான குணத்தோற்றத்தையுடையவனே, நித்திய - அழியாதவனே, நிராமய - குற்றமற்றவனே.

(அடி - 2) அஞ்சினும் ஆறினும் எட்டினும் மூன்றினும் ஐம்த்தொன்றினும் - ஐந்தெழுத்தாலும் ஆறெழுத்தாலும் எட்டெழுத்தாலும் மூன்றெழுத்தாலும் ஐம்பத்தோரெழுத்தாலும், நிரந்தர புனித -எப்பொழுதும் பரிசுத்தமானவனே, அதுல துரந்தரிக - ஒப்பற்ற வல்லமையுடையவனே.

(அடி 3,4) திவாகரன் - சூரியன், கற்பக மஞ்சரி - கற்பகப் பூங்கொத்து, வல்லி மனோகர - வள்ளி நாயகியின் மனத்தைக் கவர்பவனே.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அமர அனாமய அசுர மனோபய
அகில தயாசீல
அபய வரோதய அசுர நிராகுல
அனக நிராதார
சமர சிகாவல அதுல மகாபெல
சதுர நிராகார
தருண சடாதர தனைய உமாசுத
சதமக னாதார
பமர வியாகுல சனனி திரோதக
பரோ திரோதான
பரம குணாலய அருள்புரி லீலைய
பரகதி தானான
குமர கிருபாகர திமிர திவாகர
கொட்டுக சப்பாணி
குக்குட கேதன மயில நிகேதன
கொட்டுக சப்பாணி 38

அமர அனாமய அசுர மனோபய
அகில தயாசீல
அபய வரோதய அசுர நிராகுல
அனக நிராதார
சமர சிகாவல அதுல மகாவல
சதுர நிராகார
தருண சடாதர தனைய உமாசுத
சதமகனி ஆதார
பமர வியாகுல சனனி திரோதக
பரோ திரோதான
பரம குணாலய அருளிபுரி லீலைய
பரகதி தானான
குமர கிருபாகர திமிர திவாகர
கொட்டுக சபிபாணி
குக்குட கேதன மயில நிகேதன
கொட்டுக சபிபாணி 38

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA(USA)

(அடி - 1) அமர - இறப்பில்லாதவனே. அனாமய - குற்றமில்லாதவனே, அசுர மனோபய - அசுரர்களுடைய மனத்திற்குப் பயத்தைத் தருபவனே, அகில தயாசீல -யாவர்க்கும் கருணை புரியும் குணத்தை யுடையவனே, அபய வரோதய - பயமின்மையாகி வரத்தை யருள்பவனே, அசுர நிராகுல - அசுரர்களுக்குக் கலக்கத்தைச் செய்பவனே, அனக - குற்றமற்றவனே, நிராதார - ஆதாரமற்றவனே, (எங்கும் நிறைந்தவனே)

(அடி - 2) சமர சிகாவல - போரிற் சிறந்தவனே, அதுல மகாபெல - ஒப்பற்ற பேராற்றலுடையவனே, நிராகார - வடிவமில்லாதவனே, உமாசுத - உமையின் புதல்வனே, சதமகன் ஆதார -இந்திரனுக்கு ஆதாரமாகவுள்ளவனே.

(அடி - 3) சனனி திரோதக - மாயையை அழிப்பவனே, பரோதி ரோதான - மறைவிற்கு அப்பாற்பட்டவனே, பரம குணாலய - மேலான குணத்திற்கு இருப்பிடமானவனே, திமிர திவாகர - அஞ்ஞான இருளைப் போக்கும் ஞானசூரியனே.

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

வேறு

மணமல ரைங்கணை யொருமதன் அன்புடை
மைத்துனன் முத்தேவர்
வரமென வன்றளை அயன்விட அன்றருள்
வைத்திடு நற்சீல
நிணமலி வெம்படை அவுணர் பயங்கர
நெட்டயில் நிட்டூர
நிலவுல கெங்கணு நொடியில் வலங்கொளு
நிர்த்த மயிற்பாக
இணரவிர் சிந்துர விரைகம முந்தொடை
யிற்பொலி பொற்றோள
எயினர் தருங்குல மடவரல் சந்ததம்
இச்சைகொள் பொற்பாள
குணதர சங்கர குருபர ரஞ்சித
கொட்டுக சப்பாணி
குமர நிரந்தர மயில பயங்கர
கொட்டுக சப்பாணி. 39

மணமலர் ஐங்கணை ஒருமதன் அன்புடை
மைத்துனன் முத்தேவர்
வரமென வன்தளை அயன்விட அன்று அருள்
வைத்திடு நற்சீல
நிணமலி வெம்படை அவுணர் பயங்கர
நெட்டுஅயில் நிட்டூர
நிலஉலகு எங்கணும் நொடியில் வலம்கொளு(ம்)
நிர்த்த மயிற்பாக
இணர்அவிர் சிந்துர விரைகமழும் தொடை
இல்பொலி பொன்தோள
எயினர் தருங்குல மடவரல் சந்ததம்
இச்சைகொள் பொற்பாள
குணதர சங்கர குருபர ரஞ்சித
கொட்டுக சப்பாணி
குமர நிரந்தர மயில் அபயங்கர
கொட்டுக சப்பாணி. 39

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

மண மலர் ஐங்கணை ஒரு மதன் அன்புடை மைத்துனன் - மணம் பொருந்திய மலர்களாகிய ஐந்து பாணங்களையுடைய ஒப்பற்ற மன்மதனாகிய அன்பு பொருந்திய மைத்துனன். மன்மதன் திருமாலின் புதல்வனாதலின் முருகக் கடவுளுக்கு மைத்துனனாவன். ஐங்கணை : தாமரைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, முல்லைப்பூ, நீலோற்பலப்பூ, முத்தேவர் - பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகியவர்.

(அடி -2) அவுணர் பயங்கர -அசுரர்களுக்கு அச்சத்தைச் செய்பவனே.

(அடி -3) இணர் - பூங்கொத்து. சிந்துர வரை கமழும் தொடை - திலக மலராகிய மணம்பொருந்திய மாலை, பொற்பாள அழகைவுடையவனே.

(அடி -4) குணதர - குணத்தை மேற்கொண்டவனே, சங்கர - மங்களத்தைச் செய்பவனே, ரஞ்சித - மகிழ்ச்சியைத் தருபவனே, மயிலபயங்கர (மயில் + அபங்கர) சூரபதுமனாகிய மயிலுக்கு அபயங் கொடுத்தவனே.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அருண நிறம்பெறு முருக சவுந்தர
அத்தகை மெய்ப்போத
அருணை பரங்கிரி பழநி யுகந்தருள்
அற்புத வித்தார
கருணை வழிந்தொழு கறுமுக பங்கய
கற்பக நற்றாம
கவுரி தனம்பொழி அமுதம் அருந்திய
கட்டழ குப்பால
பரவிய உம்பர்கள் பகைகெட மண்டமர்
பற்றிய மற்போர
பழைய தொழும்பினன் இவனென வந்தருள்
பதும பதத்தேவ
குரவ மணங்கமழ் வரைபொரு திண்புய
கொட்டுக சப்பாணி
குமர நிரந்தர மயில பயங்கர
கொட்டுக சப்பாணி. 40

அருண நிறம்பெறு முருக சவுந்தர
அத்தகை மெய்ப்போத
அருணை பரங்கிரி பழநி உகந்துஅருள்
அற்புத வித்தார
கருணை வழிந்து ஒழுகு அறுமுக பங்கய
கற்பக நல்தாம
கவுரி தனம்பொழி அமுதம் அருந்திய
கட்டழகுப் பால
பரவிய உம்பர்கள் பகைகெட மண்டமர்
பற்றிய மற்போர
பழைய தொழும் பினன் இவன் என வந்து அருள்
பதும பதத்தேவ
குரவ மணம்கமழ் வரைபொரு திண்புய
கொட்டுக சப்பாணி
குமர நிரந்தர மயில பயங்கர
கொட்டுக சப்பாணி. 40

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

(அடி -1,4) அருண நிறம் பெறு – செந்நிறம் பெற்ற , சவுந்தர – அழகையுடையவனே, அத்தகை மெய்ப்போத –அத்தகைய மெய்யறிவினையுடையவனே, கவுரி – உமை, உம்பர்கள் பகை – அசுரர்கள், தொழும்பினன் அடியவன், குரவம் – குராமலர், “வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த, பாரப் புயச் சயிலம் பன்னிரண்டும்” (கந்தர் –கலிவெண்பா)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. முத்தப் பருவம்

ஊனாறு கப்புவாய் இப்பிமுத் துப்புறும்
உம்பல்தரு முத்தமாளி
உகிரினால் ஊறுபடும் வேய்முத்தம் எரிகதுவும்
உரகன்வாய் முத்த மாலம்
தானாறு மதிமுத்த மறுவுண் டிருக்குஞ்
சலஞ்சலந் தருமுத்தமும்
தாளதா மரைமுத்த மும்பங்க மெய்துமவை
தாமெவையும் யாம்விரும்பேம்
தேனாறு சந்தனப் பூநாறு சோலைசூழ்
தென்மயிலை தழையவந்து
சிவஞான தேசிகற் கோதுமொரு மொழியுடன்
செல்வியுமை யவள்திருமுலைப்
பானாறு செங்குமுத அமுதச் செழுங்கனிப்
பவளவாய் முத்தமருளே
பருதிவெயில் விடுபசுங் குருதிவடி வேலவா
பவளவாய் முத்தமருளே. 41

ஊன் நாறு கப்புவாய் இப்பிமுத்து உப்பு உறும்
உம்பல் தரு முத்தம் ஆளி
உகிரினால் ஊறுபடும் வேய்முத்தம் எரிகதுவும்
உரகன்வாய் முத்தம் ஆலம்
தான்நாறு மதிமுத்த மறுஉண்டுஇருக்கும்
சலஞ்சலம் தருமுத்தமும்
தாளதா மரைமுத்தமும் பங்கம் எய்தும் அவை
தாம் எவையும் யாம்விரும்பேம்
தேன்நாறு சந்தனப் பூநாறு சோலைசூழ்
தென்மயிலை தழையவந்து
சிவஞான தேசிகற் குஓதும்ஒரு மொழியுடன்
செல்வி உமையவள் திருமுலைப்
பால்நாறு செங்குமுத அமுதச் செழுங்கனிப்
பவளவாய் முத்தம் அருளே
பருதிவெயில் விடுபசுங் குருதிவடி வேலவா
பவளவாய் முத்தம் அருளே. 41

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

வேலவா, யாம் எவையும் விரும்பேம்; பவளவாய் முத்தமருள் என்க.

(அடி – 1) ஊன் நாறு கப்பு வாய் இப்பிமுத்து உப்பு உறும் - முடை நாற்றம் வீசுகின்ற பிளந்த வாயையுடைய இப்பிமுத்து உவர் படிந்திருக்கும் "அலைகொண்ட விப்பிவிளை முத்தமுவர் மூழ்கும்". (காந்தி மதியம்மை பிள்ளைத் தமிழ்)

உம்பல் – யானை, உகிரினால் – நகத்தால், ஆளி - சிங்கம், ஆளிதானே சிங்கமாகும் (அகராதி நிகண்டு) வேய்முத்தம் எரிகதுவும் – மூங்கிலில் தோன்றிய முத்துத் தீயால் பற்றப்பட்டிருக்கும். "வேய்முத்த மதன்விரி கொடுந்தழலின் முழுகும்" (காந்திமதி – பிள்ளை) உரகன் – பாம்பு. ஆலம் – நஞ்சு. முத்தம் – முத்து. அம்சாரியை,

(அடி – 2) சலஞ்சலம் – வலம்புரிச் சங்குகள் ஆயிரத்தாற் சூழப்பட்ட சங்கு. மதி முத்தம் – சந்திரனிடத்துத் தோன்றிய முத்து. பங்கம் – சேறு, குற்றம்,

(அடி – 3) குருதி வடிவேலவா – பகைவரது இரத்தம் வடிகின்ற வேலினையுடையவனே. இப்பி, யானைத் தந்தம், மூங்கில், பாம்பு, சந்திரன், சலஞ்சலம், தாமரை இவற்றி லுண்டான முத்துக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குற்றமுடைய வாதலின் அவற்றை யாம் விரும்பேம்; நின் பவளம் போலும் வாயினால் முத்தம் தருவாயாக.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கச்சுலா மிணைமுலை சுரந்தபால் அமுதூட்டு
கார்த்திகை தனக்கு ஒருகால்
கமலப் பணித்தொட்டி லிட்டமே லெனஆட்டு
கங்கைநங் கைக்கு ஒருகால்
இச்சையால் இளவெநீர் வார்த்துதன் உத்தரியம்
ஒத்தியீ ரம்புலர்த்தி
இருநிலக் காப்பணிந் துச்சிக்கு நெய்பூசி
எரிமணிச் சுட்டிகட்டிச்
செச்சைமா லிகைபுனைந் தாகத்தணைத் தெங்கள்
செல்வமே இருகண்மணியே
தெள்ளமுத மேயெனச் சீராட்டு பனிவரைச்
செல்வ அன் னைக்குஒருகால்
பச்சைமேற் காரங்கு லாவுமயி லைச்சயில
பவளவாய் முத்தமருளே
பருதிவெயில் விடுபசுங் குருதிவடி வேலவா
பவளவாய் முத்தமருளே. 42

கச்சுஉலாம் இணைமுலை சுரந்தபால் அமுது ஊட்டு
கார்த்திகை தனக்கு ஒருகால்
கமலப் பணித்தொட்டில் இட்டு அமேல் எனஆட்டு
கங்கை நங்கைக்கு ஒருகால்
இச்சையால் இளவெநீர் வார்த்துதன் உத்தரியம்
ஒத்தி ஈரம் புலர்த்தி
இருநிலக் காப்புஅணிந்து உச்சிக்கு நெய்பூசி
எரிமணிச் சுட்டிகட்டிச்
செச்சை மாலிகைபுனைந்து ஆகத்து அணைத்து எங்கள்
செல்வமே இருகண்மணியே
தெள்அமுதமே எனச் சீராட்டு பனிவரைச்
செல்வ அன்னைக்கு ஒருகால்
பச்சைமேல் கார் அங்கு உலாவு மயிலைச்சயில
பவளவாய் முத்தம் அருளே
பருதிவெயில் விடுபசுங் குருதிவடி வேலவா
பவளவாய் முத்தம் அருளே. 42

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாய்மார்கள் முருகக் கடவுளாகிய குழந்தையை முத்தங் கொடுக்க வேண்டுதல். மயிலைச்சயில, கார்த்திகை தனக்கு ஒருகால், கங்கை நங்கைக்கு ஒருகால், பனிவரைச் செல்வ அன்னைக்கு ஒருகால் முத்தம் அருள் என்க.

(அடி -1) கார்த்திக்க - கார்த்திகை பெண்கள், சரவணப் பொய்கையில் முருகக்கடவுள் ஆறு குழந்தைகளாகத் திருவுருப் பெற்றிருந்தகாலைப் பாலூட்டி வளர்த்தவர்கள். இவர்களை "நறவு விரித்த விரைத்தோட்டு நளினத் தொட்டிற் றடமுலைப்பால், நல்கி வளர்த்த கைத்தாயர்", என்பர் குமரகுருபர அடிகள். இந்நூலாசிரியர் "அறுவர்தன தடமொழுகு மதுரமிகு மமுதமினி தயிலு முருகனை" (காப்ப -செல் 4) எனக் கூறுவதாலும், "அறுவர் பயந்த ஆறமர் செல்வ" (திருமுருகு) என்பதாலும், "கார்த்திகை தனக்கு ஒருகால்" என்ற தொடருக்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முறை எனப் பொருள்கோடல் சாலும்.

"கமலப்பணித் தொட்டில்.... ஒருகால்" - இறைவன் திருக்கண்களில் தோன்றிய தீப்பொறிகளைக் கங்கை தாங்கிச் சரவணப் பொய்கையில் சேர்த்ததால் கங்கையைத் தாயாகக் கூறினார். தாமரை மலரில் கிடத்தியதால் "தாமரைப் பணித் தொட்டில்" என்றார். "சரவணப் பூச்தொட்டிலேறி" (கந்தரலங்காரம்) "பதுமப் பாயல்" (பரிபாடல்)

(அடி - 2) வெநீர் - வெந்நீர் (தொகுத்தல் விகாரம்) இருநிலக் காப்பணிந்து - நிலத்தில் முலைப்பால் பெய்து விரலாற்றேய்த்துக் காப்பாக நுதலில் மண்பொட்டணிந்து. "வாயிற்றிவலை கொடுதேய்த்து மண்பொட் டணிந்து" (பிரபு) "விரனிலந் தைவந் திடும்பொட்டின்" (சிவஞான - பிள்ளை) "பாரிரைத் தொருபொட்டு நுதன்மதிக் கிட்டு" (அமுதாம்பிகை - பிள்ளை)

(அடி - 3,4) செச்சை மாலிகை - வெட்சி மலர்மாலை, ஆகம் - மார்பு , பச்சை - பசிய சோலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆலிக்கும் அன்பினால் வள்ளிதன தடமேந்தி
அசையுமிடை ஒருகணோக்க
அவளடியில் வன்பர லுருத்தாம லிருகண்கள்
தாம்பார்த்து முன்னடப்ப
வேலிக்கு மதயானை வெண்கோடு நட்டதினை
விளைகொல்லை ஒருகணோக்க
வேளையொரு கண்பார்க்க ஒருகண்வே டரைநோக்க
விழிமொழிவ திருகண்வினவக்
கோலிக்கு மதுரமூ றதரந் துடிப்பது
குறிப்பவோ ரிருகண்வாரக்
கும்பப் படாமுலைப் புளகநோக் கக்கலை
குலைந்தொரு விழிபார்த்துமா
பாலிக்கு மகமகிழு முருகமயி லச்சயில
பவளவாய் முத்தமருளே
பருதிவெயில் விடுபசுங் குருதிவடி வேலவா
பவளவாய் முத்தமருளே. 43

ஆலிக்கும் அன்பினால் வள்ளிதன தடம் ஏந்தி
அசையும் இடை ஒருகண்நோக்க
அவள் அடியில் வன்பரல் உருத்தாமல் இருகண்கள்
தாம்பார்த்து முன்நடப்ப
வேலிக்கு மதயானை வெண்கோடு நட்டதினை
விளைகொல்லை ஒருகண்நோக்க
வேளைஒரு கண்பார்க்க ஒருகண் வேடரைநோக்க
விழிமொழிவது இருகண் வினவக்
கோலிக்கு மதுரம் ஊறு அதரம் துடிப்பது
குறிப்ப ஓர் இரு கண்ஆரக்
கும்பப் படாமுலைப் புளகநோக்கக் கலை
குலைந்ததுஒரு விழிபார்த்துமா
பாலிக்கும் அகமகிழு முருக மயிலச் சயில
பவளவாய் முத்தம்அருளே
பருதிவெயில் விடுபசுங் குருதிவடி வேலவா
பவளவாய் முத்தம்அருளே. 43

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

முருகக் கடவுளின் பன்னிரு விழிகளும் புரியும் செயல்கள் கூறப்படும். நோக்க, நடப்ப, நோக்க, பார்க்க, நோக்க, வினவ, குறிப்ப, நோக்க, பார்த்து மகிழும் முருக என்க.

(அடி - 1) ஆலிக்கும் அன்பினால் - களிப்புறும் அன்பால். வன்பரல் - வலிய பருக்கைக் கற்கள். முன் நடப்ப - முன்னே செல்ல

(அடி - 2) யானை வெண்கோடு - யானையின் வெண்ணிறத்த தந்தம். வேளை - ஏற்ற சமயம், வேடரை நோக்க - வள்ளியன் தன்னையர் வருவரெனப் பார்க்க.

விழிமொழிவது இருகண் நோக்க - வள்ளி நாயகியின் இருகண்கள் அறிவிக்கும் உள்ளக் குறிப்பினை இருகண்கள் நோக்க, “கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனுமில” (திருக்குறள் - 1100)

விழிமொழிவது, இருகண் வினவ - இலக்கணை,

(அடி - 2) அதரம் - உதடு. உதடு துடித்தல், புளக முண்டாதல் - பயிலாதன நிகழுங்கால் உண்டாகும் மெய்ப்பாடுகள். கலை குலைதல் - ஆடைகுலைதல், வேட்கை மீதூர்ந் தாரிடத் துண்டாகும் மெய்பாடு

(அடி - 4) உமா பாலிக்கும் - உமையம்மை காப்பாற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோடல்கமழ் சாரற் கொடிச்சியர் சிலம்பினெதிர்
கூவுகுரல் ஒரு செவியினால்
குன்றுதவழ் அருவியொலி ஒருசெவியி னாற்களிறு
குளிறுகுரல் ஒருசெவியினால்
ஆடல்மயில் * அகவுமிசை ஒருசெவியி னாலுழுவை
ஆர்ப்பரவம் ஒரு செவியினால்
அடல்வேடர் இரலையார்ப் பொருசெவியி னாற்கவண்
அதிர்ப்புமற் றொருசெவியினால்
ஓடலென ஓதுமுரை ஒருசெவியி னால்வீணை
ஒரு செவியி னாற்புனந்தோ
றோலமென ஒருசெவியி னால்முருகி யத்தமா
மொருசெவியி னால்வள்ளிதன்
பாடலொரு செவியினால் ஏற்குமயி லச்சயில
பவளவாய் முத்தமருளே
பருதிவெயில் விடுபசுங் குருதிவடி வேலவா
பவளவாய் முத்தமருளே 44

கோடல்கமழ் சாரல் கொடிச்சியர் சிலம்பின்எதிர்
கூவுகுரல் ஒரு செவியினால்
குன்றுதவழ் அருவிஒலி ஒருசெவியினால் களிறு
குளிறுகுரல் ஒருசெவியினால்
ஆடல்மயில் அகவுமிசை ஒருசெவியினால் உழுவை
ஆர்ப்பரவம் ஒரு செவியினால்
அடல்வேடர் இரலை ஆர்ப்பு ஒருசெவியினால் கவண்
அதிர்ப்பு மற்றொரு செவியினால்
ஓடலென ஓதும்உரை ஒருசெவியினால் வீணை
ஒரு செவியினால் புனந்தோறு
ஓலமென ஒருசெவியினால் முருகியத்தமா(ம்)
ஒருசெவியினால் வள்ளிதன்
பாடல் ஒரு செவியினால் ஏற்கு மயிலச்சயில
பவளவாய் முத்தம் அருளே
பருதிவெயில் விடுபசுங் குருதிவடி வேலவா
பவளவாய் முத்தம் அருளே. 44

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

முருகக்கடவுள் குறிஞ்சி நிலத்திலெழும் பல்வகைத்தாய ஓசைகளைப் பன்னிரு செவிகளாலும் ஏற்குந் திறம் கூறப்படுகின்றது.

(அடி -1) கோடல் - வெண்காந்தள்மலர், கொடிச்சியர் வேடர்குலப் பெண்கள் சிலம்பின் எதிர் கூவுகுரல் - மலைப் பக்கத்தே நின்று கூவுவதாலுண்டாகும் எதிரொலி. குளிறு - ஒலிக்கின்ற.

(அடி - 2,3) உழுவை - புலி, இரலை - மான். ஓடல் - ஓடுக. வீணை - வீணையின் இசை, "விஞ்சையர் உளர்நரம்பின் வீணையா ழெழுமின்னோசை, குஞ்சரமனைய வென்றிக் குன்றவர் புரத்தி லென்றுஞ், தஞ்செவி மடுத்துக் கேட்பர்" (பிரபு -கோரக் - செய் 17) ஓலம் - தினைப்புனங்காக்கு மகளிர் புட்களைத் துரத்த ஒலிக்கும் ஒலி.

*கதுவுமிசை -பி.ம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேறு

வழியும் பசுந்தேன் பெய்ததினை
மாவிற் கேக்கற் றொருகுறத்தி
வளைக்கை யதனில் வாங்காமல்
மலையான் முலையாள் தரச்சுரந்தே
பொழியும் இரத மதுதருவோம்
புதுப்பூங் காந்தள் புனையாமல்
பொன்பூத் தலர்ந்த கற்பகபூம்
போது புனைவோ மிவையல்லால்
குழியும் வழியுந் திரிந்துகவி
கூறிக் கவிதை கொள்ளாமல்
கோட துனக்கே தொழும்புபுரி
கோமான் <u>வயித்திய நாதனன்பால்</u>
மொழியும் தமிழும் உனக்கணிவோம்
முதல்வா முத்தந் தருகவே
முகுந்தன் மருகா மயிலமலை
முருகா முத்தந் தருகவே. 45

வழியும் பசுந்தேன் பெய்த தினை
மாவிற்கு ஏக்கற்று ஒருகுறத்தி
வளைக்கை அதனில் வாங்காமல்
மலையான் முலையாள் தரச் சுரந்தே
பொழியும் இரத மதுதருவோம்
புதுப்பூங் காந்தள் புனையாமல்
பொன்பூத்து அலர்ந்த கற்பகபூம்
போது புனைவோம் இவைஅல்லால்
குழியும் வழியும் திரிந்து கவி
கூறிக் கவிதை கொள்ளாமல்
கோடது உனக்கே தொழும்பு புரி
கோமான் <u>வயித்திய நாதன் அன்பால்</u>
மொழியும் தமிழும் உனக்கு அணிவோம்
முதல்வா முத்தம் தருகவே
முகுந்தன் மருகா மயிலமலை
முருகா முத்தம் தருகவே. 45

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(யாம்) தருவோம், புனைவோம், அணிவோம், முத்தந் தருக என்க.

(அடி - 1) பசுந்தேன் - பதனழியாததேன். ஏக்கற்று - ஆசையால் தாழ்ந்து, மலையான் முலையாள் - உமையம்மையார், "மலையின் முலையாள் தரச் சுரேந்தே பொழியும் இரதமது தருவோம்" என்றது திருஞானசம்பந்தராக அவதரித்தகாலத்து உமையம்மை பாலருத்தியதை நினைவு படுத்துவதாக உளது.

(அடி - 2) இரதம் -ஈண்டுப் பாலையுணர்த்திற்று. காந்தள் -காந்தள் மலர்; குறிஞ்சி நிலத்திற்குரியது.

(அடி -3) "குழியும் வழியும்.... கொள்ளாமல்" குழியான இடத்தும் பலவழிகளிலும் திரிந்து பொய்யா மொழிப் புலவரைக் கவி கூறச் செய்து அவர் பாடிய கவியைக் கொண்டாற்போலக் கொள்ளாமல். தொழும்பு - அடிமை. வயித்தியநாதன் இந்நூலாசிரியர் பெயர்.

(அடி - 4) முகுந்தன் மருகா - திருமாலின் மருகனே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுற்றுங் கடலுங் குலகிரியுஞ்
சூழு நேமிப் பெருவரையும்
சுடரா தபனும் நிசாசரனும்
சொல்லும் வேதத் தொகுதிகளும்
பற்றுஞ் சமய நெறியாறும்
பார்நீர் முதலாம் ஐம்பூதப்
பரப்பும் அடையுங் கதிநான்கும்
பாசத் திரையமும் எழுத்தைந்தும்
மற்றும் ஆறா தாரமுடன்
வழிக ளாறும் தத்துவத்தின்
வகையா றாறும் ஆன்மாவும்
வகுத்த கால மொருமூன்றும்
முற்றுங் கலந்தும் கலவாத
முதல்வா முத்தந் தருக்வே
முகுந்தன் மருகா மயிலமலை
முருகா முத்தந் தருகவே. 46

சுற்றும் கடலும் குலகிரியும்
சூழும் நேமிப் பெருவரையும்
சுடர் ஆதபனும் நிசாசரனும்
சொல்லும் வேதத் தொகுதிகளும்
பற்றும் சமய நெறி ஆறும்
பார்நீர் முதலாம் ஐம்பூதப்
பரப்பும் அடையும் கதி நான்கும்
பாசத் திரையமும் எழுத்து ஐந்தும்
மற்றும் ஆறு ஆதாரமுடன்
வழிகள் ஆறும் தத்துவத்தின்
வகை ஆறாறும் ஆன்மாவும்
வகுத்த கால ஒருமூன்றும்
முற்றும் கலந்தும் கலவாத
முதல்வா முத்தம் தருகவே
முகுந்தன் மருகா மயிலமலை
முருகா முத்தம் தருகவே. 46

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA) (USA)

முருகக் கடவுள் எல்லாப் பொருளிலும் கலந்திருந்தும் அவற்றில் தொடக்கற்றிருக்கும் இயல்பை அறிவிக்கும்

(அடி - 1) குலகிரி - எட்டுத்திக்கிலுமுள்ள மலைகள். நேமிப்பெருவரை - சக்கரவாளப்பொருப்பு. ஆதபன் -சூரியன். நிசாசரன் - சந்திரன், வேதத்தொகுதி - நான்மறை

(அடி - 2) ஆறு சமய நெறி - அறு வகைச் சமய வொழுக்கம், ஆறு சமயம்: சைவம் - பாசுபதம். மாவிரதம் - காளாமுகம் - வாமம் - வைரம். ஐம்பூதம் - மண், நீர்,நெருப்பு, காற்று, வெளி. நான்கு கதி - தேவர், மக்கள், விலங்கு, நரகர். பாசத்திரையம் - (செய்யுள் 21 அடிக்குறிப்பு) எழுத்தைந்து - ஐந்தொழுத்தாலாகிய மந்திரம்.

(அடி - 3) ஆறு ஆதாரம் (செய்யுள் 7 அடிக்குறிப்பு)

தத்துவத்தின் வகை ஆறாறும் -முப்பத்தாறு தத்துவங்களும். அவை: ஆன்மதத்துவம் 24, வித்தியாதத்துவம் 7, சிவதத்துவம் 5

வழிகள் ஆறும் - அத்துவாக்கள் ஆறும், அவை : மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, புவநாத்துவா, தத்துவாத்துவா, காலத்துவா. அத்துவா - ஆன்மாக்களைப் பரகதி அடையச் செய்யும் காரணமாகிய வழி.

ஆன்மா - உயிர்கள், காலம் ஒரு மூன்றும் - மூன்று காலங்களும், இறப்பு - நிகழ்வு - எதிர்வு என்னும் முக்காலங்களும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பழுத்த நேச அடியர்செழும்
பாலே மதுரச் செழுந்தேனே
பாகே ஓகை தருமமுதே
பலவின் வடித்த கொழுங்கனியே
வழுத்த அரிய பேரொளியே
வாழ்வே தூண்டா மணிவிளக்கே
மாறாக் கருணைப் பெருக்காறே
மனமுங் கடந்த சுகோதயமே
அழுத்த முடைய குணகுன்றே
அருவே உருவே அருவுருவே
அகண்டா காரச் சின்மயமே
அழியா இன்ப மகோததியே
முழுத்த சோதி இளங்கதிரின்
முனையே முத்தந் தருகவே
முகுந்தன் மருகா மயிலமலை
முருகா முத்தந் தருகவே 47

பழுத்த நேச அடியர் செழும்
பாலே மதுரச் செழுந்தேனே
பாகே ஓகை தரும் அமுதே
பலவின் வடித்த கொழுங்கனியே
வழுத்த அரிய பேர் ஒளியே
வாழ்வே தூண்டா மணிவிளக்கே
மாறாக் கருணைப் பெருக்கு ஆறே
மனமும் கடந்த சுகோதயமே
அழுத்தம் உடைய குணக்குன்றே
அருவே உருவே அருஉருவே
அகண்டா காரச் சின்மயமே
அழியா இன்ப மகோததியே
முழுத்த சோதி இளங்கதிரின்
முனையே முத்தம் தருகவே
முகுந்தன் மருகா மயிலமலை
முருகா முத்தம் தருகவே 47

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அடி- 1) பழுத்த நேச அடியர் - முதிர்ந்த அன்புடைய அடியார் "பழுத்த மனத் தடியருடன் போயினர்" (திருவாசகம்)

(அடி - 2) தூண்டா மணி விளக்கே - தூண்டப் படாத இரத்தின விளக்கே. "தூண்டல் செய்யா மணி விளக்கே" (திருக்கருவை -அந்தாதி) சுக + உதயமே = சுகோதயமே (குணசந்தி) இன்ப எழுச்சியே.

(அடி - 3) அகண்டாகாரச் சின்மயமே - பூரண ஞானமயமாகவுள்ளவனே. இன்ப மகோததியே - இன்பப் பெருங்கடலே. மகா + உததி = மகோததி (குணசந்தி)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேறு

கனியை அமுதுட னளவி யேனவர்
கவிதை சொலவருள் வைத்தவா
ககன தலைநிலை புகுத வொருவழி
கடவுள் நுதல்விழி பெற்றவா
இனிய தமிழொடு சகல கலைகளும்
எளிதின் உதவிய வித்தகா
எனது மனமதின் மருவி யனுதினம்
இனிதின் உறைதரும் அற்புதா
பனிவெண் மதிரவி யவனி புனலனல்
பவனம் வெளியுயிர் மெய்ப்பரா
பழைய மதுரையின் மணியின் விலைதெரி
பவர்கள் குலபதி வர்த்தாக
வனிதை பரைசிவை மதலை யெனவரு
மைந்த பணிமணி முத்தமே
மயில மலைவரு முருக அரிதிரு
மருக பணிமணி முத்தமே 48

கனியை அமுதுடன் அளவி ஏனவர்
கவிதை சொலஅருள் வைத்தவா
ககன தலைநிலை புகுத வொருவழி
கடவுள் நுதல்விழி வெற்றவா
இனிய தமிழொடு சகல கலைகளும்
எளிதின் உதவிய வித்தகா
எனது மனமதின் மருவி அனுதினம்
இனிதின் உறைதரும் அற்புதா
பனிவெண் மதி,இரவி, அவனி, புனல், அனல்
பவனம், வெளி,உயிர் மெய்ப்பரா
பழைய மதுரையின் மணியின் விலைதெரி
பவர்கள் குலபதி வர்த்தாக
வனிதை பரைசிவை மதலை யெனவரு
மைந்த பணிமணி முத்தமே
மயில மலைவரு முருக அரிதிரு
மருக பணிமணி முத்தமே 48

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அடி - 1) அளவி -கலந்து ஏனவர் - என்னையொத்தவர் ககன தலை நிலை புகுத - விண்ணுலகம் நிலைக்க. கடவுள் நுதல் விழி பெற்றவா - சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணால் பெறப்பட்டவனே.

(அடி -3) "பனிவெண்மதி .... மெய்ப்பரா" - குளிர்ந்த வெண்ணிறத்த சந்திரன், சூரியன், மண், நீர், தீ, காற்று, ஆகாயம், உயிர் ஆகியவற்றை உருவத்திருமேனியாகவுடைய பரனே. இவை அட்டமூர்த்தம்.

"பழைய மதுரையின்... வர்த்தகா" - தொன்மையான மதுரைம்பதியில் இரதினங்களின் விலையை மதிக்கின்ற வணிகர்களின் குலபதியாய் வந்த சோமசுந்தரக் கடவுளுக்குத் தோன்றிய வர்த்தகனே.

வீரபாண்டியன் மகன் அபிடேக பாண்டியன் முடியணி வதற்கேற்ற மாணிக்கங்களைச் சோமசுந்தரக் கடவுள் வுணிகராய் வந்து அளித்தார். இதனைத் திருவிளையாடற் புராணத்துக் காண்க. முருகக் கடவுளுக்கு செட்டி என்பதோர் திருநாம முண்மை யான் "வர்த்தகா" என்றார். பரைசிவை - சிவசத்தியாகிய பார்வதி.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

தகுவர் வயிறெரி தவழ அடல்புரி
சமர அயில்விடு கொற்றவா
சனகன் முதலிய முனிவர் தவநிலை
தழைய விழைவுசெய் மெய்த்தவா
புகலி நகரியின் மதுர கவிபொழி
புகரில் கவுணிய விற்பனா
புலவு கமழ்கணை எயினர் குலமகள்
புளக முலைபுணர் உத்தமா
திகுதி திகுதீதி திகுதி செககண
செகண எனுமயில் நர்த்தகா
திமிர தினகர நிகர திரிபுர
தகனர் புனைபுனி தச்சடா
மகுட மணியென நிலவு பதயுக
அனக பணிமணி முத்தமே
மயில மலைவரு முருக அரிதிரு
மருக பணிமணி முத்தமே. 49

தகுவரி வயிறுஎரி தவழ அடல்புரி
சமர அயில்விடு கொற்றவா
சனகனி முதலிய முனிவரி தவநிலை
தழைய விழைவுசெபி மெபித்தவா
புகலி நகரியின் மதுர கவிபொழி
புகரில் கவுணிய விற்பனா
புலவு கமழ்கணை எயினரி குலமகள்
புளக முலைபுணரி உத்தமா
திகுதி திகுதிதி திகுதி செககண
செகண எனுமயில் நரித்தகா
திமிர தினகர நிகர திரிபுர
தகனரி புனைபுனிதசி சடா
மகுட மணிஎன நிலவு புதயுக
அனக பணிமணி முதிதமே
மயில மலைவரு முருக அரிதிரு
மருக பணிமணி முதிதமே. 49

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அடி - 1) தகுவர் - அசுரர். சனகன் முதலிய முனிவர் : - சனகர், சனந்தனர், சனாதனர், சனற் குமாரர்

(அடி - 2) புகழி - சீகாழி, மதுர கவி - தேவாரப் பாசுரங்கள். கவுணிய விற்பனா - கவுணியர் குலத்தில் தோன்றிய திருஞானசம்பந்தராகிய விற்பனே.

(அடி - 3) திமிர தினகர - அஞ்ஞானமாகிய இருளைப் போக்கும் ஞானசூரியனே. திரிபுர தகனர் - முப்புரத்தை எரித்த சிவபெருமான்

சடாமகுடமணியென நிலவு பதயுக - சடையின் அணிந்துள்ள முடிமணி போல விளங்குகின்ற இரண்டு திருவடிகளையுடையவனே. இளையபிள்ளை யாதலின் சிவபெருமானுடைய முடி மீதேறி விளையாடுதலின் அவரது திருவடி முடிமணிபோல் விளங்குகிறது.

இப்பருவத்தில் பத்தாவது செய்யுள் இல்லை.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

6.வாரானைப் பருவம்

வேறு

பாடற் சுரும்பு குடைந்தாடும்
பதுமத் தவிசி னான்முகனைப்
பண்டைச் சுருதிப் பொருள்வினவிப்
பகரா னாக நரைக்குடுமிச்
சூடத் துடனே தகரமுடி
துளங்கப் புடைத்துச் சிறைபுகுத்தித்
தொல்லை தேவ ரொருமூவர்
தொழுது வேண்ட விடுத்தருளி
நாடற் கரிய மறைமுதலை
நம்பன் கேட்ப வுரைத்தபடி
ஞாலம் புகுந்து சிறந்தசிவ
ஞானி யுணர முறைவிரித்து
மூடச் சமயம் பிணக்கமற
மொழிந்தாய் வருக வருகவே
முழுது மயிலா சலமுகந்த
முருகா வருக வருகவே.

பாடல் சுரும்பு குடைந்துஆடும்
பதுமத் தவிசின் நான்முகனைப்
பண்டைச் சுருதிப் பொருள்வினவிப்
பகரா னாக நரைக்குடுமிச்
சூடத் துடனே தகரமுடி
துளங்கப் புடைத்துச் சிறைபுகுத்தித்
தொல்லை தேவர் ஒருமூவர்
தொழுது வேண்ட விடுத்து அருளி
நாடற்கு அரிய மறைமுதலை
நம்பன் கேட்ப உரைத்தபடி
ஞாலம் புகுந்து சிறந்தசிவ
ஞானி உணர முறைவிரித்து
மூடச் சமயம் பிணக்கம் அற
மொழிந்தாய் வருக வருகவே
முழுது மயிலா சலம் உகந்த
முருகா வருக வருகவே.

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA)(USA)

சிவஞான பாலைய தேசிகர்க்கு முருகக் கடவுள் உபதேசஞ் செய்ததை அறிவிக்கும்

(அடி - 3) "நாடற்கரிய.....கேட்ப" உரைத்தபடி - நான்முகனைச் சிறையினின்றும் விடுத்த பின்னர்ச் சிவபெருமான் முருகப்பெருமானை நோக்கி நான்முகனும் அறியாத பிரணவப்பொருள் உனக்குத் தெரியுமா? தெரிந்தால் கூறுவாயாக என்று வினவ, முருகக் கடவுள், "கூறவேண்டிய முறைப்படி கூறவேண்டும்" என்றார். சிவபெருமான் அவ்வண்ணமே கூறுக என்று தம் காதைக் கொடுக்க முருகப் பெருமான் இறைவனுக்கு பிரணவப் பொருளைவுரைத்தார். இது கயிலையில் நிகழ்ந்த வரலாறு. "படைப்போன், அகந்தை யுரைப்ப மறையாதி யெழுத்தென், றுகந்த பிரணவத்தி னுண்மை" - புகன்றிலையால், சிட்டித் தொழிலதனைச் "செய்வதெங்ஙனென்றுமுனம், குட்டிச் சிறையிருத்துங் கோமானே, மட்ட விழும், பொன்னங் கடுக்கை புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமம் பொழிந்தோனே" (கந்தர் கலிவெண்பா) ஞாலம் புகுந்து - உலகத்தை யடைந்து.

(அடி - 4) மூடச்சமயம் - ஆன்மநிலையயும் இறை நிலையயும் அறியாத சமயங்கள். சிவஞானிக்கு முருகக்கடவுள் உபதேசித்ததைச் சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம். "அறிவதை யறிந்தார்மூவர்" என்னும் செய்யுளும் அறிவிக்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சகமுஞ் சகமூன் றிவையுள்ள
சராச ரங்க ளெத்துணையுந்
தழைத்தே யரும்ப அருள்பூத்துத்
தாவா நேயங் கனிந்தினிதின்
இகமும் பரமும் அவையெய்த
என்று நீங்கா வுறுதுணையாய்
இதைய கமலந் தனிலும்விழி
யிருதா மரைப்போ தினுமகலா
தகமும் புறமு மாகி நின்ற
அன்னை முகத்தி னொடுதாதை
ஐந்து முகமு மலரவுன
தருளுற் றிருந்த ஆறுதிரு
முகமு மலர எமதுகுல
முதலே வருக வருகவே
முழுது மயிலா சலமுகந்த
முருகா வருக வருகவே 51

சகமும் சகமூன்று இவைஉள்ள
சராசரங்கள் எத்துணையும்
தழைத்தே அரும்ப அருள்பூத்துத்
தாவா நேயம் கனிந்து இனிதின்
இகமும் பரமும் அவை எய்த
என்று நீங்கா உறுதுணையாய்
இதய கமலம் தனிலும்விழி
இருதாமரைப் போதிலும் அகலாது
அகமும் புறமும் ஆகி நின்ற
அன்னை முகத்தி னொடு தாதை
ஐந்து முகமும் மலர உனது
அருள் உற்றுஇருந்த ஆறுதிரு
முகமும் மலர எமதுகுல
முதலே வருக வருகவே
முழுதும் மயிலாசலம் உகந்த
முருகா வருக வருகவே. 51

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சகமும் - உலகமும், சகமூன்று இவையுள்ள சராசரங்கள் - மேலுலகம்,

(அடி - 1,4) மண்ணுலகம் கீழுலகமென்னும் மூன்றுலங்களிலுமுள்ள இயங்கியற் பொருள்களும் நிலையியற் பொருள்களும். இகமும் பரமும் - இம்மை மறுமைப் பயன்களையும் அன்னை - தாயாகிய உமையம்மையார், தாதை - தந்தையாகிய சிவபெருமான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேரிப் புதுப்பூ மலர்மாரி
விண்ணோர் சொரிய வல்லசுரர்
விழிநீர் பொழிய வழிமொழிந்து
விரிஞ்சன் முதலோ ரடிவணங்க
வாரித் தலமும் பாதலமும்
வானத் தலமு மனங்குளிர
மந்தா கினிவாழ்த் தெடுப்ப அர
மகளிர் பல்லாண் டினிதிசைப்பச்
சோரிச் சுடர்வேல் வெயில்விடச்செஞ்
சூட்டுச் சேவற் கொடியாடத்
தூண்டா விளக்கும் விளக்கடியிற்
றோன்றும் நீலப் பிழம்புமென
மூரிக் கலாப மயில்கடவு
முதல்வா வருக வருகவே
முழுது மயிலா சலமுகந்த
முருகா வருக வருகவே. 52

வேரிப் புதுப்பூ மலர்மாரி
விண்ணோர் சொரிய வல்அசுரர்
விழிநீர் பொழிய வழிமொழிந்து
விரிஞ்சன் முதலோர் அடிவணங்க
வாரித் தலமும் பாதலமும்
வானத்தலமும் மனம்குளிர
மந்தாகினி வாழ்த்து எடுப்ப அர
மகளிர் பல்லாண்டு இனிது இசைப்பச்
சோரிச் சுடர்வேல் வெயில்விடச்செஞ்
சூட்டு சேவற் கொடி ஆடத்
தூண்டா விளக்கும் விளக்கு அடியில்
தோன்றும் நீலப் பிழம்பும் என
மூரிக் கலாப மயில்கடவு
முதல்வா வருக வருகவே
முழுதும் மயிலா சலம் உகந்த
முருகா வருக வருகவே. 52

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொரிய, பொழிய, வணங்க, குளிர, வாழ்த்தெடுப்ப, இசைப்ப, வெயில்விட, கொடியாட, மயில்கடவு முதல்வா வருக என்க.

(அடி - 1,2) வேரி - தேன், வழிமொழிந்து - வழிபாடுகூறி, வாரித்தலம் - கடல்சூழ்ந்துள்ள உலகம். வாரித்தலம், பாதலம், வானத்தலம் - இடவாகு பெயரால் அவ்வத் தலங்களி லுள்ளாரைக் குறித்தன.

(அடி - 3,4) மந்தாகினி - கங்கை, "தூண்டா விளக்கும் ...முதல்வா", உவமையணி, தூண்டா விளக்கு - இரத்தினமாகிய விளக்கு. தூண்டா விளக்கு முருகக் கடவுளுக்கும், நீலப்பிழம்பு மயிலுக்கும் உவமை. கலாபம் - தோகை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இளைத்த மருங்குல் உமை மடந்தை
இருகைத் தலச்செம் பதுமத்தும்
எறிநீர்க் கங்கா நதியகத்தும்
எழுந்த செழும்பூஞ் சரவணத்தும்
வளைத்த மேருச் சிலையாளி
வயங்கும் பால லோசனத்தும்
மதுரம் பொழியும் அருணகிரி
வாக்கி னிடத்து மவனினிதில்
திளைத்த அனுபூ தியினுமறைச்
சிரத்தும் அழியாச் சிதாநந்தச்
செந்தேன் பரவைக் கடலகத்துஞ்
சிறியேன் சிந்தைச் சிலாதலத்து
முளைத்த பவள இளங்கிளையின்
முளையே வருக வருகவே
முழுது மயிலா சலமுகந்த
முருகா வருக வருகவே. 53

இளைத்த மருங்குல் உமை மடந்தை
இருகைத்தலச் செம்பதுமத்தும்
எறிநீர்க் கங்கா நதிஅகத்தும்
எழுந்த செழும் பூஞ்சரவணத்தும்
வளைத்த மேருச் சிலையாளி
வயங்கும் பால லோசனத்தும்
மதுரம் பொழியும் அருணகிரி
வாக்கின் இடத்தும் அவன்இனிதில்
திளைத்த அனுபூதியினும் மறைச்
சிரத்தும் அழியாச் சிதாநந்தச்
செந்தேன் பரவைக் கடல்அகத்தும்
சிறியேன் சிந்தைச் சிலாதலத்து
முளைத்த பவள இளங்கிளையின்
முளையே வருக வருகவே
முழுது மயிலா சலஉகந்த
முருகா வருக வருகவே. 53

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

இருகைத்தலச் செம்பதுமத்தும், கங்கா நதியகத்தும், சரவணத்தும், பாலலோசனத்தும், வாக்கினிடத்தும், அனுபூதியினும், மறைச்சிரத்தும், கடலகத்தும், சிந்தைச் சிலாதலத்தும், முளைத்த முளையே வருக என்க.

(அடி -1) இளைத்த மருங்குல் உமை மடந்தை - சிறுத்த இடையினையுடைய உமையம்மை. "இளைக்கு மருங்கு லொரு மடந்தைக்கு" (சிவஞான - பிள்ளை)

இருகைத்தலச் செம்பதுமத்தும் - இரண்டு கைத்தலமாகிய செந்தாமரை மலரிடத்தும் சிவபெருமானருளியவாறு உமையம்மையார் இருகரங்களாலும் சரவணப் பொய்கையிலிருந்து ஆறு திருவுருவங்களையும் எடுத்து அன்போடு தழுவினார். சரவணம் - சரவணப் பொய்கை. சரவனம் - நாணற்காடு.

(அடி - 2) மேருச் சிலையாளி - மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமான். பாலலோசனம்- நெற்றிக்கண். அருணகிரி வாக்கினிடத்தும் - அருணகிரி நாதருடைய பாடல்களிடத்தும். அனுபூதியினும் - அனுபவித்த ஞான அனுபவித்திலும். அனுபூதி - தானே கண்டறிந்தும் பிறர்க்குச் சொல்ல இயலாததுமான அறிவு. "பேசா அனுபூதியான் பெற்றுப் பிழைக்க" (தாயுமானவர்) மறைச் சிரம் - பிரணவம். சிதாநந்தச் செந்தேன் பரவு ஐ கடலகத்தும் - அறிவானந்தமாகிய செந்தேன் பரவிய அழகிய கடலகத்தும். சிறியேன் - ஆசிரியர் தம்மைக் குறித்தது. சிந்தைச் சிலாதலம் - மனமாகிய கல்

(அடி - 4) முருகப்பெருமான் செம்மேனியுடையராதலின் "பவள இளங்கிளையின் முளையே" என்றார்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

சுற்றும் பரவை யுலகமொரு
துகளி னேந்தி யெறிந்தாடுந்
துளப நறுந்தார்ச் சூகரம்போர்
தொலையாப் பொருது பறித்திட்டு
* கொற்றம் பரவக் கொடுவந்து
கொழுத்த மார்பின் வெண்கோடும்
கோமான் குடிலைச் சடிலமுடிக்
குழவி மதியப் பனிக்கோடும்
தெற்று முரகம் இரையெனவாய்
திறப்பச் சேர்த்தும் அதுவகலத்
திரும்பப் பிரித்தும் இவ்வண்ணம்
செங்கைப் பதுமத் தலங்கொட்டி
முற்றும் விளையாட் டயருமிள
முகையே வருக வருகவே
முழுது மயிலா சலமுகந்த
முருகா வருக வருகவே. 54

சுற்றும் பரவை உலகம் ஒரு
துகளின் ஏந்தி எறிந்தாடும்
துளப நறுந்தார்ச் சூகரம்போர்
தொலையாப் பொருது பறித்திட்டு
கொற்றம் பரவக் கொடுவந்து
கொழுத்த மார்பின் வெண்கோடும்
கோமான் குடிலைச் சடிலமுடிக்
குழவி மதியப் பனிக்கோடும்
தெற்றும் உரகம் இரைஎனவாய்
திறப்பச் சேர்த்தும் அதுஅகலத்
திரும்பப் பிரித்தும் இவ்வண்ணம்
செங்கைப் பதுமத் தலங்கொட்டி
முற்றும் விளையாட் அயரும்இள
முகையே வருக வருகவே
முழுது மயிலா சலம்உகந்த
முருகா வருக வருகவே. 54

Digitization by Hindu-Heritage-Foundation of America (USA)

இளைய பிள்ளையாகிய முருகக்கடவுள் சிவபெருமான் திருமேனியில் விளையாடுதலைக் கூறும். சேர்த்தும், பிரித்தும், கொட்டி, விளையாட்டயரும், முகையே வருக என்க.

(அடி -1,2) சூகரம் - பன்றி, வராகம், தொலையா - தொலைத்து, செய்யா என்றும் வாய்பாட்டு வினையெச்சம். கொற்றம் பரவ - வராகத்தைக் கொன்ற வெற்றியெங்கும் பரவ. வெண்கோடும் - வெண்ணிறத்த தந்தமும். கோமான் - சிவபெருமான். குடிலச் சடிலமுடி - வட்டமான சடைமுடி.

(அடி - 3) தெற்றும் உரகம் -பின்னிக் கொண்டுள்ள பாம்பு. சிவபெருமானுடைய மார்பிலுள்ள வெண்மையான பன்றியின் தந்தத்தையும், சடையிலுள்ள இளஞ்சந்திரனையும் பாம்பானது தனக்குரிய இரையென்று கருதி வாயைத் திறக்கும்படி அவற்றுடன் சேர்த்தும், இரையல்லவென்றறிந்து அகல அதைப் பிரித்தும் இவ்வாறு ஏமாற்றமடையுப்படி செய்து நகைத்துக் கைகொட்டி விளையாடும் முருகன் என்க.

* கொற்றம் பறவை. பி-ழ்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

மறுவில் ஒருவாண் முகங்கதிர்கள்
வழங்கி ஞாலத் திருள்மாற்ற
வணங்கி யேத்தும் ஆர்வலர்க்கு
வரங்கள் ஒருவாண் முகங்கொடுப்ப
உறுதி புரியந் தணர்வேள்வி
ஓர்ப்ப ஒருவாண் முகமதிபோல்
ஒழிந்த பொருளே முறநாடி
ஒருவாண் முகமெண் டிசைவிளக்கச்
செறுநர் மடிய முறுக்கியொரு
திகழ்வாண் முகஞ்செங் களம்வேட்பச்
சிறுநுண் மருங்குல் குறவரல்குல்
செல்வி யொடுவாண் முகமொன்று
முறுவ லரும்ப விரும்புமறு
முகவா வருக வருகவே
முழுது மயிலா சலமுகந்த
முருகா வருக வருகவே 55

மறுவுஇல் ஒருவாண் முகம்கதிர்கள்
வழங்கி ஞாலத்து இருள்மாற்ற
வணங்கி ஏத்தும் ஆர்வலர்க்கு
வரங்கள் ஒருவாண் முகம்கொடுப்ப
உறுதி புரிஅந்தணர் வேள்வி
ஓர்ப்ப ஒருவாண் முகம் மதிபோல்
ஒழிந்த பொருள் ஏமுற நாடி
ஒருவாண் முகம் எண் திசை விளக்கச்
செறுநர் மடிய முறுக்கி ஒரு
திகழ்வாண் முகம் செங்களம் வேட்பச்
சிறுநுண் மருங்குல் குறவர் அல்குல்
செல்வி யொடு வாண்முகம் ஒன்று
முறுவல் அரும்ப விரும்பும் அறு
முகவா வருக வருகவே
முழுது மயிலா சலம்உகந்த
முருகா வருக வருகவே. 55

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆறு முகங்களின் செயல்கள் கூறப்படும்.

ஒருவாண்முகம் இருள் மாற்ற, ஒருவாண்முகம் வரங்கள்கொடுப்ப, ஒருவாண்முகம் ஓர்ப்ப, ஒருவாண்முகம் எண்டிசை விளக்க. ஒரு திகழ்வாண்முகம் செங்களம் வேட்ப, வாண்முகமொன்று முறுவல் அரும்ப விரும்பும் அறுமுகவா என்க.

(அடி - 2) உறுதி புரி அந்தணர் - நன்மைகளை விரும்பிச் செய்கின்ற அந்தணர். ஒழிந்த பொருள் ஏமுற நாடி - வேதாகமங்களில் மறைந்து கிடக்கும் பொருள்களை இருடிகள் இன்பம் பொருந்தும்படி ஆராய்ந்து. எண்திசை விளக்க - (சந்திரனைப் போல) எட்டுத் திசைகளையும் விளக்க. ஏமம், ஏம் எனக் இடைக்குறந்து நின்றது. கலை நிறைதலால் திங்கள் உவமையாயிற்று.

(அடி - 3) செறுநர் - தன்னை எதிர்த்த பகைவராகிய அசுரர்கள் செங்களம் - போர்க்களம், இரத்தத்தாற் சிவந்திருத்தலின் செங்களம் என்றார். செல்வி - வள்ளி நாயகி. இச் செய்யுள் திருமுருகாற்றுப்படையில் திருமுகங்கள் ஆற்றும் செயலாகக் கூறப்பட்டுள்ள, "மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப், பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுகம், ஆர்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக், காதலி னுவந்து வரங் கொடுத்தன்றே யொருமுகம் மந்திர விதியின் மரபுளிவழாஅ அந்தணர் வேள்வி யோர்க்கும்மே யொருமுகம், எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித் திங்கள் போலத் திசை விளக்கும்மே யொருமுகம். செறுநர்த் தேய்த்துச் செல்சம முடுக்கிக் கறுவுகொ ணெஞ்சமோடு களம்வேட் டன்றே யொருமுகம், குறவர் மடமகற் கொடிபோ னுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே", என்னும் அடிகளின் சொல்லையும் பொருளையும் தழுவிக் கூறப்பட்டது.

Digitization Hindu Heritage Foundation of America. HHFA(USA)

நகைத்தார் முடிவா னவர்க்கொருகை
நல்கி யேந்த ஒருகையுக்கம்
நயந்து தழுவ ஒருகைதுகில்
நலஞ்சேர் குறங்கின் மிசையசையப்
பகைத்தார் முனையங் குசமொருகை
பரித்துக் கடவ இருகரந்தோல்
பாத்தோ டெஃகு வலந்திரிப்பப்
பாணி யொன்று மார்பிலங்க
வகைத்தா ரொடுகை யொன்றிசைய
வான்மேற் றுடியோ டொருகைகொட்ட
மணியொன் றிரட்ட ஒருகைமழை
வழங்க ஒருகுஞ் சரிக்குமண
முகைத்தா ரொடுகை கூட்டமகிழ்
மொய்ம்பா வருக வருகவே
முழுது மயிலா சலமுகந்த
முருகா வருக வருகவே. 56

நகைத்தார் முடிவானவர்க்கு ஒருகை
நல்கி ஏந்த ஒருகை உக்கம்
நயந்து தழுவ ஒருகை துகில்
நலம்சேர் குறங்கின் மிசை அசையப்
பகைத்தார் முனை அங்குசம் ஒருகை
பரித்துக் கடவ இருகரம் தோல்
பாத்தோடு எஃகு வலம் திரிப்பப்
பாணி ஒன்று மார்பில் இலங்க
வகைத்தாரொடு கை ஒன்று இசைய
வான்மேல் துடியோடு ஒருகை கொட்ட
மணி ஒன்று இரட்ட ஒருகைமழை
வழங்க ஒருகுஞ்சரிக்கு மண
முகைத் தாரொடு கை கூட்ட மகிழ்
மொய்ம்பா வருக வருகவே
முழுது மயிலாசலம் உகந்த
முருகா வருக வருகவே. 56

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பன்னிரு திருக்கரங்களின் செயல்கள் கூறப்படும்.

ஒருகை ஏந்த, ஒருகை தழுவ, ஒருகை அசைய, ஒருகை அங்குசம் கடவ, இருகரம் தோல் எஃகு திரிப்ப, பாணி ஒன்று மார்பிலங்க, கையொன்று தாரொடு இசைய, ஒரு கை கொட்ட, ஒரு கை இரட்ட, ஒரு கை மழைவழங்க ஒருகை தார் சூட்டமகிழ் மொய்ம்பா என்க.

(அடி - 1) வானவர் - ஈண்டுத் தேவ இருடிகள். உக்கம் - மருங்கு. துகில் - ஆடை குறங்கு - தொடை.

(அடி - 2) அங்குசம் -தோட்டி, தோல் - பரிசை, எஃகு - வேலாயுதம். பாணி-கை.

(அடி -3) வகைத்தார் - பல்வகைத்தாய மாலை, துடி - உடுக்கை, மணி இரட்ட - மணியை மாறி யொலிக்கப் பண்ண.

இச் செய்யுள், "விண்செலன் மரபின் ஐயர்க்கேந்திய தொருகை, யுக்கம் சேர்த்திய தொருகை, நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை, யசைஇய தொருகை, அங்குசங் கடாவ வொருகை யிருகை, ஐயிரு வட்டமொ டெஃகு வலந்திரிப்ப வொருகை, மார்பொடு விளங்க ஒருகை, தாரொடு பொலிய ஒருகை, கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை, பாடின் படுமணி யிரட்ட ஒருகை, நீனிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை, வானர மகளிர்க்கு வதுவை சூட்டவாங்கப், பன்னிரு கையும் பாற்பட இயற்றி". என்னும் திருமுருகாற்றுப் படை அடிகளைத் தழுவிக் கூறப்பட்டது. இவ்வடிகளுக்கு நச்சினார்க்கினியர் உரையைக் காண்க.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

வேறு

களரி புகுந்த அவுணர்குலங்
களைந்தாய் வருக வருகவே
கானக் குறத்தி மணம்புணர்ந்த
கடம்பா வருக வருகவே
விளரி வரிவண் டுழுந்தாம
வேலா வருக வருகவே
விண்ணா டாள அமரர் சிறை
மீட்டாய் வருக வருகவே
தளரின் எதிர்நின் றெமைப்புரக்குந்
தலைவா வருக வருகவே
<u>சந்தத் தமிழ்பா டுதற்குவரந்</u>
<u>தந்தாய்</u> வருக வருகவே
முளரி யனைய ஆறுதிரு
முகவா வருக வருகவே
முழுது மயிலா சலமுகந்த
முருகா வருக வருகவே 57

கவரி புகுந்த அவுணரிகுலம்
களைநிதாபி வருக வருகவே
கானகி குறத்தி மணம் புணரிந்த
கடம்பா வருக வருகவே
விளரி வரிவண்டு உழுநிதாம
வேலா வருக வருகவே
விண்நாடு ஆள அமரரி சிறை
மீடபாபி வருக வருகவே
தளரின் எதிரிநின்று எமைபி புரக்கும்
தலைவா வருக வருகவே
<u>சந்தத் தமிழ்பாடுதற்கு வரம்</u>
<u>தந்தாபி</u> வருக வருகவே
முளரி அனைய ஆறுதிரு
முகவா வருக வருகவே
முழுது மயிலாசலம் உகந்த
முருகா வருக வருகவே. 57

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA

களரி – போர்க்களம். விளரி – விளரிப்பண். தளரின் – தளர்ச்சியுற்ற காலத்தில். முளரி – தாமரை மலர்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

வேறு

விதுவும் உரகமு நதியு மிடைசடை
விடையன் ஒருமகன் வருகவே
வினையின் வலிகெட அருள்பன் னிருவிழி
விரகன் நிருபமன் வருகவே
குதலை யமுதுகு மதலை கலைதெரி
குரிசில் அதிசயன் வருகவே
குழலன் அடல்புரி தகரன் எழில்பெறு
குமர குருபரன் வருகவே
பதும மலர்மிசை யவனை யிடுசிறை
பணிய விடுபவன் வருகவே
பளியர் குலமட வனிதை தனகிரி
படியும் அழகினன் வருகவே
மதுகை அயில்கொடு புழுதி படவொரு
வரையை யெறிபவன் வருகவே
மயிலை நெடுமலை யதிபன் அரிதிரு
மருகன் அறுமுகன் வருகவே 58

விதுவும் உரகமும் நதியும் மிடைசடை
விடையன் ஒருமகன் வருகவே
வினையின் வலிகெட அருள் பன்னிருவிழி
விரகன் நிருபமன் வருகவே
குதலை அமுதுஉகு மதலை கலைதெரி
குரிசில் அதிசயன் வருகவே
குழலன் அடல்புரி தகரன் எழில்வெறு
குமர குருபரன் வருகவே
பதும மலர்மிசை யவனை இடுசிறை
பணிய விடுபவன் வருகவே
பளியர் குலமட வனிதை தனகிரி
படியும் அழகினன் வருகவே
மதுகை அயில்கொடு புழுதி படஒரு
வரையை எறிபவன் வருகவே
மயிலை நெடுமலை அதிபன் அரிதிரு
மருகன் அறுமுகன் வருகவே 58

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

விதுவும் -சந்திரனும், விடையன் - காளை வாகத்தையுடைய சிவபெருமான்.

(அடி - 1,4) குழலன் - குழலையுதுபவன் "குழயூலன் கோட்டன் குறும்பல்லி யத்தன்" (திருமுருக) அடல் புரி தகரன் - வலிமை பெருந்தியஆட்டுக் கடாவை ஊர்தியாக வுடையவன். மதுகை -வன்மை. வரையை - கிரவுஞ்சமலையை.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அதிரும் அலைகடல் கதற ஒருமுறை
அயிலை விடுபவன் வருகவே
அமரர் சிறைவிட அசுரர் குறைபட
அமரின் அடுபவன் வருகவே
முதிரும் ஒருகிழ வுருவன் ஒருமழ
முருக னெனுமவன் வருகவே
முழுதும் வழிவழி எமையும் அடிமைகொள்
முதல்வன் உமைமகன் வருகவே
எதிரும் யமபடர் மறிய மயின்மிசை
இசைய வருபவன் வருகவே
இனிய கடலையெள் ளயிலும் இபமுகன்
இளையன் அடல்புரி வருகவே
மதுர கவிபுனை தருபன் னிருபுயன்
வனச பதயுகன் வருகவே
மயிலை நெடுமலை யதிபன் அரிதிரு
மருகன் அறுமுகன் வருகவே. 59

அதிரும் அலைகடல் கதற ஒருமுறை
அயிலை விடுபவன் வருகவே
அமரர் சிறைவிட அசுரர் குறைபட
அமரின் அடுபவன் வருகவே
முதிரும் ஒருகிழ உருவன் ஒருமழ
முருகன் எனும் அவன் வருகவே
முழுதும் வழிவழி எமையும் அடிமைகொள்
முதல்வன் உமைமகன் வருகவே
எதிரும் யமபடர் மறிய மயின்மிசை
இசைய வருபவன் வருகவே
இனிய கடலை எள் அயிலும் இபமுகன்
இளையன் அடல்புரி வருகவே
மதுர கவிபுனை தரு பன்னிரு புயன்
வனச பதயுகன் வருகவே
மயிலை நெடுமலை அதிபன் அரிதிரு
மருகன் அறுமுகன் வருகவே. 59

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

(அடி - 1) அதிரும் அலைகடல் கதற ஒருமுறை அயிலை விடுபவன் -ஒலிக்கின்ற அலையையுடைய கடலானது கதறும்படி ஒருமுறை வேலாயுதத்தை விடுத்தவன். சூரபதுமன் கடலில் மறைந்தபொழுது வேலாயுதத்தை விடுத்ததைக் குறித்தது.

(அடி - 2) கிழவுருவன் - வள்ளிநாயகியிடத்துக் கிழவுருக்கொண்டு சென்றவன்.

(அடி - 3) யம படர் மறிய - யம தூதர் திரும்பிச் செல்ல. இபமுகன் இளையன் - யானை முகக்கடவுளுக்கு இளையவன்.

(அடி -4) வசை பதயுகன் -தாமரை மலர் போலும் இரண்டு திருவடிகளையுடையவன்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

7.அம்புலிப் பருவம்

ஒருபரம் பரனுக்கு மொழியொன் றுரைத்ததனை
யொருநால்வ ருக்குரைத்து
உற்றதொரு வடநிழலு கந்துறைதி நீயென்ன
ஓதியோ தப்பரவை நீர்
பருகுகும் போதய முனிக்குமுத் தமிழையும்
பாலித்து மலயத்துநீ
பன்னிருவ ருக்கிசைத் தமருகென வேபணி
பணித்துப் பணிப்பாரெலாந்
தெருளுமால் பரியவே அட்டமா சித்தியுஞ்
சின்மயா நந்தநிலையும்
தேருமெண் ணெண்கலையு நண்ணுவண் ணந்தந்து
*சிவஞான தேசிகரிக்கு
அருள்சுரந் துதவியவன் உனைவர அழைத்தனன்
அம்புலீ யாடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோ
டம்புலீ யாடவாவே. 60

ஒருபரம் பரனுக்கு மொழி ஒன்று உரைத்துஅதனை
ஒரு நால்வருக்கு உரைத்து
உற்றதுஒரு வடநிழல் உகந்து உறைதி நீஎன்ன
ஓதிஓதப் பரவை நீர்
பரு குகும்போதய முனிக்கு முத்தமிழையும்
பாலித்து மலயத்துநீ
பன்னிருவருக்கு இசைத்து அமருகஎனவே பணி
பணித்துப் பணிப்பார் எலாம்
தெருளுமால் பரியவே அட்டமா சித்தியும்
சின்மயாநந்த நிலையும்
தேரு எண்ணெண் கலையும் நண்ணும் வண்ணம் தந்து
*சிவஞான தேசிகரிக்கு
அருள்சுரந்து உதவியவன் உனைவர அழைத்தனன்
அம்புலீ ஆடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோடு
அம்புலீ ஆடவாவே. 60

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சாம உபாயங் கூறப்பட்டது

உரைத்து, ஓதி, பாலித்து, பணித்து, தந்து, உதவியவன், அழைத்தனன் என்க. நீ; உகந்து, உரைத்து, உறைதி எனவும், நீ, இசைத்து, அமருக எனவும் இயைக்க.

(அடி - 1) ஒரு பரம்பரனுக்கு - ஒப்பற்ற சிவபெருமானுக்கு, மொழி ஒன்று - பிரணவமாகிய ஒரு மொழி. நால்வர் - சனகாதி முனிவர் நால்வர். வடநிழலில் - கல்லால மரத்தின் நிழலில்.

(அடி - 2) கும்போதய முனிக்கு - அகத்தியருக்கு. முத்தமிழையும் - இயல் - இசை - நாடகமாகிய முத்தமிழையும். மலயம் - பொதிய மலை. பன்னிருவர் - அகத்தியருடைய மாணவர் தொல்காப்பியர் முதலிய பன்னிருவர்.

(அடி - 3) அட்டமாசித்தி : - அணிமா, மகிமா. கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம். வசித்துவம். சின்மயா நந்த நிலை - அறிவு மயமாகிய ஆனந்த நிலை. எண்ணெண் கலைகள் - அறுபத்து நான்கு கலைகள். அவற்றைப் பொருட்டொகை நிகண்டிற் காண்க.

முருகக் கடவுள் சிவபெருமானுக்கு ஒரு மொழியை யுரைத்து அதனைக் கல்லாலின் கீழிலிருந்து நால்வருக்கு அருளுமாறு பணித்தார். அகத்தியர்க்கு முத்தமிழை யுணர்த்திப் பொதியில் அமர்ந்து பன்னிருவருக்கு அறிவிக்கப் பணித்தார். உலகினர் மயக்கம் நீங்கச் சிவஞான தேசிகேந்திரர்க்கு அட்டமா சித்தியையும் அறுபத்து நான்கு கலைகளையும் சின்மயானந்த நிலையையும் அறியும் படி அருள் புரிந்தார் என்று ஆசிரியர் சிவஞானபாலைய தேசிகர்க்கு அபரஞானம் பரஞானங்களை உள்ளுணர்வினின்று முருகக்கடவுள் உணர்த்தியதை அறிவிக்கிறார்.

சிவஞான தேசிகேந்திரர்க்கு - பி-ம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மீதுலாம் அமரருக் கமுதநீ யுதவுவாய்
வெய்யவே லேந்தியிவனு
மேலிட்டு வல்லசுரர் கொள்ளைகொண் டுண்ணாமல்
வென்றிகொண் டமுதளிப்பான்
ஈதலால் நீயுங் கலாதரன் எமக்கினிய
இவனுங் கலாதரன்காண்
எம்பிரான் மகுடமணி நீயிவனு மவனுக்
கிரத்னசூ டப்பிரபைகாண்
காதலா னீயுமலர் காவிக் குகந்தவன்
கங்கைநங் கைக்குமிமய
கன்னிக்கு மகவா னிவனுந் திருத்தணிக்
காவிக் குகந்தவன்காண்
ஆதலால் இவனுக்கு நிகராவை நீயிவனோ
டம்புலீ யாடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோ
டம்புலீ யாடவாவே. 61

மீதுஉலாம் அமரருக்கு அமுதநீ உதவுவாய்
வெய்ய வேல் ஏந்தி இவனு(ம்)
மேலிட்டு வல்அசுரர் கொள்ளைகொண்டு உண்ணாமல்
வென்றிகொண்ட அமுது அளிப்பான்
ஈதலால் நீயும் கலாதரன் எமக்கு இனிய
இவனும் கலாதரன்காண்
எம்பிரான் மகுடமணி நீஇவனும் அவனுக்கு
இரத்தின சூடப் பிரபைகாண்
காதலால் நீயும்அலர் காவிக்கு உகந்தவன்
கங்கை நங்கைக்கும் இமய
கன்னிக்கு மகவான் இவனும் திருத்தணிக்
காவிக்கு உகந்தவன்காண்
ஆதலால் இவனுக்கு நிகராவை நீஇவனோடு
அம்புலீ ஆடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசரவண பவனோடு
அம்புலீ ஆடவாவே. 61

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHF) (USA)

இதுவும் சாம உபாயம்

(அடி - 1) நீ அமரருக்கு அமுதம் உதவுவாய் - நீ தேவர்களுக்குக் கிரணமாகிய அமுதத்தை அருந்த உதவுவாய். “பொங்கமுதம் அமுதாசனர்கருதவினாய்” (முத்துக்குமரசாமி - பிள்ளை) அமரருண்டி (பரிபாடல் 11-35) அமுது அளிப்பான் - தேவாமுதத்தைக் கொடுப்பான்.

(அடி - 2) நீயும் கலாதரன் - நீயும் கலைகளைத் தரித்திருப்பவன். இவனும் கலாதரன் - முருகனாகிய இவனும் சாத்திரங்களையுணர்ந்தவன். நீ எம்பிரான் மகுட மணி - சந்திரனாகிய நீ எம் சிவபிரானுடைய முடியில் அணி போலிருப்பவன். இவனும் அவனுக்கு இரத்ன சூடப்பிரபை காண் - முருகனாகிய இவனும் அச்சிவபிரானுக்கு இரத்தின முடியிலுள்ள ஒளியாயிருப்பவன் என்பதை அறிவாய்.

(அடி - 3) நீயும் அலர் காவிக்கு உகந்தவன் - சந்திரனாகிய நீயும் மலர்கின்ற காவி மலருக்கு விருப்பமுடையோன். இவனும் திருத்தணிக் காவிக்கு உகந்தவன் - முருகனாகிய இவனும் திருத்தணியிலுண்டாகும் காவி மலருக்கு விருப்புமுடையோன்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

ஓகையால் இங்குவந் தனையாகி னின்னுடைய
ஒழியாத இரவொழிப்பன்
ஊதுலைப் பொங்குகன லென்னநெடு மூச்செறிந்
துரகனெயி றூன்றவருநாள்
தோகையா லதுவுந் துரப்பனின் னுடலுற்ற
துகளையுந் துகள்படுப்பன்
சூல்கொண்ட தேனிறா லெனவிவன் மலைக்குறவர்
தொடராம லுந்தடுப்பன்
வாகையால் வரைமத்து நட்டுநெடு தறியாக
வையாம லுய்யும்வணம்
மதுகைமா துலனுக் குரைத்தற்கும் வல்லவன்
மற்றவர மும் பெறலுமாம்.
ஆகையால் வருவதே கருமம்வடி வேலனுடன்
டம்புலீ யாடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோ
டம்புலீ யாடவாவே. 62

ஓகையால் இங்கு வந்தனை யாகின் நின்னுடைய
ஒழியாத இரவு ஒழிப்பன்
ஊதுலைப் பொங்கு கனல் என்னநெடுமூச்செறிந்து
உரகன் எயிறு ஊன்ற வருநாள்
தோகையால் அதுவும் துரப்பன் நின் உடலுற்ற
துகளையும் துகள்படுப்பன்
சூல்கொண்ட தேன் இறால் எனஇவன் மலைக்குறவர்
தொடராமலும் தடுப்பன்
வாகையால் வரைமத்து நட்டு நடுதறியாக
வையாமல் உய்யும்வணம்
மதுகை மாதுலனுக்கு உரைத்தற்கும் வல்லவன்
மற்ற வரமும் பெறலுமாம்.
ஆகையால் வருவதே கருமம் வடிவேலனுடன்
அடம்புலீ ஆடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோடு
அடம்புலீ ஆடவாவே. 62

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA)(USA)

தான உபாயம் கூறப்பட்டது

(அடி - 1) ஓகையால் - மகிழ்ச்சியால். இரவு - இராக்காலம், யாசித்தல். உரகன் - இராகு என்னும் பாம்பு. எயிறு - பல். நாள் - கிரகணகாலம்.

(அடி 2) தோகையால் - மயிலால். துகளையும் துகள் படுப்பான் - உடற்களங்கத்தையும் தூசிபோல் இல்லாமற் செய்வன். சூல் கொண்ட தேன் இறால் - நிறைந்த தேன் இறாட்டு.

(அடி - 3) வரைமத்து - மந்திரமலையாகிய மத்து. நடுதறி - நடுகின்ற தம்பம். தேவர்கள் கடலைக் கடைந்த காலத்தில் சந்திரனைத் தம்பமாக நாட்டினர். மாதுலன் - திருமால்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

நானாலு கலைதனக் கதிபனீ யிவனுற்ற
நானா கலைக்குமதிபன்
நளினங்கள் குவியநீ வருவையிவ னமரர்முக
நளினங்கள் மலரவருவான்
ஊனாலு முடலத்து மறுவுண் டுனக்கெம
துயிர்க்குமுயி ராகுமிவனுக்
கொருமறுவு மின்றாகு மன்றியுங் கூரெயிற்
றுரகமுனை வந்துதொடரும்
தேனாலு நீபச் செழுந்தெரிய லானிவன்
சிகிவாக னங்காணலுந்
திசைதிசை முறிந்தோடு மாகையா னீயெங்கள்
செல்வனுக் கிணையல்லைகாண்
ஆனாலும் வருகவென வுனையுழைத் தனனிவனோ
டம்புலீ யாடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோ
டம்புலீ யாடவாவே. 63

நானாலு கலைதனக்கு அதிபன் நீ இவன் உற்ற
நானா கலைக்கும் அதிபன்
நளினங்கள் குவியநீ வருவை இவன் அமரர்முக
நளினங்கள் மலரவருவான்
ஊனாலும் உடலத்து மறுவுண்டு உனக்கு எமது
உயிர்க்கும் உயிராகும் இவனுக்கு
ஒருமறுவும் இன்றாகும் அன்றியும் கூரீஎயிற்று
உரகம் உனை வந்துதொடரும்
தேனாலு நீபசி செழுந்தெரியலான் இவன்
சிகிவாகனம் காணலும்
திசைதிசை முறிந்துஓடும் ஆகையால் நீ எங்கள்
செல்வனுக்கு இணையல்லை காண்
ஆனாலும் வருக என உனை அழைத்தனன் இவனோடு
அம்புலீ ஆடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோடு
அம்புலீ ஆடவாவே. 63

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

பேத உபாயங் கூறப்பட்டது.

(அடி - 1) நீ நானாலு கலைதனக்கு அதிபன் - சந்திரனாகிய நீ பதினாறு கலைகளுக்குத் தலைவன். இவன் உற்ற நானா கலைக்கும் அதிபன் - முருகனாகிய இவன் உலகிலுள்ள பல கலைகளுக்கு தலைவன். "கலை யெண்ணிரண் டுடையை, யிவனெண்ணெண் கலை கடந்தவன்" (சிவஞானபாலைய - பிள்ளை)

நீ நளினங்கள் குவிய வருவை - நீ தாமரை மலர்கள் இதழ்குவியத் தோன்றுவாய், இவன் அமரர் முக நளினங்கள் மலர வருவான் - முருகனாகிய இவன் தேவர்களுடைய முகங்களாகிய தாமரை மலர்கள் மலரத் தோன்றுவான்.

(அடி - 2) உடலத்து மறு உண்டு - உன் உடலில் களங்கம் உண்டு. இவனுக்கு ஒரு மறுவும் இன்றாகும் - முருகனாகிய இவனுக்குச் சிறு குற்றமும் இல்லையாகும். "மறுவுண்டுனக் கிவற்கில்லையால் ஓர் மறுவும்" (சிவஞான பாலையா பிள்ளை)

(அடி - 3) சிகிவாகனன் - மயிலை ஊர்தியாகவுடையவன். செல்வனுக்கு - அருட் செல்வனாகிய முருகக் கடவுளுக்கு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்யநிற முடையசூட் டரிகுரற்கா லாயுதச்
சேவலங் கொடிவிசும்பிற்
சிந்துவெண் பொரியெனத் தாரா கணங்களைச்
சிதறக் கொறிக்குமந்நாள்
நொய்யமதி யாமுனையு நூக்கியது நுகர்தற்கு
நோக்கினு நோக்குமன்றி
நொடியினுன தொளிகெடப் பருதியைக் கூவுகென
நுவல்வதும் அருமையன்றால்
வெய்யகத ழெரிகதுவ நீயுற்ப வித்திட்ட
வேலைவட் டப்புணரிமேல்
வெங்கால தண்டமு நடுங்கிமுன் புகலஞ்சும்
வேல்விடுப் பினும்விடுக்கும்
ஐயனிவன் வெகுளுமுன் வருவதே காரியம்
அம்புலீ யாடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோ
டம்புலீ யாடவாவே. 64

செய்ய நிறமுடைய சூட்டு அரிகுரல் கால் ஆயுதச்
சேவலங் கொடிவிசும்பிற்
சிந்துவெண் பொரியெனத் தாரா கணங்களைச்
சிதறக் கொறிக்கும் அந்நாள்
நொய்ய மதியாம் உனையும் நூக்கி அது நுகர்தற்கு
நோக்கினு(ம்) நோக்கு(ம்) அன்றி
நொடியின் உனது ஒளிகெடப் பருதியைக் கூவுக என
நுவல்வதும் அருமை அன்று ஆல்
வெய்யகதழ் எரிகதுவ நீ உற்பவித்திட
வேலை வட்டப் புணரிமேல்
வெங்கால தண்டமு(ம்) நடுங்கிமுன் புகல் அஞ்சும்
வேல் விடுப்பினும் விடுக்கும்
ஐயன் இவன் வெகுளுமுன் வருவதே காரியம்
அம்புலீ ஆடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோடு
அம்புலீ ஆடவாவே. 64

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

த்ண்ட உபாயங் கூறப்பட்டது.

(அடி - 1) சூட்டு - உச்சிக் கொண்டை. அரி குரல் காலாயுதச் சேவல் அம் கொடி - சிலம்பு போல் ஒலிக்கும் குரலையுடைய காலையே ஆயுதமாகவுடைய சேவலாகிய அழகிய கொடி. தாராகணங்களை - நட்சத்திரக் கூட்டங்களை.

(அடி - 2) நோக்கினும் நோக்கும் - பார்த்தலையும் செய்தல் கூடும். பருதியை - சூரியனை அருமையன்று - எளிது.

(அடி - 3) உற்பவித்திட்ட - தோன்றிய. புணரி - கடல். வெங்கால தண்டம் - நமனுடைய ஆயுதம். விடுப்பினும் விடுக்கும் - விடுத்தலையும் செய்தல் கூடும்.

"நோக்கினும் நோக்கும்" "விடுப்பினும் விடுக்கும்" என்னுந் தொடர்கள் "அணியலு மணிந்தன்று" (புறம் - 1) "இயங்கினும் இயங்கும் மயங்கலும் மயங்கும்" (சிலம் - 22.154) என்பன போன்றவை.

முருகப் பெருமானுடைய சேவற்கொடி வானிலுள்ள நட்சத்திரக் கூட்டங்களைப் பொரி யென்று கருதிக் கொறிக்கும் காலத்தில் உன்னையும் அவற்றுடன் தள்ளி உண்ணும்படி அதனை முருகன் பார்த்தலுங் கூடும்; அல்லாமல், உன் ஒளி கெடச் சூரியனை அழைப்பாயென்று சேவலுக்குக் கட்டளை யிடுவதும் அவனுக்கு எளிதாகும். நீ தோன்றிய கடலில் வேலாயுதத்தை விடுத்தாலும் விடுவான். ஆதலின், சந்திரனே! இவன் கோபங் கொள்ளுமுன் வருவதே உனக்குரிய நற்செயலாகும்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

இந்திரன் அல்லைநீ நாபியம் போதினில்
இருந்துலக மீரேழையும்
ஈன்ற நான் முகனல்லை அன்னவனை யுதவியுனை
எறிகடல் கடைந்தஞான்று
மந்த்ரகிரி மத்தென நிறுத்திடுந் தறியாக
வாசுகி பிணித்திழுத்த
மாலவனு மலையிவனை ஒருமொழி வினாவிய
மகதேவ னல்லைநீயோர்
சந்திர னுன்னையிச் சங்க்ராம வேலவன்
தண்டிப்ப தருமையன்றால்
சந்ததமு மங்களா காரமா கியனந்
தமக்குவழி பட்டொழுகுவான்
அந்தரத் திரிவனோ எனவர அழைத்தனன்
அம்புலீ யாடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோ
டம்புலீ யாடவாவே. 65

இந்திரன் அல்லைநீ நாபியம் போதினில்
இருந்து உலகம் ஈரேழையும்
ஈன்ற நான்முகன் அல்லை அன்னவனை உதவியுனை
எறிகடல் கடைந்த ஞான்று
மந்திரகிரி மத்துஎன நிறுத்திடும் தறியாக
வாசுகி பிணித்து இழுத்த
மாலவனு மலையிவனை ஒருமொழி வினாவிய
மகதேவன் அல்லை நீயோரி
சந்திரன் உன்னை இச்சங்கிராம வேலவன்
தண்டிப்பது அருமை அன்றால்
சந்ததமு(ம்) மங்களா கார மாகியன்
தமக்கு வழிபட்டு ஒழுகுவான்
அந்தரத்து இரிவனோ எனவர அழைத்தனன்
அம்புலீ ஆடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோடு
அம்புலீ ஆடவாவே. 65

Digitization by Hindu-Heritage-Foundation of America(HHFA-USA)

இதுவும் தண்ட உபாயம்

(அடி - 1) நாபி அம்போது - திருமாலினுடைய அழகிய உந்தித்தாமரை. உலகம் ஈரேழையும் பதினான்கு உலகங்களையும்.

(அடி - 2) இவன் என்ற சுட்டு முருகக் கடவுளைக் குறித்தது. மகதேவன் - சிவபெருமான்.

(அடி - 3) "நீ ஓர் சந்திரன்" - என்றது ஒலிக் குறிப்பால் இழிவை யுணர்த்தியது. சங்க்ராம வேலவன் - போர் புரிகின்ற வேலாயுதத்தையுடைவன். தண்டிப்பது - அருமையன்று - வேற் படையையுடையனாதலின் உன்னைத் தண்டித்தல் அவனுக்கு எளிது. சந்ததமும் - நாள்தோறும். மங்களாகார மாகியன் - மங்கள வடிவமாகவுள்ளவன்.

(அடி - 4) அந்தரத்து இரிவனோ - ஆகாலத்தில் அலைவானோ . இது பிறன்கட்டோன்றிய இளிவரல்.

முன்னவன் கடலைபொரி யவல்முதிரை யெள்ளுண்டை
முக்கனிக் குவைசர்க்கரை
முக்கிய மகோதரன் பூதரம் பொருவேழ
முகவன்விக் கினமெவைக்கு
மன்னவன் உன்னைவெஞ் சாபமிட் டதுதன்னை
மாற்றுதற் கின்னமுந்தான்
மாட்டாது புவியெலாங் கண்புதைப் பக்ககன
வட்டத் தலைந்துதிரிவாய்
இன்னவன் பின்னவ னென்பதுந் தெரிவைநீ
இருமூன்று வதனமெய்தும்
எங்கள்குல மதலைக்கு நின்மீது கோபம்வரின்
எவரே தடுக்கவல்லார்
அன்னவை செய்வதிவ னுக்கருமை யன்றுகாண்
அம்புலீ யாடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோ
டம்புலீ யாடவாவே. 66

முன்னவன் கடலைபொரி அவல்முதிரை எள்ளுண்டை
முக்கனிக் குவை சர்க்கரை
முக்கிய மகோதரன் பூதரம் பொருவேழ
முகவன் விக்கினம் எவைக்கும்
அன்னவன் உன்னை வெஞ்சாப மிட்டது தன்னை
மாற்றுதற்கு இன்னமுந்தான்
மாட்டாது புவியெலாம் கண்புதைப்பக் ககன
வட்டத்து அலைந்து திரிவாய்
இன்னவன் பின்னவன் என்பதும் தெரிவைநீ
இருமூன்று வதனம் எய்தும்
எங்கள்குல மதலைக்கு நின்மீது கோபம்வரின்
எவரே தடுக்கவல்லார்
அன்னவை செய்வது இவனுக்கு அருமை அன்று காண்
அம்புலீ ஆடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோடு
அம்புலீ ஆடவாவே. 66

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதுவும் தண்ட உபாயம்

(அடி - 1) முன்னவன் - முருகக்கடவுளுக்கு மூத்தவன் (விநாயகக் கடவுள்) குவை - குவியல், முக்கிய மகோதரன் - நிரம்ப வாயிலிட்டு உண்ட பெருவயிறன். பூதரம் பொரு - மலையை யொத்த. விக்கினம் - இடையூறு.

(அடி - 2) "விக்கின மெவைக்கும் மன்னவன்.... திரிவாய்" - என்றது விநாயக சதுர்த்தியன்று சந்திரனைப் பார்த்தல் கூடாது என்று விநாயகர் சாப மிட்டதைக் குறித்தது. சிங்கமா மதியிடைச் சேர்முன் பக்கத்துத், தங்கிடுஞ் சதுர்த்தியிற் றன்னைக் காணற்க, மங்குல்வான் முன்போல் மற்றை நாளெல்லாம், அங்கவ னுருவினை யாருங் காண்கவே (விநாயக - சந்திரன் அனுட்டித்த - 21). "ஒருநாள், கண்கொண்டு பார்க்கவுங் கடவ தன்றெனவும் கடற்புவி யெழுத்திகழவிண், புலத்தோடும் உடுமீன் கணத்தோடு ஓடுநின் போல்வார்க்கு" (மீனாட்சியம்மை - பிள்ளை)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டதொரு மறுவின்றி நிறைவின்றி நாளுமே
குறைவின்றி வாளராவின்
கூரெயி றுருக்கும்வெங் காளகூ டத்தினாற்
குலைகுலைந் துலைவதின்றி
மண்டலமும் விண்டலமும் இரவொழிய ஒழியாத
மலதிமிர படலத்தொடும்
வல்லிருளை யுந்துரந் தடுவதொடு மதிபிறிது
வரவழைப் பினும் அழைப்பன்
புண்டரிக னைச்சிறையி லிட்டுநெட் டுததியும்
பூச்சக்ர வாளகிரியும்
புரதகன ருத்ரகோ தண்டவே தண்டமும்
புதிதினவ கண்டவைப்பும்
அண்டமும் அகண்டமுந் தரவும்வல் லவனிவனோ
டம்புலீ யாடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோ
டம்புலீ யாடவாவே. 67

கொண்டதொரு மறுவுஇன்றி நிறைவுஇன்றி நாளுமே
குறைவுஇன்றி வாள் அராவின்
கூர் எயிறுஉருக்கும் வெங்காள கூடத்தினால்
குலை குலைந்து உலைவதுஇன்றி
மண்டலமும் விண்தலமும் இரவு ஒழிய ஒழியாத
மலதிமிர படலத்தொடும்
வல்இருளையும் துரந்து அடுவதுஒரு மதிபிறிது
வரவழைப்பினும் அழைப்பான்
புண்டரிகனைச் சிறையிலிட்டு நெட்டுததியும்
பூச்சக்கிர வாளகிரியும்
புர தகன ருத்திர கோதண்ட வேதண்டமும்
புதிதின்நவ கண்ட வைப்பும்
அண்டமும் அகண்டமும் தரவும் வல்லவன் இவனோடு
அம்புலீ ஆடவாவே
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனோடு
அம்புலீ ஆடவாவே. 67

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதுவும் தண்ட உபாயம்

வரவழைப்பினும் அழைப்பன், தரவும் வல்லன், இவனோடு ஆடவா என்க. மறு இன்றி, நிறைவின்றி, குறைவின்றி, உலைவதின்றி, அடுவதொருமதி என இயைக்க.

(அடி -1) நிறைவு இன்றி நாளுமே குறைவு இன்றி - நாள்தோறும் கலை நிறைதலில்லாமலும் நாள்தோறும் குறை தில்லாமலும். வாள் - அராவின் - ஒளி பொருந்திய இராகுவினால்: வெங்காள கூடம் - கொடிய நஞ்சின் மிகுதி.

(அடி - 2) இரவு ஒழிய - இராக்காலம் இல்லாதிருக்க. மல திமிர படலத்தொடும் - ஆணவ மலமாகிய இருட்படலத்துடனும்.

(அடி - 3,4) புண்டரிகனை - பிரமனை. நெட்டுததி - பெரியகடல். புர தகன ருத்ர கோதண்ட வேதண்டமும் - முப்புரத்தை யெரித்த உருத்திரனுடைய வில்லாகிய மேரு மலையையும் - புதிதின் நவகண்ட வைப்பும் - புதிதாக ஒன்பது கண்டமாகிய இடங்களையும். அகண்டம் - எல்லாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேறு

கலையெ லாமுணர் நிபுணன் நற்றமிழ்
கருணை தந்தருள் குமரவேள்
கமல யோனிதன் முடிபு டைத்திடு
காத லன்குகன் நிகரிலான்
இலவ வாயிதழ் ஒருகு றத்திதன்
இருத னங்களின் முழுகுவோன்
இரவி யாயிர முடியு தித்தென
எழில்பெ றுந்திரு வுருவினான்
உலைவி லாதெழு புவிய ளித்தருள்
உமைப ரம்பரை யருளுவோன்
உததி போலிரு கவுளின் மைக்கடம்
ஒழுகு மைங்கர னிளவலான்
மலைக ணாயகன் வரவ ழைத்தனன்
வருக அம்புலி வருகவே
மயிலை வேலவன் வரவ ழைத்தனன்
வருக அம்புலி வருகவே. 68

கலைஎலாம் உணர் நிபுணன் நற்றமிழ்
கருணை தந்துஅருள் குமரவேள்
கமலயோனிதன் முடி புடைத்திடு
காத லன் குகன் நிகரிலான்
இலவ வாய்இதழ் ஒரு குறத்திதன்
இருத னங்களில் முழுகுவோன்
இரவி ஆயிரம் முடி உதித்துஎன
எழில் பெறும் திருஉருவினான்
உலைவிலாது எழு புவி அளித்துஅருள்
உமை பரம்பரை அருளுவோன்
உததி போல் இரு கவுளின் மைக்கடம்
ஒழுகும் ஐங்கரன் இளவலான்
மலைகள் நாயகன் வர அழைத்தனன்
வருக அம்புலி வருகவே
மயிலை வேலவன் வரவ அழைத்தனன்
வருக அம்புலி வருகவே. 68

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அடி -1,2) கமல யோனி - பிரமன், இலவ வாயிதழ் ஒரு குறத்தி - இலவ மலர்போலும் செந்நிறத்த உதட்டையுடைய வள்ளி நாயகி. இரவி ஆயிர முடி யுதித்தென - ஆயிரம் சூரியர்கள் உதயகிரியில் தோன்றினாற்போன்ற. "இளம் பருதி நூறாயிரங் கோடிபோல வளந்தரு தெய்வீக வடிவும்" (கந்தர் கலி வெண்பா)

(அடி - 3,4) உமை பரம்பரை - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. மைக்கடம் - கரிய மதநீர். மலைகள் நாயகன் - குறிஞ்சி நிலத்தலைவன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தடம கோததி கதற மத்தெறி
தருக ரும்புயல் மருகனேழ்
சலதி யோடெழு தகுவ மைக்கடல்
தடிய வந்தருள் முருகவேள்
இடப கேதனன் உதவு புத்திரன்
எளிய னன்பையு மகிழுவோன்
இசைவ லார்துதி புனையும் வித்தகன்
எதிரில் வென்றிகொள் அடலினான்
கடக மாமணி வெயிலெ றித்திடு
கனக வண்புய னுலகுசூழ்
கலப மாமயின் மிசையு தித்திடு
கதிர வன்பொரு திரைகுலாம்
வடப கீரதி மகன ழைத்தனன்
வருக அம்புலி வருகவே
மயிலை வேலவன் வரவ ழைத்தனன்
வருக அம்புலி வருகவே. 69

தட மகோததி கதற மதிது எறி
தரு கருமபுயல் மருகன் ஏழ்
சலதியோடு எழு தகுவமைக் கடல்
தடிய வந்துஅருள் முருகவேள்
இடப கேதனன் உதவு புத்திரன்
எளியன் அன்பையும் மகிழுவோன்
இசை வலார் துதி புனையும் வித்தகன்
எதிரில் வென்றிகொள் அடலினான்
கடக மாமணி வெயில் எறித்திடு
கனக வண்புயன் உலகு சூழ்
கலப மாமயின் மிசை உதித்திடு
கதிரவன் பொரு திரைகுலாம்
வடப கீரதி மகன் அழைத்தனன்
வருக அம்புலி வருகவே
மயிலை வேலவன் வர அழைத்தனன்
வருக அம்புலி வருகவே. 69

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

(அடி - 1) மகோததி - பெரிய கடல். மகா+உததி (குணசந்தி) கரும்புயல் - கரிய மேகம் போலும் நிறத்தையுடைய திருமால். ஏழ்சலதி - ஏழ்கடல். எழு தகுவ மைக்கடல் - போருக்கு எழுகின்ற அசுரராகிய கரிய கடல். தடிய - அழிக்க. இடபகேதனன் - இடபக் கொடியையுடைய சிவபெருமான். எளியன் என்றது நூலாசிரியைரக் குறித்தது. வடபகீரதி - வடதிசைக்கண் உள்ள கங்கை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8. சிறுபறைப் பருவம்

வேறு

உந்தா யிரங்கிரண கோடானு கோடிரவி
யுதையஞ்செய் தாலுமகலா
துற்றவா ணவதிமிர படலமுழு வதுமுடைய
வுடைதிரை திரைத்துமோதிப்
பிந்தாது கரைபொருஞ் சலராசி யுஞ்சிறுகு
பெற்றியிற் பெருகுசனனப்
பிழைவற்ற முற்றவிங் துனதுகரு ணாப்ரவா
கம்பெருக் காய்நிறைப்ப
மந்தாகி கினிக்குடில மகுட கோடீரன்
வணங்கவுணர் வித்தவாய்மை
மவுனமொழி யாலுரைத் தெங்கள் சிவ ஞானிதன்
மணிமௌலி மீதுவைத்த
செந்தா மரைக்கைத் தலஞ்சிவப் பூரநீ
சிறுபறை முழக்கியருளே
செம்பொன் மயிலைக்கிரி யுகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கியருளே. 70

உந்த ஆயிரம் கிரண கோடானு கோடிஇரவி
உதயம் செய்தாலும் அகலாது
உற்ற ஆணவ திமிர படலம் முழுவதும் உடைய
உடைதிரை திரைத்துமோதி
பிந்தாது கரைபொரும் சலராசியும் சிறுகு
பெற்றியில் பெருகு சனனப்
பிழைவற்ற முற்ற இங்கு உனது கருணாப்ரவாகம்
பெருக்காய் நிறைப்ப
மந்தாகினிக் குடில மகுட கோடீரன்
வணங்க உணர்வித்த வாய்மை
மவுனமொழியால் உரைத்து எங்கள் சிவஞானிதன்
மணிமௌலி மீது வைத்த
செந்தாமரைக்கைத் தலம் சிவப்பூரநீ
சிறுபறை முழக்கி அருளே
செம்பொன் மயிலைக்கிரி உகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கி அருளே. 70

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

உடைய், வற்ற, நிறைப்ப, சிவப்பூர, முழக்கியருள் எனவும்; வைத்த, கைத்தலம் சிவப்பூர முழக்கியருள் எனவும் இயைக்க.

(அடி - 1) உந்து -வெளியிடுகின்ற. ரவி - சூரியன். ஆணவ திமிர படலம் - ஆணவ மலமாகிய இருட்படலம். உடைய - பின்னிட்டுச செல்ல. திரை திரைத்து - அலை அலைத்து.

(அடி - 2) சலராசி - கடல். சனனப் பிழைவற்ற - பிறப்பாகிய குற்றம் குறைய. கருணாப்ரவாகம் - திருவருட்பெருக்கு.

(அடி - 3) மந்தாகினிக் குடில மகுட கோடீரன் - கங்கையைத் தாங்கியுள்ள வட்மான மகுடமாகிய சடையை யுடைவன் (சிவபெருமான்)

(அடி - 4) "மந்தாகினி .... செந்தாமரைக் கை" - முருகக் கடவுள் சிவஞான பாலய சுவாமிகளுக்கு ஒரு மொழியை யுணர்த்தியதையும் அத்த மத்தக சையோக தீக்ஷை புரிந்தருளியதையும் உணர்த்தியதாம். மொழியால் - உருபு மயக்கம்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

கொங்கவிழ் பசுந்துணர் விரித்தகற் பகநிழற்
கோமகன் விழைவினணியுங்
குருமணி யிழைத்தமுடி யோவிந்த்ர நீலக்
குவட்டுவளர் பவளமலையோ
பைங்கயல் குதித்துகளு மீரநெட் டோடையிற்
பாசடையி னிடைமலர்ந்த
பங்கயப் போதோ தடங்கண்வளர் மாயவன்
பாரவரை மார்பினணியோ
சங்கெறி தரங்கக் கருங்கடல் முகட்டெழுந்
தருணவரு ணப்பிரபைகூர்
தருபருதி யோவெனப் பொருதுவிரு திட்டசுரர்
சமரிட்டு முதுகிட்டபோர்
செங்கள முழக்கியதிர் மயிலேறு சேவகா
சிறுபறை முழக்கியருளே
செம்பொன் மயிலைக்கிரி யுகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கியருளே. 71

கொங்கு அவிழ் பசுந்துணர் விரித்த கற்பகநிழல்
கோமகன் விழைவின் அணியும்
குருமணி இழைத்த முடியோ இந்திர நீலக்
குவட்டுவளர் பவளமலையோ
பைங்கயல் குதித்து உகளும் ஈர நெட்டோடையில்
பாசடையின் இடை மலர்ந்த
பங்கயப் போதோ தடங்கண்வளர் மாயவன்
பார வரை மார்பின் அணியோ
சங்கு எறிதரங்கக் கருங்கடல் முகட்டு எழுந்து
அருண வருணப் பிரபை கூர்
தரு பருதியோ எனப் பொருது விருதிட்டசுரர்
சமரிட்டு முதுகிட்ட போர்
செங்கள முழக்கியதிர் மயிலேறு சேவகா
சிறுபறை முழக்கி அருளே
செம்பொன் மயிலைக்கிரி உகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கி அருளே. 71

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA (USA)

முருகக்கடவுள் மயிலூர்தியின் மீது அமர்ந்துள்ள தோற்றத்தை அறிவிப்பதாம். முடியோ, பவளமலையோ, பங்கயப் போதோ, மணியோ. பருதியோ என மயிலேறு சேவகா என்க.

(அடி - 1) கற்பக நிழல் கோமகன் -இந்திரன். குருமணி இழைத்த முடியோ - நன்னிறத்த இரத்தினங்கள் வைத்து இழைக்கப் பெற்ற முடியோ. குவடு - சிகரம்.

(அடி -2) பாசடை - பசிய இலை.

(அடி - 3) தரங்கம் - அலை, தருண வருணப் பிரபை கூர்தரு பருதியோ - அழகிய ஒளிமிக்க இளஞ்சூரியனோ. ஓகாரங்கள் - ஐயப்பொருளன.

"சங்கெறி.............பருதியோ" - "உலகமுவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு" (திருமுருகு) என்னும் அடிகளின் கருத்தைக் கொண்டது.

மயிலின் நீல நிறத்திற்கேற்ப இந்திரன், இந்திர நீலைமலை, தாமரையிலை, திருமாலின் மார்பு. கருங்கடல், ஆகியவற்றை ஒப்புமை கொள்ளவும், முருகக் கடவுளின் செந்நிறத் திருமேனிக்கேற்ப இந்திரனது இரத்தினமுடி, பவளமலை, செந்தாமரை மலர், திருமால் மார்பிலணிந்துள்ள அணி, உதயசூரியன் ஆகியவற்றை ஒப்புமை கொள்ளவும் கூறியிருக்கும் கவித்திறன் அறியத்தக்கது.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

மந்தார நந்தா வனத்திற்கு மததாரை
மயிறூக்கி யிட்டதென்ன
வழியுமால் யானைக்கும் அழிவுவந் தெய்தாமல்
மைந்தனுந் துஞ்சுறாமல்
சந்தாடு மணிமார்பி லொருவாத காதல்
தரவைத்த திருமடந்தை
தரியலா ரில்லம் புகாமலொரு நான்முகத்
தனையன்மண வாட்டிகொட்டி
நந்தாமல் வானுலகு பாழ்பட்டு விளியாமல்
நலிவுபட் டஞ்சியிந்த்ரன்
நடுநடுங் காமலுயிர் தந்தருளி யிந்த்ராணி
நயனார விந்தங்கணீர்
சிந்தாமல் மங்கிலியந் தந்துரட் சித்தவா
சிறுபறை முழக்கியருளே
செம்பொன் மயிலைக்கிரி யுகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கியருளே. 72

மந்தார நந்த வனத்திற்கு மததாரை
மயில் தூக்கி இட்டதுஎன்ன
வழியுமால் யானைக்கும் அழிவு வந்து எய்தாமல்
மைந்தனும் துஞ்சுறாமல்
சந்தாடு மணிமார்பில் ஒருவாத காதல்
தரவைத்த திருமடந்தை
தரியலார் இல்லம் புகாமல் ஒரு நான்முகத்
தனையன் மணவாட்டி கொட்டி
நந்[redacted]
நலிவு பட்டு அஞ்சி இந்திரன்
நடுநடுங்காமல் உயிர் தந்துஅருளி இந்திராணி
நயனார விந்தம் கணீர்
சிந்தாமல் மங்கிலியம் தந்து ரட்சித்தவா
சிறுபறை முழக்கி அருளே
செம்பொன் மயிலைக்கிரி உகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கி அருளே. 72

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA) (USA)

முருகக் கடவுள் தேவர்களைக் காத்த அருட்டிறம் கூறப்படும்.

எய்தாமல், துஞ்சாமல், புகாமல், நந்தாமல், விளியாமல், நடுநடுங்காமல், சிந்தாமல், ரட்சித்தவா என்க.

(அடி - 1) மந்தாரம் - வெள்ளை மந்தாரை, "மந்தார நந்தா வனத்திற்கு மயில்தூக்கி யிட்டதென்ன மததாரை வழியுமால் யானை". எனக் கூட்டுக. மந்தாரை ஐராவதத்திற்கும் மயில் மதநீரொழுக்கிற்கும் உவமை. மைந்தன் - இந்திரன் மகனாகிய சயந்தன்.

(அடி - 2) சந்து - சந்தனம். ஒருவாத - நீங்காத. தரியலார் - பகைவர், ஈண்டு அசுரர், நான்முகத் தனையன் மணவாட்டி - கலைமகள். கொட்டி நந்தாமல் - தாளமிட்டு வருந்தாமல்.

(அடி - 3) விளியாமல்- அழியாமல். நயனாரவிந்தம் கணீர் சிந்தாமல் - கண்ணாகிய தாமரை மலர் கண்ணீரைச் சிந்தாமல். கணீர் - கண்ணீர், கள்+நீர் = தேனாகிய நீர். நயன + அரவிந்தம் = நயனாரவிந்தம் (தீர்க்கசந்தி)

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பூவலங் குடுமிசூழ் காந்தளங் கண்ணியின்
புடைகுலவி அளியினங்கள்
பொன்மார்ப மீதணி கடப்பமா லிகையுழுவைம்
பொறிவண்டி னுடன்முழங்க
நாவலம் பொன்னினிற் புனைந்தகிண் கணிநாக
நகைமணி குயின்றதண்டை
ஞாலம்விற் குஞ்சிறு சிலம்புபொற் கழலினொடு
நளினபத யுகமுழங்கத்
தூவலம் பனையவரி விழியர மடந்தையர்
தூயவாழ்த் தொலிமுழங்கச்
சுருதிகொடு பரவமார் துதிமுழங் கப்பசுந்
தோகைகே காரத்துடன்
சேவலங் கொடிமுழங் கச்செங்கை கொண்டுநீ
சிறுபறை முழக்கியருளே
செம்பொன் மயிலைக்கிரி யுகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கியருளே. 73

பூ அல் அம் குடுமி சூழ் காந்தளம் கண்ணியின்
புடைகுலவி அளியினங்கள்
பொன்மார்ப மீதணி கடப்ப மாலிகையுழுவைம்
பொறி வண்டினுடன் முழங்க
நாவலம் பொன்னினிற் புனைந்த கிண்கிணி நாக
நகைமணி குயின்ற தண்டை
ஞாலம் விற்கும் சிறுசிலம்பு பொற் கழலினொடு
நளின பத யுகமுழங்கத்
தூ வல் அம்பு அனைய வரிவிழி அர மடந்தையர்
தூய வாழ்த்துஒலி முழங்கச்
சுருதிகொடு பரவு அமரர் துதிமுழங்கப் பசுந்
தோகை கேகாரத்துடன்
சேவலங் கொடி முழங்கச் செங்கை கொண்டு நீ
சிறுபறை முழக்கி அருளே
செம்பொன் மயிலைக்கிரி உகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கி அருளே. 73

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

அளியினங்கள் வண்டினுடன் முழங்க, கிண்கிணி தண்டை சிலம்பு கழலினொடு முழங்க, ஒலி முழங்க, துதி முழங்க, கேகாரத்துடன் கொடி முழங்க, சிறுபறை முழக்கியருள் என்க.

(அடி - 1) பூ அல் அம் குடுமி சூழ் - அழகிய கரிய குடுமியைச் சூழ்ந்துள்ள. காந்தள் - கார்த்திகை மலர். கண்ணி - முடியிலணியும் மாலை. "பெருந்தண்கண்ணி மிலைந்த சென்னியன்" (திருமுருகு) அளியினங்கள் - வண்டின் கூட்டங் கள்.

(அடி - 2) நாவலம் பொன்னினிற் புனைந்த - சாம்பூநத மென்னும் பொன்னாற் செய்த. நாகமணி - நாகரத்தினம். கிண்கிணி - தண்டை - சிலம்பு - கழல் இவை காலிலணியும் அணிகள்.

(அடி - 3) தூ வல் அம்பு அனைய - தூய வலிய அம்பையொத்து. சுருதி - வேதம். கேகாரம் - மயிலின் ஒலிக்குரிய பெயர் (வடசொல்)

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பொங்கிவழி யினியபாற் கடல்வயிறு சூல்கொண்டு
பொழிகுடம் புரைசெருத்தல்
புரிமருப் பெருமைபாய் தலும்வெருக் கொண்டுபூம்
பொய்கையி னெழுந்துபூகத்
தங்கணுறு செம்பழுக் காயுதிர வாலினால்
அடித்துமாங் கனிகளிடறி
அளியும் பலாப்பழங்க கீண்டுதா ழைக்குலை
அலைத்துவரி வாளைபாயப்
பங்கய முறுக்குடையும் அடவிதட விப்புதிய
பானலங் காடுழக்கப்
பழனச் செழுஞ்சாலி வேலியங் கன்னலொடு
பகலிலை யரம்பை சாய்த்துச்
செங்கயல் குதித்தெழு முழங்குபா லிக்கிறைவ
சிறுபறை முழக்கியருளே
செம்பொன் மயிலைக்கிரி யுகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கியருளே. 74

பொங்கிவழி இனிய பாற் கடல்வயிறு சூல்கொண்டு
பொழி குடம் புரை செருத்தல்
புரி மருப்பு எருமை பாய்தலும் வெருக்கொண்டு பூம்
பொய்கையின் எழுந்து பூக(ம்)த்
தங்கண்உறு செம்பழுக் காய் உதிர வாலினால்
அடித்து மாங்கனிகள் இடறி
அளியும் பலாப்பழம் கீண்டு தாழைக்குலை
அலைத்து வரிவாளைபாயப்
பங்கய முறுக்குஉடையும் அடவி தடவிப் புதிய
பானலங்காடு உழக்கப்
பழனச் செழுஞ்சாலி வேலியங் கன்னலொடு
பகல் இலை அரம்பை சாய்த்துச்
செங்கயல் குதித்து எழு முழங்கு பாலிக்குஇறைவ
சிறுபறை முழக்கி அருளே
செம்பொன் மயிலைக்கிரி உகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கி அருளே. 74

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குளத்திலுள்ள வாளைமீனின் செயலும் பாலாற்றிலுள்ள கயல்மீனின் செயலும் கூறப்படும்.

எருமை பாய்தலும், வாளை, வெருக்கொண்டு, எழுந்து, அடித்து, இடறி, கீண்டு, அலைத்து, பாய, செங்கயல் குதித்து, தடவி, உழக்க, சாய்த்து, எழும் பாலிக்கிறைவ என்க.

(அடி - 1) குடம் புரை செருத்தல் - குடத்தை யொத்த மடி. பொழி - பொழிதலையொத்த. வெருக்கொண்டு - அச்சமுற்று. பூகம் - கமுகு.

(அடி - 2) கீண்டு - பிளந்து. தாழைக்குலை - தென்னையின் குலை. "வாழை முழுமுதல் துமியத் தாழை, இளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கி" - (திருமுருகு)

(அடி - 3) பானலங்காடு - கருங்குவளையின் பரப்பு. பகல் இலை அரம்பை - நடுவே இலைகளையுடை வாழை. பாலி - பாலியாறு.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

மிசைதரு சுவைக்கரும் பாலையா டரவமும்
வேலைபாய் மகரமேய்ப்ப
வேரிபா யோடையின் மேதிபாய் தமரமும்
வெள்ளைவாய் மள்ளமகளிர்
இசைதர நடுங்குரவை யிடுதுழனி யுங்கழனி
எதிருறப் புனலோதையும்
ஈடுசார் போர்பல அழித்துவை நீக்கிநெல்
ஏற்றுபண் டிகளினொலியும்
அசைநுசு நுதிப்பன்மங் கையரையா டவர்கள்மணம்
அயருமணி முழவினார்ப்பும்
அந்தணர்கள் வேள்வியம லையும்விழாக் கம்பலையும்
அண்டகோ ளமுமளாவித்
திசைதிசை முழக்கமிகு தொண்டீர நாடாள
சிறுபறை முழக்கியருளே
செம்பொன் மயிலைக்கிரி யுகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கியருளே. 75

மிசைதரு சுவைக் கரும்புஆலை ஆடு அரவமும்
வேலை பாய் மகரம் ஏய்ப்ப
வேரி பாய் ஓடையின் மேதிபாய் தமரமும்
வெள்ளை வாய் மள்ள மகளிர்
இசைதர நடும் குரவை யிடு துழனி யும் கழனி
எதிர் உறப் புனல் ஓதையும்
ஈடுசார் போர்பல அழித்து வை நீக்கிநெல்
ஏற்று பண்டிகளின் ஒலியும்
அசை நுசு நுதிப்பல் மங்கையரை ஆடவர்கள் மணம்
அயரு மணி முழவின் ஆர்ப்பும்
அந்தணர்கள் வேள்வி அமலையும் விழாக் கம்பலையும்
அண்ட கோளமும் அளாவித்
திசைதிசை முழக்கமிகு தொண்டீர நாடுஆள
சிறுபறை முழக்கி அருளே
செம்பொன் மயிலைக்கிரி உகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கி அருளே. 75

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கரும்பாலை யாடரவமும், மேதிபாய் தமரமும், குரவையாடு துழனியும், புனலோதையும், பண்டிகளினொலியும், முழவினார்ப்பும், விழாக்கம்பலையும், அளாவி முழக்கமிகு தொண்டீர நாடாள, முழக்கியருள் என்க.

அரவம், தமரம், துழனி, ஓதை. ஒலி, ஆர்ப்பு, கம்பலை - இவை ஒலியைக் குறிக்கும் ஒரு பொருட் பல சொற்கள்.

(அடி - 1) வேலை - கடல். மகரம் - மகரமீன். மேதி - எருமை, வெள்ளை வாய் மள்ள மகளிர் -கள்ளுண்டதால் வெளுத்துள்ள உதட்டினையுடைய கடைசியர்.

(அடி - 2) இசைதர - இசையுடன், குரவை - குரவைக் கூத்து, வை - வைக்கோல். பண்டி - வண்டி.

(அடி 3) அசை நுசு - தளர்கின்ற இடை. நுசு - நுசுப்பு என்பதன் கடைக்குறை நுதிப் பல் மங்கையரை - கூரிய பற்களையுடை மகளிரை. தொண்டீர நாடு - தொண்டைநாடு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வானையுந் தொட்டிவந் தண்டகோ ளகையளவு
வஞ்சக்கிர வுஞ்சகிரியின்
மாயாத மாயனின் பெருமுழக் கமும்
மதம்பாயு மவுணநீல
ஆனையின் முழக்கமுந் திசைநாக மெட்டுமெட்
டட்டநா கமு மெட்டும்
அதிர்முழக் கந்தணிய வெம்முழக் கஞ்செயும்
அசுரகே சரிமுழக்குந்
தானையங் கடல்குளிற நாண்சங்க மார்ப்பச்
சமர்க்கள மெதிர்ந்தவெய்ய
தறுகட் கொடுங்கொலைச் சூர்முழக் கமுநீடு
தானவ குலத்துவந்த
சேனையின் முழக்கமும் அடங்கநீ செங்கைகொடு
சிறுபறை முழக்கியருளே
செம்பொன் மயிலைக்கிரி யுகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கியருளே. 76

வானையும் தொடநிவந்து அண்டகோளகை அளவு
வஞ்சகி கிரவுஞ்ச கிரியின்
மாயாத மாயனின் பெரு முழக்கமும்
மதம் பாயும் அவுணநீல
ஆனையின் முழக்கமும் திசைநாகம் எட்டும் எட்டு
அட்ட நாகமும் எட்டும்
அதிர் முழக்கம் தணிய வெம்முழக்கம் செயும்
அசுர கேசரி முழக்கும்
தானையம் கடல்குளிற நாண்சங்கம் ஆர்ப்பச்
சமர்க்களம் எதிர்ந்த வெய்ய
தறுகண் கொடுங் கொலைச் சூர்முழக்கமு நீடு
தானவ குலத்து வந்த
சேனையின் முழக்கமும் அடங்கநீ செங்கைகொடு
சிறுபறை முழக்கி அருளே
செம்பொன் மயிலைக்கிரி உகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கி அருளே. 76

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

மாயனின் பெரு முழக்கமும், ஆனையின் முழக்கமும், அசுர கேசரி முழக்கும், சூர் முழக்கமும், சேனையின் முழக்கமும், அடங்க, சிறுபறை முழக்கியருள் என்க.

(அடி - 1) அண்ட கோளகை யளவு - வானின் உச்சியைத் தொடுகின்ற. மாயாத மாயன் - அழியாத மாயத்தன்மை யுடைய்வன்; தாராகாசுரன்.

(அடி - 2,3) ஆனையின் முழக்கமும் - கய முகாசுரனுடைய முழக்கமும், திசை நாகம் எட்டும் எட்டு அட்ட நாகமும் எட்டும் - எட்டுத் திக்குகளிலுமுள்ள எட்டு யானைகளையும் எட்டுகின்ற, எட்டு நாகங்களையும் எட்டுகின்ற. அசுரகேசரி - சிங்கமுகாசுரன், சூர் - சூரபதுமன்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

கானாறு செவ்விதழ்க் கோடல்கமழ் நெரிசுரி
கருங்குழற் கற்றைசரியக்
காரளக பந்தர்மிசை இசைவண்டு சுழலவாக்
கானனம் வதங்கசரிய
ஊனாறு வடிகணை விழிக்கடைகள் புடைபெயர
உபயதன பாரமேறும்
ஒளியார வடமாட ஆடுதொறும் ஆடுதொறும்
ஒருமருங் குலுமிரங்க
வானூறு படவுயரும் வேய்தந்த நித்திலம்
மணிக்கவணில் வைத்தெறிந்து
வளைகுரற் செந்தினைப் பைம்புனத் திதணேறி
வள்ளிபடி கிள்ளையோப்புந்
தேனூறு மழலைக்கு வாயூறி நின்றவா
சிறுபறை முழக்கியருளே
செம்பொன் மயிலைக்கிரி யுகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கியருளே. *77*

கான்நாறு செவ்விதழ்க் கோடல் கமழ் நெரி சுரி
கருங்குழல் கற்றை சரியக்
கார் அளக பந்தர் மிசை இசைவண்டு சுழல வாக்
ஆனனம் வதங்கசரிய
ஊன்நாறு வடிகணை விழிக்கடைகள் புடைபெயர
உபய தன பாரம் ஏறும்
ஒளிஆர வடம்ஆட ஆடுதொறும் ஆடுதொறும்
ஒருமருங்குலும் இரங்க
வான்ஊறு படஉயரும் வேய்தந்த நித்திலம்
மணிக் கவணில் வைத்து எறிந்து
வளைகுரல் செந்தினைப் பைம்புனத்து இதன் ஏறி
வள்ளிபடி கிள்ளை ஓப்பும்
தேன்ஊறு மழலைக்கு வாய்ஊறி நின்றவா
சிறுபறை முழக்கி அருளே
செம்பொன் மயிலைக்கிரி உகந்த வடிவேலவா
சிறுபறை முழக்கி அருளே. 77

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சரிய, சுழல, வதங்க சரிய, பெயர, ஆட, இரங்க, எறிந்து, ஒப்பும், மழலைக்கு வாயூறி நின்றவா, முழக்கி யருள் என்க.

(அடி - 1) கான் - மணம். கோடல் - வெண்காந்தள் மலர். (குறிஞ்சி நிலத்திற்குரியது) கார் அளக பந்தர்மிசை - கரிய கூந்தல் பரப்பின்மீது. வாக் ஆனனம் -(வட சொற்றொடர்) வாக் என்பது வாயையும் ஆனனம் என்பது முகத்தையும் குறிக்கும். வாய் வாட, ஆனனம் சரிய எனக் கூட்டிப் பொருள் கொள்க.

(அடி -3) வேய் -மூங்கில். நித்திலம் - முத்து. கவண் - பறவைகளைத் துரத்த உதவுவது. வளை குரல் செந்தினை - வளைத்த கதிரையுடைய செந்தினை. இதண் - பரண்.

(அடி - 4) வாயூறி நின்றவா - மிக்க விருப்பங் கொண்டு நின்றவனே. “தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவா செங்கீரை யாடிருளே”. (முத்துக் குமாரசாமி பிள்ளை தமிழ்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேறு

தனபதி மகபதி பதியுட னவருயிர்
தருமொரு வித்தகனே
தமிழொடு வடகலை யெவையவை யவைதெரி
சகல சனப்ரியனே
பனகரும் உலகரும் அமரரும் வழிபடு
பதயுக சிற்கனனே
பறிதலை யமணரை நடுகமு முனையிடு
பலகவி விற்பனனே
மனகதி யதனினு மிகுகதி பெறுபொறி
மயில்வரும் அற்புதனே
வரமடி யவர்பெற அருண்மழை பொழிதரு
வனச முகத்தினனே
தினகர செயதர திரிபுரை யருள்பவ
சிறுபறை கொட்டுகவே
திசைதிசை யடிதொழ மயிலையி லுறைபவ
சிறுபறை கொட்டுகவே. 78

தனபதி மகபதி பதியுடன் அவர்உயிர்
தருமொரு வித்தகனே
தமிழொடு வடகலை எவையவை அவைதெரி
சகல சனபிரியனே
பனகரும் உலகரும் அமரரும் வழிபடு
பதயுக சிற்கனனே
பறிதலை யமணரை நடுகமு முனையிடு
பலகவி விற்பனனே
மனகதி அதனினும் மிகுகதி பெறுபொறி
மயில்வரும் அற்புதனே
வரம் அடியவர்பெற அருள்மழை பொழிதரு
வனச முகத்தினனே
தினகர செயதர திரிபுரை அருள்பவ
சிறுபறை கொட்டுகவே
திசைதிசை அடிதொழ மயிலையில் உறைபவ
சிறுபறை கொட்டுகவே. 78

Digitization by Hindu-Heritage-Foundation of America (USA)

(அடி - 1,2) தனபதி - குபேரன். மகபதி பதி - இந்திரனுடைய நகரம். அமராபதி. பனகர் - நாகலோகத்தினர். "பறிதலை யமணரை நடுகழு முனையிடு பலகவி விற்பனனே" திருஞான சம்பந்தருடன் செய்த கனல் வாதத்திலும் புனல் வாதத்திலும் தோல்வியுற்ற சமணர்கள் கழுவேறியதைக் குறித்தது.

(அடி - 3,4) வனசம் - தாமரை மலர். திரிபுரை - உமையம்மையார். இதற்கு மும்மூர்த்திகளுக்கு மூத்தவள் என்றும், இடைகலை - பிங்கலை - சுழுமுனை என்னும் நாடிகளிலிருப்பவள் என்றும், மனம் - புத்தி - சித்தம் இவற்றில் உறைபவள் என்றும், சந்திரகண்டம், அக்கினி கண்டம், சூரிய கண்டம் என்னும் மூன்று பிரிவுகளையுடைய சக்கரத்துக்குத் தலைவி யென்றும்பல பொருள் உரைப்பர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறமட மகளிரு தனதட முழுகிய
குணமலி பொற்புயனே
குருகலர் வயிறெரி தவழ்வுற முனையயில்
குரைகடல் விட்டவனே
மறலிதன் விறல்கெட அடியவர் பயம்விட
வருமொரு கொற்றவனே
வரகவி சொலுமவர் தமையிடர் செயுமவர்
மரபை யழிப்பவனே
உறுதியொ டடியிணை பணிபவர் துயர்முழு
தொழிய ஒழிப்பவனே
உயிரினும் அமுதினும் இனியவ னெனமன
முருகுநர் கற்பகமே
திறலுடை அவுணரை எதிர்பொரு தடுபவ
சிறுபறை கொட்டுகவே
திசைதிசை யடிதொழ மயிலையி லுறைபவ
சிறுபறை கொட்டுகவே. 79

குறமட மகளி இரு தனதட முழுகிய
குணமலி பொற்புயனே
குருகலர் வயிறுஎரி தவழ்வுற முனைஅயில்
குரைகடல் விட்டவனே
மறலிதன் விறல்கெட அடியவர் பயம்விட
வரும்ஒரு கொற்றவனே
வரகவி சொலும்அவர் தமையிடர் செயும்அவர்
மரபை அழிப்பவனே
உறுதியொடு அடியிணை பணிபவர் துயர்முழு(து)
ஒழிய ஒழிப்பவனே
உயிரினும் அமுதினும் இனியவன் எனமனம்
உருகுநர் கற்பகமே
திறலுடை அவுணரை எதிர்பொருது அடுபவ
சிறுபறை கொட்டுகவே
திசைதிசை அடிதொழ மயிலையில் உறைபவ
சிறுபறை கொட்டுகவே. 79

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

(அடி - 1,4) பொற் புயனே - அழகிய புயத்தை யுடையவனே. குறுகவர் - பகைவர் (அசுரர்). முனை அயில் - கூரிய வேலாயுதம். மறலி - யமன்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

9.சிற்றில் பருவம்

வேறு

இவ்வா றறிவ தோவல்ல
இன்ப துன்ப மவையல்ல
இரண்டோ வல்ல வொன்றுமல
இருளுமல்ல ஒளியல்ல
மூவ்வா றறிமண் டலமல்ல
மூலப்பகுதி யதுவல்ல
முடிவைம் பத்தொன் றெட்டாறு
மூன்றைந் திவற்றான் மொழிவதல்ல
செவ்வா றறிய மறிவல்ல
தேகேந் தியமு மல்லவெனச்
சென்று சென்றே யணுவணுவிற்
றேர்ந்து தேர்ந்து சிவஞானி
அவ்வா றறியுஞ் சீரடியால்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேஞ் சிற்றில் அழியேலே. 80

இவ்வாறு அறிவதோ அல்ல
இன்ப துன்பம் அவை அல்ல
இரண்டோ அல்ல ஒன்றும் அல
இருளும் அல்ல ஒளி அல்ல
மூவ்ஆறு அறிமண்டலம் அல்ல
மூலபகுதி அது அல்ல
முடி ஐம்பத்தொன்று எட்டு ஆறு
மூன்று ஐந்து இவற்றான் மொழிவது அல்ல
செவ்வாறு அறியும் அறிவு அல்ல
தேக இந்தியமும் அல்ல எனச்
சென்று சென்றே அணு அணுவில்
தேர்ந்து தேர்ந்து சிவஞானி
அவ்வாறு அறியும் சீரடியால்
அடியேம் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேம் சிற்றில் அழியேலே. 80

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முருகக் கடவுளின் திருவடிப் பெருமையுணர்த்தியதாம்.

(அடி - 1) இவ்வாறு அறிவதோ அல்ல - இம்முறையால் அறியப்படும் பொருளென்று பிறரால் அறிவிக்கத் தக்கதன்று. இன்ப துன்பம் அவையல்ல - புண்ணியத்தால் வரும் இன்பமும் தீவினையால் வரும் துன்பமுமல்ல. இரண்டோ அல்ல ஒன்றும் அல - பேதவாதிகளைப் போல் இரண்டென்றும் ஏகான்ம வாதிகளைப்போல் ஒன்று என்றும் கூறப்படுவன அல்ல. "ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரங் கடந்து ("தாயுமானவர் - மண்டலத்தில் - செய் 2) இருளுமல்ல ஒளியல்ல - அஞ்ஞானமுல்ல ஞானமுமல்ல". இரவுபக லில்லா விடத்து ஏகமா நின்ற நின்னருள்" (தாயுமானவர் தேசே - செய் 3)

(அடி 2) முவ்வாறு அறி மண்டலம் - மூன்று வகையாக அறியப்படும் மண்டலம். அவை : அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம், "மண்டல மூன்றவை யக்கினி யிரவி, சந்திர மண்டல மென்னச் சாற்றுப". "அக்கினி மண்லங் குதங் குய்யம்மே. இரவி மண்டலம் நாபி", "இதயமே சந்திர மண்டலம் அடிநா நெற்றியே" (பொருட்டொகை நிகண்டு) மூலப்பகுதி - பிரகிருதிமாயை. ஐம்பத்தொன்று, எட்டு, ஆறு, மூன்று, ஐந்து - இவை எழுத்துகள்.

(அடி - 3,4) செவ்வாறு - நல்லொழுக்கம். அறிவு - ஈண்டுப் புத்தி. தேக இந்தியமும் - உடலும் பொறிகளும். அவ்வாறு - மனவாக்கிற் கெட்டாத அத்தகு முறையால்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

கூறுஞ் சதுர்மா மறையனைத்துங்
குண்ட லினியு மாறாறாய்க்
கோத்த தத்துவ ராசிகளுங்
கொடிய பாசத் திரயங்களுடன்
வேறும் புகலத் துவாவாறும்
விளைந்த இன்ப வீடேழு
மேவு மட்ட சித்திகளும்
வியன்சத் திகளோ ரொன்பானுந்
தேறுஞ் சாக்கிர சுவப்னமுதற்
றிசைகள் பத்து மெட்டெட்டாய்த்
தெரிந்த கலைஞா னமுஞ்சமயச்
சிலுக்குங் கடந்தா தாரங்கள்
ஆறுங் கடந்த சீரடியால்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேஞ் சிற்றில் அழியேலே. 81

கூறும் சதுர் மாமறை அனைத்தும்
குண்டலினியும் ஆறு ஆறாய்க்
கோத்த தத்துவ ராசிகளும்
கொடிய பாசத் திரயங்களுடன்
வேறும் புகல் அத்துவா ஆறும்
விளைந்த இன்ப வீடு ஏழு(ம்)
மேவும் அட்ட சித்திகளும்
வியன் சத்திகள் ஓர் ஒன்பானும்
தேறும் சாக்கிர சுவப்னமுதல்
திசைகள் பத்தும் எட்டு எட்டாய்த்
தெரிந்த கலைஞானமும் சமயச்
சிலுக்கும் கடந்து ஆதாரங்கள்
ஆறும் கடந்த சீரடியால்
அடியேம் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேம் சிற்றில் அழியேலே. 81

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

இதுவும் முருகக் கடவுளின் திருவடிப் பெருமையுணர்தியதாம்.

(அடி - 1) சதுர் மா மறை - இருக்கு - எஜுர் - சாமம் - அதர்வணம் என்ற சிறந்த நான்கு வேதங்கள். குண்டலினி - மகாமாயை. மூலதாரத்தில் பாம்பின் வடிவாயிள்ள ஓர்சத்தி. ஆறாறாய்க் கோத்த தத்துவராசிகளும் - முப்பத்தாறாய்ச் சேர்க்கப் பெற்ற தத்துவராசிகளும். (46. அடிக்குறிப்பு) பாசத்திரையங்கள் - (46 செய் அடிக்குறிப்பு)

(அடி -2) அத்துவா ஆறம்- (செய் 46. அடிக்குறிப்பு) இன்பவீடேழும்- யோக பூமிகள் ஏழும். அவை: சுபேச்சை - விசாரணை - தனுமானசி - சத்துவாபத்தி - அசஞ்சத்தி - பதார்த்த பாவனை - துரியகை. இவை முறையே துற்சங்க வற்சிதர்களும், ஞான சாத்திரம் பயின்றவர்களும், மூவேடணை நீத்தவர்களும், ஞானவுணர்ச்சியடைந்தவர்களும், தவம் புரிந்தவர்களும், திரிபுடியற்றவர்களும், சிவமாந்தன்மை யடைந்தவர்களும் அடையும் பூமிகளாம்.

அட்ட சித்திகள் : அணிமா - மகிமா - லகிமா - கரிமா - பிராத்தி - பிராகாமியம் - ஈசத்துவம் - வசித்துவம் என்பன.

சத்திகள் ஓர் ஒன்பானும் - ஒன்பது சத்திகளும். ஒன்பது சத்திகளாவன : "வானம் சேட்டை ரௌதத்திரி காளி, கலவி கரணி பெலவிகரணி, பெலப் பிரமதனி சர்வபூத, தமனி மனோன்மணி யொன்பது சத்திகள்" (பொருட்டொகை நிகண்டு)

(அடி - 3) சாக்கிர சுவப்ன முதல் திசைகள் பத்தும் - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், என்னும் கீழாலவத்தை ஐந்தும் மேலாலவத்தை ஐந்தும்.

எட்டெட்டாய்த் தெரிந்த கலைஞானமும் - அறுபத்து நான்கென்றறிந்த கலையறிவும். அறுபத்து நான்கு கலைகள் இன்னவையென்பதைப் பொருட்டொகை நிகண்டிற் காண்க. சமையச் சிலுக்கும் - சமயச் சிக்கலும். "சமய வாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்தனர்" (திருவாசகம்.)

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

கும்போ தயமா முனிமௌனி
குலரத் னமதா யொருமுக்கட்
கோமான் மணிப்பொற் றிருமார்பில்
குலவுஞ் சாம்பூ நதவணியாய்ப்
பைம்போ தகத்தோன் சூடமணிப்
பங்கே ருகமாய்ச் சங்காழி
படைத்த முகுந்தன் றந்தொளிரப்
பதுமராக அங்கதமாய்
எம்போ லடியர் தங்களுக்கும்
இந்திரா திபர்க்கும் வானவர்க்கும்
எல்லை போய சதுர்மறைக்கும்
எவர்க்கும் புகலா யிருக்குமுன
தம்போ ருகத்தாள் சிவப்பூர
அடியேஞ் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேஞ் சிற்றில் அழியேலே. 82

கும்போதய மாமுனி மௌனி
குலரத்தினமதாய் ஒருமுக்கண்
கோமான் மணிபொன் திருமார்பில்
குலவும் சாம்பூநத அணியாய்ப்
பைம்போது அகத்தோன் சூட மணிப்
பங்கேருகமாய்ச் சங்குஆழி
படைத்த முகுந்தன் தந்துஒளிரப்
பதுமராக அங்கதமாய்
எம்போல் அடியர் தங்களுக்கும்
இந்திராதிபர்க்கும் வானவர்க்கும்
எல்லை போய சதுர்மறைக்கும்
எவர்க்கும் புகலாய் இருக்கு(ம்) உனது
அம்போருகத்தாள் சிவப்பூர
அடியேம் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக்கிரி முருகா
அடியேம் சிற்றில் அழியேலே. 82

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

இதுவும் முருகக் கடவுளின் திருவடிப் பெருமையுணர்த்தியதாம்.

குலரத்னமதாய், சாம்புநதவணியாய், பங்கேருகமாய், அங்கதமாய், புகலாய் இருக்கும் தாள் என்க.

அகத்தியர் மாணவராதலின் அவர் வணங்கும் போது முருகப்பெருமானுடைய திருவடி அவரது சிரசிற் படுதலால் அவர்க்கு முடிரத்தினமாகவும், சிவபெருமான் குழந்தையாகிய முருகனைத் தூக்கும் பொழுது அவரது மார்பிற் படுதலால் சிவபெருமான் மார்பிலணியும் சாம்பூநத மென்னும் பொன்னாற் செய்த மதாணியாகவும், நான்முகன் வணங்குங்கால் அவரது தலையிற்யிடுதலால் அந்நான்முகன் உச்சியிலணியும் தாமரை மலராகவும், திருமால் முருகக் கடவுளுக்கு மாமனாதலின் அவர் தோளில் தாங்கும் போது திருவடிபடுதலால் அவர்க்குப் பதுராகத் தாற் செய்த தோள் வளையாகவும் முருகப்பெருமானுடைய திருவடி விளங்குகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பார முனக்கே எனப்பணிந்து
பதபுண் டரிகந் தனக்கேற்றப்
பணிகள் பலவி மினிதாற்றிப்
பசியின் வருந்தா வகைவிரைந்து
நேர மிகவுஞ் சென்றதென
நின்று செங்கை விரனெரித்து
நிலையுங் கதவு மில்லாத
நிலைசா லட்டிற் றொழில்புரியுந்
தார மெனயாம் அருகணைந்து
சமைத்த சிறுசோ றுனக்கிட்டுச்
சந்த னாதி கொடுத்தெமது
தருண வருண தனதடத்தின்
ஆர வடமு மெடுத்தணிவோம்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேஞ் சிற்றில் அழியேலே. 83

பாரம் உனக்கே எனப்பணிந்து
பதபுண் டரிகம் தனக்கு ஏற்றப்
பணிகள் பலவும் இனிது ஆற்றிப்
பசியின் வருந்த வகைவிரைந்து
நேரம் மிகவும் சென்றதுஎன
நின்று செங்கை விரல்நெரித்து
நிலையும் கதவும் இல்லாத
நிலைசால் அட்டில் தொழில்புரியும்
தாரம் எனயாம் அருகுஅணைந்து
சமைத்த சிறுசோறு உனக்கு இட்டுச்
சந்தனம்ஆதி கொடுத்து எமது
தருண வருண தனதடத்தின்
ஆர வடமும் எடுத்து அணிவோம்
அடியேம் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக்கிரி முருகா
அடியேம் சிற்றில் அழியேலே. 83

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிறுமிகள் மணல் வீட்டை அழியாதிருக்க வேண்டுதல்.

(அடி - 1) உனக்கே பாரம் - எம்மைக் காத்தல் நினக்கே பாரம் எனக் கூறுதல் உலகவழக்கு. புத புண்டரிகம் - திருவடியாகிய தாமரை.

(அடி 2,3) செங்கை விரல் நெரித்து - மகளிர் கவலையுற்ற காலத்தில் கைவிரலை நெரிப்பர், அங்ஙனம் நெரித்து. நிலையும் கதவும் இல்லாத நிலை - நிலையும் கதவும் வைத்துக் கட்டப்படாத மணல் வீடு. அட்டில் தொழில் - சமையல் தொழில். தாரமென - மலையாளைப் போல.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொடிய கயமா முகனசுர
குலங்கள் சூழ வீற்றிருக்குங்
கொடிநீண் மாயா புரியல்ல
குமைக்குங் கிரவுஞ்ச கிரியல்ல
மடிவி லடற்சூர் பொருமடங்கல்
வதனத் திளவ லுடனுறையு
மாகங் கிழித்து வளரிஞ்சி
வஞ்ச மகேந்திர புரியல்ல
ஓடிவில் பரிவா லெழுமுறையும்
உனக்கே யடிமைத் தொழில்பூண்டேம்
உனையே யன்றிக் கனவிலும்வே
றொன்று நினையோம் உலைபெய்த
அடிசில் பதம்பார்த் திழிச்சுமுனம்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேஞ் சிற்றில் அழியேலே. 84

கொடிய கயமாமுகன் அசுர
குலங்கள் சூழ வீற்றுஇருக்கும்
கொடிநீள் மாயாபுரி அல்ல
குமைக்கும் கிரவுஞ்ச கிரிஅல்ல
மடிவில் அடல்சூர் பொருமடங்கல்
வதனத்து இளவல் உடன் உறையும்
ஆகம் கிழித்து வளர்இஞ்சி
வஞ்ச மகேந்திரபுரி அல்ல
ஓடிவில் பரிவாத எழுமுறையும்
உனக்கே அடிமைத் தொழில் பூண்டேம்
உனையே அன்றிக் கனவிலும் வேறு
ஒன்று நினையோம் உலைபெய்த
அடிசில் பதம் பார்த்து இழிச்சுமுனம்
அடியேம் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக்கிரி முருகா
அடியேம் சிற்றில் அழியேலே. 84

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இஃது அசுரர் நகரமன்று, ஆதலின் அழியாதிருப்பாயாக என்று வேண்டுதல்.

(அடி -1) கயமாமுகன்- கயமுகாசுரன். ஆயிரம் யானை முகங்களையுடையவன்; ஆயிரம் துதிக்கைகளை யுடையவன், இரண்டாயிரம் கை களையுடையவன், இரண்டாயிரம் தோள்களையுடையவன், மாயாபுரி - தாரகாசுரனுடைய தலை நகரம். கிரவுஞ்சகிரி - தராகாசுரன் மறைந்த மலை.

(அடி 2) மடங்கல் வதனத்து இளவல் - சூரபதுமனுடைய இளவலாகிய சிங்கமுகாசுரன். மாகம் - ஆகாயம். இஞ்சி - மதில். மகேந்திரபுரி - சூரபதுமனுடைய தலைநகரம்.

(அடி -4) அடிசில் - உணவு. இழிச்சுமுனம் - இறக்குதற்கு முன்னர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நினைய வரிய ஒருகுடிலை
நிமிடத் தளவிற் பலகோடி
நிற்ப நில்லா தவுமாக
நில்ல தொகுத்து நிலவுலகின்
முனைய நெடுங்கால் கொடுத்திருகை
மூட்டி வீணா தண்டநடு
மூரி விடங்க மினிதொழுக்கி
முரியாப் பழுவண் கழி நிரைத்து
வனைய நாடி நாடியெனு
மணிவார் கயிறு பிணித்திறுக்கி
மயிர்த்தோல் வேய்ந்து சுவர்த்தசையின்
வைத்தைம் பொறிச்சா ளரம்வகுத்த
அனைய சிற்றி லதுவன்றால்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேஞ் சிற்றில் அழியேலே. 85

நினைய அரிய ஒருகுடிலை
நிமிடத்து அளவில் பலகோடி
நிற்ப நில்லா தவுமாக
நில்ல தொகுத்து நிலவுலகின்
முனைய நெடுங்கால் கொடுத்து இருகை
மூட்டி வீணா தண்டநடு
மூரி விடங்கம் இனிது ஒழுக்கி
முரியாப் பழுவண் கழி நிரைத்து
வனைய நாடி நாடியெனு
மணிவார் கயிறு பிணித்து இறுக்கி
மயிர்த்தோல் வேய்ந்து சுவர்த்தசையின்
வைத்து ஐம்பொறிச்சாளரம் வகுத்த
அனைய சிற்றில் அது அன்றால்
அடியேம் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக்கிரி முருகா
அடியேம் சிற்றில் அழியேலே. 85

Digitization by Hindu-Heritage-Foundation-of America, HHFA(USA)

(அடி -1, 4) குடிலை - சுத்தமாயை, வீணாதண்டம் - முதுகெலும்பு. விடங்கம் - கொடுங்கை. பழு வண் கழி நிரைத்த - பழுவெலும்புகளென்னும் கழிகள் நிரைத்துள்ள. நாடி எனும் மணிவார்க் கயிறு - நரம்புகளென்னும் அழகிய நீண்ட கயிறு. மயிர்த்தோல் வேய்ந்து - மயிரையுடைத்தாகிய தோலைக் கூரையாகவேய்ந்து. சுவர்த்தசையில் - மாமிசம் என்னும் மண்ணால். ஐம்பொறிச்சாளரம் - ஐம் பொறிகளாகிய சாளரங்கள். அனைய சிற்றில் - அத்தகைய (தேகமாகிய) வீடு. இச்செய்யுள், "கால் கொடுத் திருகை மூட்டி வாழிய, வெந்நிற் றண்டென் விடங்கத் தின்னியற், பழுக்கழி நிரைத்துச் சிரைக்கயி றசைத்து, மயிர்த்தோல் வேய்ந்து சுவர்த்தசை நிறீஇ, ஐம்புலச் சாளரத் தரும்பெறல் மாடத்து" என்னும் (ஞானாமிர்தம் - செய்யுள்) அடிகளின் பொருளைக் கொண்டிருத்தல் அறிக.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மதுவுண் டறுகா லஞ்சிறைய
வரிவண் டினமே ழிசையிழற்று
மணிச்சு ழியக்கொண் டையினெமது
மாலை பரியத்தாதுவன்றி
விதுவு நாணு மொளிமுகத்தின்
மீது நறிய சிவிறிநீர்
வீசித் துரந்தாய் அரும்புமுலை
மெலித்தே ஆர வடங்கொண்டாய்
கதுவு மிடையிற் சிற்றாடை
கவர்ந்தாய் சிலைகை கண்புதைப்பக்
கைகள் பிடிப்பச் சிலசில வாற்
கழுத்தின் அழுத்தி யுகிர்வைத்தாய்
அதுவும் பொறுத்தேம் ஈதுபொறேம்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேஞ் சிற்றில் அழியேலே. 86

மது உண்டு அறுகால் அம்சிறைய
வரிவண்டினம் ஏழிசை மிழற்று
மணிச் சுழியக் கொண்டையின் எமது
மாலை பரியத் தாதுஅன்றி
விதுவு நாணும் ஒளிமுகத்தின்
மீது நறிய சிவிறிநீர்
வீசித் துரந்தாய் அரும்புமுலை
மெலித்தே ஆர வடங்கொண்டாய்
கதுவும் இடையில் சிற்றாடை
கவர்ந்தாய் சிலைகை கண்புதைப்பக்
கைகள் பிடிப்பச் சிலசில வாற்
கழுத்தின் அழுத்தி உகிர்வைத்தாய்
அதுவும் பொறுத்தேம் ஈதுபொறேம்
அடியேம் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக்கிரி முருகா
அடியேம் சிற்றில் அழியேலே. 86

Digitization by Hindu-Heritage-Foundation of North America (USA)

சிறுமியர், முருகன் செய் செயலைப் பொறுத்ததாகக் கூறுதல்.

துரந்தாய், கொண்டாய், கவர்ந்தாய், வைத்தாய், பொறுத்தேம், பொறேம் என்க.

(அடி -1, 4) சூழியக் கொண்டை - உச்சிக்கொண்டை. பரிய - நீங்க. சிவிறி - நீர்வீசுந்துருத்தி. துரந்தாய் - ஓடினாய். ஈது - அழித்தலாகிய இதனை.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

ஒன்று காத லுற்றவன்போல்
உகந்தே எங்க ளுடனாடி
ஒளிவெண் டரள அரிசிவிரைந்
துடனே வாரிக் கொடுதந்துஞ்
சென்று சாக மெனநீலச்
செழுமா மணிகள் சேர்த்திட்டும்
திளைக்கும் இளவுப் பெனவச்சிரச்
சின்னந் தொகுத்துத் தந்தடுத்து
நன்று புரியும் பொற்பிதிர்கள்
நயங்கொண் முதிரை யெனக்கொடுத்து
நல்ல வாறே பரிந்தடிசில்
நாங்க ளமைக்கு முனஞ்சிதைத்தாய்
அன்று போல இன்று பொறேம்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேஞ் சிற்றில் அழியேலே. 87

ஒன்று காதல் உற்றவன்போல்
உகந்தே எங்கள் உடன் ஆடி
ஒளிவெண் தரள அரிசி விரைந்து
உடனே வாரிக் கொடுதந்தும்
சென்று சாகம் எனநீலச்
செழுமா மணிகள் சேர்த்திட்டும்
திளைக்கும் இள உப்பு என வச்சிரச்
சின்னம் தொகுத்துத் தந்துஅடுத்து
நன்று புரியும் பொன் பிதிர்கள்
நயம்கொள் முதிரை எனக்கொடுத்து
நல்ல வாறே பரிந்து அடிசில்
நாங்கள் அமைக்கு முனம் சிதைத்தாய்
அன்று போல இன்று பொறேம்
அடியேம் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக்கிரி முருகா
அடியேம் சிற்றில் அழியேலே. 87

Digitization by Hindu-Heritage-Foundation of America (USA)

முருகன் சிறுமியர் அடிசில் அமைக்க உதவியதைக் கூறுதலாம்.

தந்தும், சேர்த்திட்டும், தந்தடுத்தும், கொடுத்தும், சிதைத்தாய், பொறேம், அழியேல் என்க.

(அடி - 1) ஒன்று காதல் - பொருந்திய அன்பு. ஆடி - விளையாடி. வெண் தரள அரசி - வெண்மையான முத்தாகிய அரிசி. கொடுதந்தும் - கொடுத்தும்.

(அடி - 2) சாகம் என நீலச் செழுமா மணிகள் சேர்த்து இட்டு - கீரை யென்று நீலநிறம் பொருந்திய செழிய சிறந்த இரத்தினங்களைச் சேர்த்துக் கொடுத்தும். இளவுப்பென வச்சிரச் சின்னம் தொகுத்துத் தந்து - குறைந்த சுவையையுடைய உப்பென்று வயிரக் கற்களைச் சேர்த்துக் கொடுத்தும்.

(அடி - 3) பொற் பிதிர்கள் - பொன் துணுக்குகள். முதிரை - துவரம் பருப்பு. முத்தை அரிசியாகவும், நீலக்கற்களைக் கீரையாகவும், வயிரக் கற்களை உப்பாகவும், பொன் துணுக்ககளைத் துவரம் பருப்பாகவும் கொடுத்துச் சோறமைக்க உதவினன்.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

முன்னைச் சுருதி நான்கினுக்கு
முகநான் குடைய வொருவனுக்கு
முகந்தன் றனக்கும் எட்டாத
முதல்வ னேயா னாலுமென்ன
உன்னைப் பயந்த தாதைதன்னை
யொருவா றணுகி எமதுகுறை
யுள்ள வெல்லா மறியவிரித்
துரைப்பேம் அவன்கேட் டுறானாகில்
மின்னைப் பொருவ வடித்தசுடர்
வேலா வுனக்கு முன்னவனாம்
வேழ முகனுக் குணர்த்திடுவோ
மீட்டு முறையிட் டுன்னுடைய
அன்னைக் குரைப்போ மினியமையோம்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேஞ் சிற்றில் அழியேலே. 88

முன்னைச் சுருதி நான்கினுக்கு
முகநான்குடைய ஒருவனுக்கு
முகந்தன் தனக்கும் எட்டாத
முதல்வனே ஆனாலும் என்ன
உன்னைப் பயந்த தாதை தன்னை
ஒருவாறு அணுகி எமதுகுறை
உள்ள எல்லாம் அறிய விரித்து
உரைப்பேம் அவன் கேட்டுஉறானாகில்
மின்னைப் பொருவ வடித்தசுடர்
வேலா உனக்கு முன்னவனாம்
வேழ முகனுக்கு உணர்த்திடுவோம்
மீட்டு முறையிட்டு உன்னுடைய
அன்னைக்கு உரைப்போம் இனி அமையோம்
அடியேம் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக்கிரி முருகா
அடியேம் சிற்றில் அழியேலே. 88

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிறுமியர், முருகன் செய்யும் குறும்புச் செயலை அவருடைய தந்தையிடத்தும், அண்ணனிடத்தும். அன்னை யிடத்தும், உரைப்போம் இனிப்பொறேம் என்றுரைத்தல்.

(அடி - 1,4) எட்டாத - அறியப்படாத, முதல்வன் - இறைவன், இனியமையோம் - இனிப்பொறுக்க மாட்டோம்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

ஊரார் பெருவீ டிழைக்குங்கால்
உன்முன் னவனைத் தொழுதிழைப்பர்
உகந்து சிறுவீ டியாமி ழைப்பின்
உனது சரணம் தொழுதிழைப்பேம்
தேரா யதனை ஒரு குறப்புன்
சிறுமி யிச்சிற் றினைமாநீ
தின்ற தனையாம் இனியறியத்
தெய்வ யானை தனக்குரைப்பேம்
பேரா யிரங்கள் பெற்றபிரான்
பெற்ற பிள்ளை யானாலென்
பெரிய இமயப் பேராட்டி
பெற்ற பெருவாழ் வானாலென்
ஆரா னாலென் இனிப்பொறேம்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக் கிரிமுருகா
அடியேஞ் சிற்றில் அழியேலே. 89

ஊரார் பெரு வீடு இழைக்குங்கால்
உன் முன்னவனைத் தொழுது இழைப்பர்
உகந்து சிறுவீடு யாம் இழைப்பின்
உனது சரணம் தொழுது இழைப்பேம்
தேராய் அதனை ஒரு குறப்புன்
சிறுமி மிச்சில் தினைமாநீ
தின்ற தனையாம் இனி அறியத்
தெய்வயானை தனக்கு உரைப்பேம்
பேராயிரங்கள் பெற்றபிரான்
பெற்ற பிள்ளை ஆனால் என்
பெரிய இமயப் பேராட்டி
பெற்ற பெருவாழ் வானால் என்
ஆரானால் என் இனிப்பொறேம்
அடியேம் சிற்றில் அழியேலே
அனகா மயிலைக்கிரி முருகா
அடியேம் சிற்றில் அழியேலே. 89

Digitization by Hindu-Heritage-Foundation of America - HHF (USA)

சிறுமியர், "நின் அடாத செயலை இனிப் பொறுக்க மாட்டோம்" என்றுரைத்தல்.

(அடி - 1,4) சிறுவீடு - மணல் வீடு. சரணம் - திருவடி. அதனைத் தேராய் - அதனை அறிவாய். "மிச்சில் - எச்சில். பேராயிரங்கள் பெற்றபிரான் - சிவபெருமான். பேராயிரமுடையப் பெம்மான் போற்றி" . (திருவாசகம் - போற்றி) இமயப் பேராட்டி - உமையம்மையார்.

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

10. சிறுதேர்ப் பருவம்

தொக்கிட் டெதிர்ந்தமர் தொடங்கிநிரு பகன்முதற்
சூரர்வெங் காமனாதி
தொல்லைப் பழம்பகையை இதயரண களமதிற்
சூறையிட் டாடலிட்டு
நெக்கிட்டு விழமுட்டி வெட்டிவெட் டிச்சங்க
நிரைநிரை முழக்க அஞ்ஞன்
நேராது முதுகிட்டு நின்றிடப் பிருகுடி
நெறிப்பினால் வாகைகொண்டு
புக்கிட்ட முப்புவன வட்டத்தி னுங்கருணை
பொழிசெயத் தம்பநாட்டிப்
போதகன் சிவஞான தேசிகன் மும்மதம்
பொழியும்வே ழங்கள்கட்டுந்
திக்கெட்டு ஞானசக் கரமொன் றுருட்டிநீ
சிறுதேரு ருட்டியருளே
தென்மயிலை மலைவாழ வந்தகரு ணாகரா
சிறுதேரு ருட்டியருளே. 90

தொக்கிட்டு எதிர்ந்து அமர் தொடங்கி நிருபகன்முதல்
சூரர்வெம் காமன்ஆதி
தொல்லைப் பழம்பகையை இதயரண களம் அதில்
சூறையிட்டு ஆடல்இட்டு
நெக்கிட்டு விழமுட்டி வெட்டிவெட்டிச் சங்க
நிரைநிரை முழக்க அஞ்ஞன்
நேராது முதுகிட்டு நின்றிடப் பிருகுடி
நெறிப்பினால் வாகைகொண்டு
புக்கிட்ட முப்புவன வட்டத்தினும் கருணை
பொழிசெயத் தம்பநாட்டிப்
போதகன் சிவஞான தேசிகன் மும்மதம்
பொழியும் வேழங்கள் கட்டும்
திக்குஎட்டு ஞான சக்கரம் ஒன்று உருட்டி நீ
சிறுதேர் உருட்டி அருளே
தென்மயிலை மலைவாழ வந்த கருணாகரா
சிறுதேர் உருட்டி அருளே. 90

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சிவஞான தேசிகள் அஞ்ஞனை வென்ற திறம் கூறப்படும்.

(அடி - 1) தொக்கிட்டு - ஒன்று சேர்ந்து, நிருபகன் முதல் சூரர் - நிருபகன், பொறையன், சந்தோடன், விவகாரபராமுகன், சாந்தன், அமுதசீலன் என்னும் வீரர்கள் காமனாதி தொல்லைப் பழம் பகையை - காமன், குரோதன், உலோபன், மோகன், அகங்காரன், மற்சரன் முதலிய துன்பந்தரும் பழமையான பகைவரை. இதய ரணகளமதில் - உள்ளமாகிய போர்க்களத்தில்.

(அடி - 2) அஞ்ஞன் நேராது - அஞ்ஞன் அல்லது பாசன் என்று கூறப்படும். பகைவன் எதிர் நில்லாமல். பிருகுடி - நெறிப்பினால் - புருவ நெறிப்பால். வாகை கொண்டு - வென்று

(அடி - 3) கருணை பொழி செயத்தம்பம் நாட்டி - அருளைப் பொழிகின்ற வெற்றித்தூணைநாட்டி. போதகன் - ஞானாசிரியன்.

இச்செய்யுளில் காமம் முதலியவற்றைப் பகைவராகவும் நிருபகன் முதலியவர்களை அப்பகைவரை அழித்த வீரர்களாகவும் உருவகப்படுத்தியுள்ளார். சிவஞானபாலைய தேசிகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இந்நூலாசிரியர் இயற்றியுள்ள பாசவதைப் பரணியின் சுருக்கமாக இப்பாசுரம் அமைந்துள்ளது.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

கரிசித்ர காயம்வல் லுளிகரடி புள்ளிக்
கவைக்கோட்டு மானிரும்பைக்
காய்ச்சித் திருக்கியிட் டனமருப் பிரலையடு
காண்டீர வாதிவெருப்
புரிசித்ர மயில்கடவி வேட்டமேற் கொண்டுபுகழ்
பொம்மையினும் விளையாடவிப
புவியுளோ ரனைவரும் கண்டுதொழ வந்துட்
புகுந்துவாழ் வுற்றகோலம்
பரிசித்த அளவில்வே திக்குமாக் குளிகையிற்
பாரெலாம் புனிதமாக்கும்
பாதபங் கேருகச் சதாசிவச் சிவஞானி
பங்கயக் கண்கள் குளிரத்
தெரிசித் துளக்கமல மலரவருள் வைத்தவன்
சிறுதேரு ருட்டியருளே
தென்மயிலை மலைவாழ வந்தகரு ணாகரா
சிறுதேரு ருட்டியருளே. 91

கரி சித்ரகாயம் வல்லுளி கரடி புள்ளிக்
கவைக் கோட்டுமான் இரும்பைக்
காய்ச்சித் திருக்கியிட்டு அனமருப்பு இரலையடு
காண்டீர ஆதிவெருப்
புரிசித்ர மயில்கடவி வேட்டமேற் கொண்டுபுகழ்
பொம்மையினும் விளையாட இப
புவியுளோர் அனைவரும் கண்டுதொழ வந்து உள்
புகுந்து வாழ்வுற்ற கோலம்
பரிசித்த அளவில் வேதிக்கு மாக்குளிகையில்
பாரெலாம் புனிதமாக்கும்
பாதபங்கேருகச் சதாசிவச் சிவஞானி
பங்கயக் கண்கள் குளிரத்
தெரிசித்து உளக்கமல மலர அருள் வைத்தவன்
சிறுதேர் உருட்டி அருளே
தென்மயிலை மலைவாழ வந்த கருணாகரா
சிறுதேர் உருட்டி அருளே. 91

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

முருகப் பெருமான் மயிலமலையிலமர்ந்திருத்தலன்றிப் பொம்மபுரத்திலும் வீற்றிருத்தலைக் கூறும்.

வெருவ, கடவி, விளையாட, கண்டுதொழ, வாழ்வுற்ற கோலம் எனவும், சதாசிவச் சிவஞானி, குளிர, தெரிசித்து, மலர, அருள் வைத்தவன் எனவும் இயைக்க.

(அடி - 1) கரி - யானை, சித்ரகாயம் - புலி. வல்லுளி - பன்றி, கவைக்கோட்டுமான் - கவை போலும் கொம்புகளையுடைய மான். இரலை - கலைமான். காண்டீர ஆதி - சிங்கம் முதலியவை.

(அடி - 2) வேட்டம் - விருப்பம், வேட்டை (இருபொருள்) பொம்மையினும் - பொம்ம புரத்திலும். பொம்மபுரம் என்பது சிவஞானபாலைய சுவாமிகளது தலைமைத்தானம். பொம்மையினும் - உம்மை இறந்து தழீஇயது. கோலம் - திருக்கோலத்தை.

(அடி - 3) பரிசித்த அளவில் - தொட்ட அளவில். வேதிக்கும் - (இழிந்த உலோகத்தைப் பொன்னாக) மாற்றும். மாக்குளிகையில் - சிறந்த இரச குளிகைபோல. சதாசிவச் சிவஞானி - இவர் இந்நூலாசிரியர் காலத்தில் ஞானசிரியராக எழுந்தருளியிருந்தவராதல் வேண்டும்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

மேடத்தை யுள்ளிட்ட ராசியொடு புசனிட்ட
மிக்கவுடு ராசியுதிர
வெயில்விட் டெறிக்கும்ரவி மண்டலம் வெருக்கொள்ள
வெண்டிங்கள் நடுநடுங்கக்
கூடத்திரி கூடத்தி னுடனண்ட கூடமுங்
குப்புறச் சக்ரவாளக்
குன்றமுங் கிடுகிடென ஆயிரங் குடுமிவட
கோதண்ட சிகரமிடிய
ஆடற் கொலைக்களத் தமராடு தானவர்
தமரா யிரங்கவந்தம்
ஆடவெஞ் சூரனு மஞ்சியே நெஞ்சூச
லாடவிசை கொண்டுகொத்திச்
சேடப் பணாடவி வணக்குசிகி ரதவலவ
சிறுதேர் உருட்டியருளே
தென்மயிலை மலைவாழ வந்தகரு ணாகரா
சிறுதேரு ருட்டியருளே. 92

மேடத்தை உள்ளிட்ட ராசியொடு புசனிட்ட
மிக்க உடுராசி உதிர
வெயில் விட்டுஎறிக்கும் ரவி மண்டலம் வெருக்கொள்ள
வெண்திங்கள் நடுநடுங்கக்
கூடத்திரி கூடத்தின்உடன் அண்ட கூடமும்
குப்புறச் சக்ரவாளக்
குன்றமும் கிடுகிடு என ஆயிரம் குடுமி வட
கோதண்ட சிகரம் இடிய
ஆடற் கொலைக்களத்து அமராடு தானவர்
தமர்ஆயிரம் கவந்தம்
ஆடவெஞ் சூரனும் அஞ்சியே நெஞ்சு ஊச(ல்)
ஆட விசை கொண்டு கொத்திச்
சேடப் பணாடவி வணக்கு சிகி ரதவலவ
சிறுதேர் உருட்டி அருளே
தென்மயிலை மலைவாழ வந்த கருணாகரா
சிறுதேர் உருட்டி அருளே. 92

Digitization by Hindu-Heritage-Foundation of America - HHFA (USA)

மயிலூர்தியின் ஆற்றல் அறிவிப்பதாம்.

உதிர, வெருக்கொள்ள, நடுங்க, குப்புற, கிடுகிடென, இடிய, ஆட, ஊசலாட, வணக்கும், சிகிரத வலவ, உருட்டியருள் என்க.

(அடி - 1) மேடத்தை உள்ளிட்ட ராசியொடு - மேடத்தை முதலாகக் கொண்ட பன்னிரண்டு இராசிகளுடன். புசன் - அம்புசன் என்பதன் முதற்குறை. அம்புசன் – சந்திரன். புசன் இட்ட மிக்க உடுராசி - சந்திரனுக்கு விருப்பமிக்க நட்சத்திரக் கூட்டம். ரவி மண்டலம் - சூரிய மண்டலம்.

(அடி - 2,4) திரிகூடம் - ஒரு மலை ஆயிரம் குடுமி வடகோதண்ட சிகரம் - ஆயிரம் சிகரங்களையுடைய மேரு மலையின் உச்சி. கவந்தம் - உடற்குறை. சேடப் பனாடவி வணக்கு - ஆதிசேடனுடைய படத்தொகுதியை வணக்குகின்ற. சிகி – மயில்.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

கதறக் கருங்கடற் சேறுபட வேயுண்டு
ககனவட் டத்தெழுந்த
காளமே கக்குலமு மீளக் குமட்டிக்
கனைத்தெதி ரெடுப்படவுடலம்
உதறப் பதைத்தவுணர் நடுநடுங் கக்கிரண
மோராயி ரங்கள் வீசும்
உதையா தபக்கடவு ளுந்திங்கண் மண்டலத்
துடனுடுக் கணராசியும்
பதறத் தலைத்தலை கிடந்திருட் படலம்
பறித்தெறிந் தொளிபரப்பும்
பலவெறுக் கைரத்ன பந்தியென வான்மறுகு
படர்குப்பை சிற்றடியினால்
சிதறக் கிளைத்தெற்று சேவற்ப தாகையாய்
சிறுதே ருருட்டியருளே
தென்மயிலை மலைவாழ வந்தகரு ணாகரா
சிறுதே ருருட்டியருளே. 93

கதறக் கருங்கடல் சேறுபட வேஉண்டு
ககன வட்டத்து எழுந்த
காளமேகக் குலமு(ம்) மீளக்குமட்டிக்
கனைத்து எதிர் எடுப்ப உடலம்
உதறப் பதைத்து அவுணர் நடுநடுங்கக் கிரணம்
ஓராயிரங்கள் வீசும்
உதை யாதபக் கடவுளும்.திங்கள் மண்டலத்து
உடன் உடுக் கணராசியும்
பதறத் தலைத்தலை கிடந்து இருட்படலம்
பறித்து எறிந்து ஒளிபரப்பும்
பலவெறுக்கை ரத்ன பந்தியென வான் மறுகு
படர்குப்பை சிற்றடியினால்
சிதறக் கிளைத்து எற்று சேவல் புதாகையாய்
சிறுதேர் உருட்டி அருளே
தென்மயிலை மலைவாழ வந்த கருணாகரா
சிறுதேர் உருட்டி அருளே. 93

Digitization by Hindu-Heritage-Foundation-of-America (USA)

சேவற் கொடியின் ஆற்றல் உணர்த்துவதாம்.

எதிர் எடுப்ப, நடுநடுங்க, பதற, சிதற, ஏற்று சேவற்பதாகையாய், உருட்டியருள் என்க.

(அடி -1) கருங்கடல் கதற என்க. ககனம் - ஆகாயம். காள மேகக் குலம் -கரிய மேகக் கூட்டம். மீளக்குமட்டி - மீண்டு குமட்டுதலைச் செய்து.

(அடி -3,4) உதை யாதபக் கடவுளும் -உதய சூரியனும். வான் மறுகு - ஆகாயமாகிய தெருவில். குப்பை - தொகுதி. சேவலின் இயல்பிற் கேற்ப, "வான்மறுகு" என்றும், "படர் குப்பை" என்றும் உரைத்தார்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

துஞ்சோரி கண்விழித் தாடுமா யிரகோடி
துண்டுமுண் டக்கவந்தஞ்
சொரிசோரி யுண்டாட வண்டாடு கற்பகத்
தொடைசூடி வந்துவீரர்
நஞ்சோரி யிதுவென்ன நகையாட மிகையாட
நாகப்ப ணாமௌலியும்
நானிலமு நெறுநெறென நெளியக்ர வுஞ்சகிரி
நகரக் கராசலமுகன்
அஞ்சோரி விழிகக்க மிக்கவே தண்டமும்
அண்டமும் பொதிரெறிப்ப
அம்புரா சிகளுஞ் சுறுக்கொள முறுக்கெயிற்
றடுசூரன் ஆவியுண்டு
செஞ்சோரி கக்கியெதி ரேத்துமூ வடிவேல
சிறுதே ருருட்டியருளே
தென்மயிலை மலைவாழ வந்தகரு ணாகரா
சிறுதே ருருட்டியருளே. 94

துஞ்சு ஓரி கண்விழித்து ஆடும் ஆயிர(ம்)கோடி
துண்டு முண்டக் கவந்தம்
சொரிசோரி உண்டாட வண்டு ஆடுகற்பகத்
தொடைசூடி வந்துவீரர்
நஞ்சோரி இதுவென்ன நகையாட மிகையாட
நாகப்ப பணா மௌலியும்
நானிலமு நெறுநெறென நெளியக்ர வுஞ்சகிரி
நகரக் கராசலமுகன்
அஞ்சோரி விழிகக்க மிக்கவே தண்டமும்
அண்டமும் பொதிர் எறிப்ப
அம்புராசிகளும் சுறுக்கொள முறுக்கு எயிறு
அடுசூரன் ஆவிஉண்டு
செஞ்சோரி கக்கி எதிர் ஏத்து மூவடிவேல
சிறுதேர் உருட்டி அருளே
தென்மயிலை மலைவாழ வந்த கருணாகரா
சிறுதேர் உருட்டி அருளே. 94

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

வேலின் ஆற்றல் கூறப்படும்.

ஓரி உண்டாட, வீரர் நகையாட மிகையாட, நெளிய, நகர, கக்க, எறிப்ப, சுறுக்கொள, உண்டு, ஏத்துமூவடிவேல என்க.

(அடி - 1) துஞ்சு ஓரி - உறங்கும் நரி, துண்டம் முண்டம் கவந்தம் -உம்மைத் தொகை. வீரர் - போரில் இறந்து வீரசுவர்க்கம் புகுந்தவர்.

(அடி - 2) நகையாட மிகையாட - மகிழ்ச்சியடைய, பெருமிதங்கொள்ள.

(அடி - 3,4) பொதிர் - நடுக்கம், அம்புராசிகள் - கடல்கள், செஞ்சோரி கக்கி - பகைவரது செம்மையான இரத்தத்தைக் கக்கி. எதிர் ஏத்து - முருகன் திருமுன் வணங்குகின்ற.

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பாவேந்தர் பாவுக்கு நிலையாது குவலயம்
பற்றா தெனப்பரந்து
பாதாள மேற்றவும் வேதாள முற்றவும்
பருகவுங் குறைபடாது
மாவேந்தர் செங்குருதி யாறுபாய்ந் தோரேழு
மகரா லயஞ்சிவப்ப
வாசிதுண் டம்பட‌த் துண்டத்த தேர்வட்டம்
வட்டவா மையின்மிதப்ப
கோவேந்த ரசுரவன் குலவேந்தர் படுபிணக்
குன்றுகுன் றாகவீழக்
கூளியாடப் பத்திர காளியா டப்பசுங்
குடர்மாலை சூடும் வடிவேல்
தேவேந்த்ர லோகரட் சாபரண ரணதீர
சிறுதே ருருட்டியருளே
தென்மயிலை மலைவாழ வந்தகரு ணாகரா
சிறுதே ருருட்டியருளே. 95

பாவேந்தர் பாவுக்கு நிலையாது குவலயம்
பற்றாது எனப்பரந்து
பாதாளம் ஏற்றவும் வேதாளமுற்றவும்
பருகவும் குறைபடாது
மாவேந்தர் செங்குருதி ஆறுபாய்ந்து ஓர் ஏழு
மகராலயம் சிவப்ப
வாசி துண்டம்படத் துண்டத்த தேர்வட்டம்
வட்ட ஆமையின் மிதப்ப
கோவேந்தர் அசுர வன் குலவேந்தர் படுபிணக்
குன்று குன்றாக வீழக்
கூளி ஆடப் பத்திர காளி ஆடப் பசுங்
குடர்மாலை சூடும் வடிவேல்
தேவேந்திர லோகரட் சாபரண ரணதீர
சிறுதேர் உருட்டி அருளே
தென்மயிலை மலைவாழ வந்த கருணாகரா
சிறுதேர் உருட்டி அருளே. 95

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA)(USA)

(அடி - 1,4) பாவேந்தர் - கவியரசர், குவலயம் - உலகம். மகராலயம் - கடல், ஆமையின் - ஐந்தனுருபு ஒப்புபொருள்.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

சந்திரன் பல்வேறு தாரா கணங்கள் சூழ்
தரவிமா னத்துலாவச்
சவிபெற்ற ரவிபுரவி யேழ்பூட்டி யேநெடுந்
தமனியத் தேர்செலுத்த
முந்தரன் பொருவிடை யுகைப்பமா யோன்கருட
முரிவா கனநடத்த
முளரிப் பொகுட்டயன் புள்ளூர முப்பத்து
முக்கோடி *தேவரேத்த
இந்திரன் பொற்பமை யரம்பையர் மணிக்கவரி
இருபுடை யிரட்டவொற்றை
இளநிலா மதிவட்ட வெண்குடை கவிப்பவீ
ரிருமருப் புப்பொருப்புச்
சிந்துரங் கற்பகா டவிகடவி வலம்வரச்
சிறுதே ருருட்டியருளே
தென்மயிலை மலைவாழ வந்தகரு ணாகரா
சிறுதே ருருட்டியருளே. 96

சந்திரன் பல்வேறு தாரா கணங்கள் சூழ்
தரவிமானத்து உலாவச்
சவிபெற்ற ரவிபுரவி ஏழ் பூட்டியே நெடும்
தமனியத் தேர்செலுத்த
முந்தரன் பொருவிடை உகைப்ப மாயோன் கருட
முரி வாகன(ம்) நடத்த
முளரிப் பொகுட்டு அயன் புள்ஊர முப்பத்து
முக்கோடி *தேவர்ஏத்த
இந்திரன் பொற்பமை அரம்பையர் மணிக்கவரி
இருபுடை இரட்ட ஒற்றை
இளநிலா மதிவட்ட வெண்குடை கவிப்ப ஈரி
இரு மருப்புப் பொருப்புச்
சிந்துரம் கற்பகாடவி கடவி வலம் வரச்
சிறுதேர் உருட்டி அருளே
தென்மயிலை மலைவாழ வந்த கருணாகரா
சிறுதேர் உருட்டி அருளே. 96

Digitization by Hindu-Heritage-Foundation of America. Inc (USA)

முருக்கடவுள் சிறுதேருருட்டிப் பவனி வருதல் கூறுவதாம்.

உலாவு, செலுத்த, உகைப்ப, நடத்த, புள்ளூர, ஏத்த, இரட்ட, கவிப்ப, வலம்வர, சிறுதேர் உருட்டியருள் என்க.

(அடி - 1) தாராகணங்கள் சூழ்தர - நட்சத்திரக் கூட்டங்கள் சூழ. சவி - ஒளி. தமனியத் தேர் - பொற்றேர்.

(அடி - 2) அரன் - உருத்திரன். மூரிவாகனம் - வலிமையுடைய வாகனம். புள் -ஈண்டு அன்னப் பறவை.

(அடி - 3,4) இந்திரன் - இந்திரனுடைய.

ஈர் மருப்புப் பொருப்புச் சிந்துரம் - நான்கு தந்தங்களையுடைய மலைபோலும். ஐராவதம். "வாசனைத் தாங்கு மீரிருகோட்டியானை" (பிரபு) கற்பகாடவி கடவி - கற்பகச் சோலையை விட்டு நீங்கி.

* தேவர் வாழ்த்த - பி.ம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மையுலா மேகபந் தியுமிந்து ரேகையும்
வாரிச முங்காவியும்
வடியிட்ட அமுதமுங் குமுதமுந் தளவமும்
வாரமுழு மணியூசலுந்
துய்யபூ கமும்வேயும் யாழுமென் காந்தளுஞ்
சுகதுண்ட முஞ்சுரும்புந்
துணையரும் புடனறு பதனொழுகு கங்கைநிறை
துன்னதிரை சுரியன்மின்னுப்
பையரா வாழைஞெண் டிளவரால் துலைபந்து
பவளநிரை முத்தமாரம்
பஞ்சூட்டு மிலவமு மணந்தன்ன நடைவாய்த்துப்
பைம்பொனோ வியநிகர்க்கும்
தெய்வயா னைக்குமொரு வள்ளிக்கு மணவாள
சிறுதே ருருட்டியருளே
தென்மயிலை மலைவாழ வந்தகரு ணாகரா
சிறுதே ருருட்டியருளே. 97

மையுலா மேக பந்தியும் இந்து ரேகையும்
வாரிசமும் காவியும்
வடியிட்ட அமுதமும் குமுதமும் தளவமும்
வாரமுழுமணி ஊசலும்
துய்ய பூகமும் வேயும் யாழு(ம்) மென் காந்தளும்
சுக துண்டமும் சுரும்பும்
துணை அரும்புடன் அறு பதன் ஒழுகு கங்கைநிறை
துன்ன திரை சுரியன் மின்னுப்
பையரா வாழை ஞெண்டு இளவரால் துலைபந்து
பவளநிரை முத்தம் ஆரம்
பஞ்சூட்டும் இலவமும் அணந்தன்ன நடைவாய்த்துப்
பைம்பொன் ஓவியநிகர்க்கும்
தெய்வயானைக்கு ஒரு வள்ளிக்கு மணவாள
சிறுதேர் உருட்டி அருளே
தென்மயிலை மலைவாழ வந்த கருணாகரா
சிறுதேர் உருட்டி அருளே. 97

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA).

(அடி - 1,4) மேகம் மகளிர் கூந்தலுக்கும், சந்திரரேகை நெற்றிக்கும், தாமரை மலர் முகத்திற்கும், கருங்குவளை மலர் கண்ணிற்கும், வடித்தெடுத்த அமுதம் சொல்லிற்கும், செங்குமுதம் வாயினுக்கும், முல்லையரும்பு பல்லிற்கும், ஊசல் காதிற்கும், கமுகு கழுத்திற்கும், மூங்கில் தோளுக்கும், யாழ் முன்கைக்கும், செங்காந்தள் மலர் உள்ளங்கைக்கும், கிளியின் மூக்கு நகத்திற்கும், வண்டு நகிலின் காம்பிற்கும், இணைந்த தாமரை யரும்புகள் இணைநகில்களுக்கும், வண்டின் ஒழுங்கு வயிற்றுரோமத்திற்கும், நீரின் அலை வயிற்றின் மடிப்பிற்கும், நீர்ச்சுழி உந்திக்கும், மின்னல் இடைக்கும். பாம்பின்படம் அல்குலுக்கும், வாழை, தொடைக்கும், நண்டு முழங்காலிற்கும், வரால்மீன் கணைக்காலுக்கும், தராசின்தட்டு கரட்டிற்கும், பந்து குதிக்காலிற்கும், பவள வரிசை கால் விரல்களுக்கும், முத்து மாலை காலின் நகங்களுக்கும், செந்நிறந் தோய்ந்த இலவம் பஞ்சு செந்நிறத்த உள்ளங்காலின் மென்மைக்கும் உவமைகளாகக் கூறப்பெற்றுவன, அவற்றையெல்லாம் ஒருங்கே கொண்டாலொத்த அழகு வாய்ந்த தெய்வயானை, வள்ளிநாயகி ஆகிய இருவருக்கும் மணவாளன் என்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேறு

பலகலை யுந்தழை வெய்த விசும்பறை
பட்டார் காவாழப்
பகன்மண் டிலமொடு விண்டல மீதெழு
பனிமண்டில நிலவக்
கலக மிடும்பகை நிசிசரர் சாலக்
கடங்கடர் கிளையகலக்
கங்கா நதியுடன் இமய மடக்கொடி
கண்டு களித்தாட
அலகில் சராசரம் யாவையு மலிவுற
ஆரண நிலையெய்த
அறநா லெட்டுந் திசையெட் டினுமகம்
ஆயிர பலகோடி
உலகமெ லாம்வள ரச்சுடர் வேலன்
உருட்டுக சிறுதேரே
உயர்மயி லைக்கிரி வந்தருள் கந்தன்
உருட்டுக சிறுதேரே. 98

பலகலையும் தழை எயித விசும்பு அறை
பட்டார் கா வாழப்
பகன் மண்டிலமொடு விண்டதல மீது எழு
பனி மண்டில நிலவக்
கலக மிடும் பகை நிசிசரர் சாலக்
கடங்கடர் கிளைஅகலக்
கங்கா நதியுடன் இமய மடக்கொடி
கண்டு களித்துஆட
அலகில் சராசரம் யாவையு(ம்) மலிவுற
ஆரண நிலை எயித
அற நாலெட்டும் திசைஎட்டினு மகம்
ஆயிர பலகோடி
உலகம் எலாம் வளரச் சுடர் வேலன்
உருட்டுக சிறுதேரே
உயர் மயிலைக்கிரி வந்தருள் கந்தன்
உருட்டுக சிறுதேரே. 98

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA (USA)

விசும்பு அறைபட்டார் வாழ, கா வாழ என்க. அறைபட்டார் – தாழ்நிலையுற்ற.

(அடி – 1,4) தேவர்கள் . கா – கற்பச்சோலை. பகல் மண்டிலமொடு – சூரிய மண்டலத்துடன். பனிமண்டிலம் – சந்திரமண்டிலம். நிசி சரர் – அசுரர். கடங்கடர் – தீயநெறியிலொழுகும் ஒருவகைக் கூட்டாத்தார். ஆரணம் நிலையெய்த – வேதவொழுக்கம் நிலைத்திருக்க. அறம் நாலெட்டும் – முப்பத்திரண்டு அறங்களும். மகம் – வேள்வி.

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அபைய மெனத்தே வரைமு வரைவரை
ஆசை புரப்பவரை
அந்தணர் முத்தீ முற்றத் தாக்கி
அமைத் தருள் பிறவாக்ய
வபையை யிலத்தையை தந்து நிரந்தரம்
வந்தனை செயுமன்பர்
மதுரித் தமுதொழு கப்புரி கவிவரு
வரகவி நாவலர்தஞ்
சபைபுகு தப்புரி தண்ணளி செய்து
தடங்கண் பொழிகருணை
தனையும் அறியா துனையும் குறியாத்
தமியேன் முடிமீதும்
உபய பதத்துணை வைத்த கிருபாகர
உருட்டுக சிறுதேரே
உயர்மயி லைக்கிரி வந்தருள் கந்தன்
உருட்டுக சிறுதேரே. 99

அபையம் எனத் தேவரை மூவரை வரை
ஆசை புரப்பவரை
அந்தணர் முத்தீ முற்றத் தாக்கி
அமைத்துஅருள் பிறவாக்ய
வபையை இலத்தையை தந்து நிரந்தரம்
வந்தனை செயும் அன்பர்
மதுரித்து அமுது ஒழுகப் புரி கவிவரு
வரகவி நாவலர்தம்
சபை புகுதப்புரி தண்ணளி செய்து
தடங்கண் பொழிகருணை
தனையும் அறியாது உனையும் குறியாத்
தமியேன் முடிமீதும்
உபய பதத்துணை வைத்த கிருபாகர
உருட்டுக சிறுதேரே
உயர் மயிலைக் கிரி வந்துஅருள் கந்தன்
உருட்டுக சிறுதேரே. 99

மயிலம் முருகன் பிள்ளைத் தமிழ் முற்றிற்று.

ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகன் திருவடி வாழ்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அடி - 1) மூவரை - பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரை. ஆசை புரப்பவரை - திக்குபாலகரை, முத்தீ - ஆகவநீயம். தக்கிணாக்கினியம், காருக பத்தியம் என்னும் முத்தீயை. பிறவாக்ய - சிறந்த சொல்லையுடைய.

(அடி - 2) வபை, இலத்தை - தேவர்களைக் குறித்து வேள்வித் தீயிலீடும் பொருள்கள்.

(அடி - 3) தமியேன் - பற்றுக் கோடற்றவனாகிய எனது.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

துணை நூற்பட்டியல்

1. அகராதி நிகண்டு
2. அபிராமி அந்தாதி
3. அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்
4. கந்த புராணம்
5. கந்தர் கலிவெண்பா
6.கந்தர் அலங்காரம்
7. காந்திமதி அம்மை பிள்ளைத்தமிழ்
8. குறுந்தொகை
9. கூர்ம புராணம்
10.ஞானாமிர்தம்
11. சிலப்பதிகாரம்
12. சிவஞான சித்தியார்
13. சிவஞான பாலய தேசிகர் கலம்பகம்
14. சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத் தமிழ்
15. சீவக சிந்தாமணி
16. தக்கயாகப் பரணி
17. தணிகை புராணம்
18. தாயுமானவர் பாடல் திரட்டு
19. திருக்கருவை அந்தாதி
20. திருக்குறள்
21. திருச் செந்தில் நீரோட்டகயமக அந்தாதி
22. திரு முருகாற்றுப்படை
23. திருவாசகம்
24. திருவிளையாடற் புராணம்
25. நாலடியார்
26. பட்டினப்பாலை
27. பண்டார மும்மணிக் கோவை
28. பரிபாடல்
29. பிரபுலிங்க லீலை
30. புறநானூறு
31. பொருட்டொகை நிகண்டு
321. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்
33. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்
34. விநாயக – சந்திரன் அனட்டித்த பனுவல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

வரிசை எண்	செய்யுள் முதற் சொல்	செய்யுள் தொடர் எண்
1	அதிரும் அலைகடல்	59
2	அவைய மெனத்தே வரைமூ	99
3	அமா அனாமய அசுர	38
4	அருண நிறம் பெறு	40
5	அரும்பு கருணை மாரிசொரிற்	21
6	அலகில் புகழ் கொண்டு	30
7	அமுதமுது கண்கள் பிசைந்தே	29
8	அள்ளிருட் படலம்	7
9	ஆலிக்கும் அன்பினால் வள்ளிதன	43
10	இகலிடு கதமுறுகி	4
11	இந்திரன் அல்லை நீ	65
12	இந்திரன் கனி வந்து	31
13	இவ்வா றறிவ தோவல்ல	80
14	இளைத்த மருங்குல்	53
15	உத்திப் பன்மணி ராசிகள்	26
16	உந்தா யிரங்கிரண	70
17	உருவத் தனதட அமா	27
18	உள்ளம் களித்து	1
19	ஊரார் பெருவீ டிரைமுக்குங்கால்	89
20	ஊனாறு கப்புவாய் இப்பிமுத்	41
21	எங்களுயி ருக்குயி ரெனும்படி	19
22	எம்முடை வல்வினை	16
23	ஐங்கரவ னுக்கிளைய	20
24	ஒருசிற் பரனே தமிழ்	25
25	ஒரு பரம் பரனுக்கு	60
26	ஒன்று காதலுற்றவன் போல்	87
27	ஓகையால் இங்குவந்	62
28	கச்சுலா மிணைமுலை	42
29	கதலிக் கனியுஞ்	10
30	கதறக் கருங்கடற் சேறுபட	93
31	கரிசித்ர காயம்வல் லுளிகரடி	91

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

வரிசை எண்	செய்யுள் முதற் சொல்	செய்யுள் தொடர் எண்
32	கலையெ லாமுணர்	68
33	களரி புகுந்த அவுணர்குலங்	57
34	கனியை அமுதுட னளவி	48
35	கானாறு செவ்விதழ்க்	77
36	கும்போ தயுமா முனிமௌலி	82
37	குறமட மகளிரு தனதட	79
38	கூறுஞ் சதுர்மா மறையனைத்துங்	81
39	கொங்கவிழ் பசுந்துணர்	71
40	கொடிய கயமா முகனசுர	84
41	கொண்ட தொரு மறுவின்றி	67
42	கோடல் கமழ் சாரற் கொடிச்சியர்	44
43	சகமுஞ் சகமுன் றிவையுள்ள	51
44	சந்திரன் பல்வேறு தாரா	96
45	சீர் கொண்ட புகழ் மயிலை	3
46	சீர் மயிலோன் மேற்பிள்ளை	காப்பு
47	சுற்றுங் கடலுங் குலகிரியுஞ்	46
48	சுற்றும் பாவை யுலகமொரு	54
49	செய்யநிற முடைய சூட்	64
50	சோதி தருங்கன	17
51	தகுவர் வயிறெரி தவழ	49
52	தஞ்செென அடிதொழும்	37
53	தடம கோததி கதற	69
54	தண்டமிழ் விரகன்	36
55	தனபதி மகபதி பதியுட	78
56	துங்காமல் வரைபுரையும்	14
57	துஞ்சோரி கண்விழித் தாடுமா	94
58	தூவுந் துளிமழை பொழிதரு	28
59	தொக்கிட் டெதிர்ந்தமர்	90
60	நகைத்தார் முடிவா	56
61	நந்துபொரு கள மதில்	35
62	நயகுண விலாச	8
63	நறுமலர் குடுமி	18
64	நானாலு கலைதனக்	63
65	நிலனிடந் தொரு கொம்பினிற்	9

Digitization by Hindu-Heritage-Foundation-of-America(HHFA)(USA)

வரிசை எண்	செய்யுள் முதற் சொல்	செய்யுள் தொடர் எண்
66	நினைய வரிய ஒருகுடிலை	85
67	நீடுமா யிரகோடி	5
68	பஞ்சூட்டு பதுமம்	2
69	பலகலை யுந்தழை வெய்த	98
70	பழுத்த நேச அடியர் செழும்	47
71	பாடற் சுரும்பு குடைந்தாடும்	50
72	பார முனக்கே எனப் பணிந்து	83
73	பாவேந்தர் பாவுக்கு நிலையாது	95
74	பான்மார் பெய்துடல்	11
75	பூவலங் குடுமிசூழ் காந்தளங்	73
76	பொங்கிவழி யினிய பாற்	74
77	மணமல ரைங்கணை	39
78	மதுவுண் டறுகா லஞ்சிறைய	86
79	மந்தாகினி தன் மகவே	24
80	மந்தார நந்தா வனத்திற்கு	72
81	மறுவில் ஒருவாண்	55
82	மானகம் எட்டின்	15
83	மிசை தரு சுவைக்கரும்	75
84	மீதுலாம் அமரருக்	61
85	முனிவே படைத்தமர்	33
86	முன்னவன் கடலை பொரி	66
87	முன்னைச் சுருதி நான்கினுக்கு	88
88	மேடத்தை யுள்ளிட்ட	92
89	மையுலா மேகபந் தியிமிந்து	97
90	வரியளி யினாங் குழுமி	6
91	வழியும் பசுந்தேன்	45
92	வழியும் புனல்பெய் யொரு கலசம்	23
93	வள்ளவன் மௌலி மீதேறி	22
94	வானவரு மிந்திராணி	32
95	வானையுந் தொடநிலத்	76
96	விதுவும் உலகமு	58
97	வெண்டா மரைத்தவள	34
98	வேரி புதுப்பூ மலர்மாரி	52
99	வைக்கத் தகாதென்று	13
100	வையமீ ரெழுமொரு	12

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீமுருகன் துணை
திருக்கயிலாய பரம்பரை

மயிலம் பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்

மயிலம் & பொம்மையபாளையம்
திருமடம் வெளியீடுகள்

வெளியீடு எண்	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
20	இட்டலிங்க அபிடேக மாலை (மூலமும் - பழைய உரையும்)	1965
21	காசி வழித்துணை விளக்கம்	1965
22	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்நெஞ்சுவிடு தூது(மூலமும் - குறிப்புரையும்)	1966
23	நெடுங்கழி நெடில், குறுங்கழிநெடில் (மூலமும் - உரையும்)	1967
24	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ்(மூலமும்-குறிப்புரையும்	1968
25	கைத்தல மாலை, சிவநாம மகிமை(மூலமும் - உரையும்)	1969
26	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 1-ஆம் தொகுதி	1987
27	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 2-ஆம் தொகுதி	1988
28	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 3-ஆம் தொகுதி	1989
29	நிரஞ்சன மாலை(மூலமும் - உரையும்)	1990
30	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 4-ஆம் தொகுதி	1990

Digitization by Hindu-Heritage Foundation of America, HHFA(USA)

வெளியீடு எண்	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
31	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 5-ஆம் தொகுதி	1991
32	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 6-ஆம் தொகுதி	1992
33	ஸ்ரீ சிவஞான பாலயசுவாமிகள் தாலாட்டு (மூலமும் -குறிப்புரையும்)	1992
34	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 7-ஆம் தொகுதி	1993
35	அல்லமபிரபு தேவர் சடுத்தலம்	1993
36	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி மூலமும் உரையும்	1993
37	சோணசைலமாலை, நால்வர் நான்மணிமாலை நன்னெறி மூலம் மட்டும்	1993
38	இட்டலிங்கப் பெருமான் தோத்திரத் திரட்டு - மூலம் மட்டும்	1993
39	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 8-ஆம் தொகுதி	1994
40	மிசிர சடுத்தலம் (குறிப்புரை)	1994
41	சோணசைலமாலை (நூலாய்வு)	1994
42	நால்வர் நான்மணிமாலை ஓர் ஆய்வு	1994
43	திருச்செந்தில் நிரோட்டகயமக அந்தாதி, பழமலை அந்தாதி (மூலமும் - உரையும்)	1994
44	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 9-ஆம் தொகுதி	1995

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளியீடு எண்	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
45	ஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சுவிடுதூது — 2ஆம் பதிப்பு	1995
46	பெரியநாயகிம்மை கலித்துறை (மூலமும் – உரையும்)	1995
47	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 10-ஆம் தொகுதி	1996
48	பரம ரகசிய சடுத்தலம் (மூலமும் – பழைய உரையும்)	1996
49	ஸ்ரீ பிட்சாடன நவமணிமாலை (மூலமும் – உரையும்)	1996
50	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 11-ஆம் தொகுதி	1997
51	சிவ சடுத்தல சாரம், சிவயோக இலக்கணம் அக்கமாதேவி சிருட்டி	04.07.1997
52	திருவெங்கைக் கலம்பகம் (மூலமும் – உரையும்)	04.07.1997
53	திருவெங்கை உலா (மூலமும் உரையும)	1998
54	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் தனிப்பாடல்கள் (மூலமும் – உரையும்)	1998
55	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய தேசிகேந்திர சுவாமிகள் அட்டகம் போற்றிப் பஞ்சகம்.	1999
56	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பதிற்றுப் பத்தந்தாதி	1999
57	திருக்கூவப்புராணம் (மூலமும் – உரையும்)	1999
58	ஸ்ரீ மகான் பசவேசர் பொன்மொழிகள் 1 — 100 முதல் பகுதி	1999

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளியீடு எண்	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
59	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் சீரத்தி மாலைத்திரட்டு — (6 தலைப்புகள்	1999
60	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பனுவல் திரட்டு (மூலமும் - உரையும்) (2 தலைப்புகள்)	2000
61	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் மும்மணிக்கோவை	2000
62	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நூற்றிரட்டு மூலம (5 நூல்கள் தொகுப்பு)	2000
63	ஸ்ரீ மகான் பசவேசரின் பொன் மொழிகள் 101-200 இரண்டாம் பகுதி	2000
64	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத் தமிழ் (மூலமும் - உரையும்)(24.06.2000)	2000
65	ஒருவாறும் இன்றி பாடல் விளக்கம் (ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத் தமிழ் பாடல் விளக்கம்)	2001
66	கற்பனைக் களஞ்சியம் சிவப்பிர காசர் செந்தமிழ நூல்களில் திருக்குறள் ஆட்சி (25.05.2002)	2002
67	கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் நன்னெறி வெண்பா நாற்பது (மூலமும் - உரையும்)	2002
68	ஸ்ரீமகான் பசவேசான் பொன் மொழிகள் நான்காம் பகுதி	2003
69	குருகுகேசம் - 1	2003
70	நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்களில் கற்பனைகள் (30.06.2003)	2003
71	ஸ்ரீ மகான் பசவேசரின் பொன்மொழிகள் 3 ஆம் பகுதி	
72	சோணசைல மாலை (மூலமும் - உரையும்)	2003

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளியீடு எண்	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
73	நல்லாற்றூர் - துறைமங்கலம் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப் பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்கள் (இரண்டு தொகுதிகள்)	2004
74	குருகுகேசம் - 2	2005
75	நால்வர் நான்மணிமாலை மூலமும் உரையும்	2005
76	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு (17.09.2005)	2005
77	சோணசைல மாலை (மூலமும்-உரையும்) பகுதி 2	2005
78	இட்டலிங்க பெருமான் தோத்திரத்திட்டு (5 நூல்கள் தொகுப்பு)	2005
78A	பசவேசர் பொன்மொழிகள் - 5	2008
79	பசவேசர் பொன்மொழிகள் - 6	2009
80	பசவேசர் பொன்மொழிகள் - 7	2010
81	பரசிவப் பாமாலை (27.07.2011)	2011
82	பிரபுலிங்க லீலை (மூலமும் - உரையும்) (06.02.2012)	2012
83	சித்தரும் சிவஞானியும்	2013
84	மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்	2013

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9 788192 695518